விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 04 செவ்வாய்க்கிழமை (16.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 059

## நிபொன்மரு கப்பலை ஜனாதிபதி பார்வை



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்திற்கு வருகைதந்துள்ள நிபொன்மரு கப்பலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் பிற்பகல பார்வையிட்டார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி நேற்று ஜேர்மனி பயணம்

(கொழும்பு)


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு ஜேர்மனி நோக்கியும் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு ஒஸ்ரியா நோக்கியும் நேற்று முற்பகல் பயணமானார்.

ஜனாதிபதிகட்டார்விமான சேவை

23ஆம் பக்கம் பார்க்க....

# மின்சாரக் கதிரையைவிட அதிகமாக தண்டனையை அனுபவிக்கிறேன்

## மனக்கவலையில் மகிந்த



(கொழும்பு)

**மின்சார நாற்காலியிலிருந்து என்னை காப்பாற்றி விட்டதாக கூறுபவர்கள் அதைவிட அதிகளவான தண்டனையை எனக்குக் கொடுத்து விட்டனர் என தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தான் மிகுந்த மன அழுத்தத்துக்கு உள்ளாகியிருப்பதாக தெரிவித்துள்ளார்.**

அளுத்தகம மொரகல்ல கடற்கரையில் நேற்று உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஊடகவியலாளர்கள் சந்தித்த போதே அவர் இதனை கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சர்வதேச நாடுகளின் பிடியில் சிக்கி மின்சாரக் கதிரைக்கு கொண்டு செல்ல விடாமல் நாம் காப்பாற்றினோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்துத் தொடர்பில் அவரிடம் ஊடகங்கள் கேட்ட போது அதற்கு பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ,

23ஆம் பக்கம் பார்க்க....

## அடுத்த வாரம் நாமல் கைது செய்யப்படலாம்

### வாய்ப்புக்கள் உள்ளதாக மகிந்த கணிப்பு

(கொழும்பு)

அடுத்த வாரமளவில் தனது புதல்வர் நாமல் ராஜபக்ஷ கைது செய்யப்படும் வாய்ப்புகள் காணப்படுவதாக முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள மற்றும் மகிந்த அணியினர் நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில்

24ஆம் பக்கம் பார்க்க....

## மாவீரர்களை அங்கீகரியுங்கள்; நினைவுகூர உரிமை கொடுங்கள்

### பொது மக்கள் பலர் கருத்துப் பதிவு

(யாழ்ப்பாணம்)

எமது இனத்தின் விடிவுக்காக போராடி இன்னுயிரை தியாகம் செய்த மாவீரர்களை அங்கீகரித்து அவர்களின் நினைவிடங்களை புனித பூமியில் நிறுவி அவர்களை நினைவுகூரும் உரிமை எமக்கு சட்டப்படி உண்டு எனும் கருத்தை அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்குள் உள்வாங்க வேண்டும் என பொதுமக்கள் பலர் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான யோசனைகளை அறியும் குழுவிடம் முன்வைத்துள்ளனர்.

அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்

23ஆம் பக்கம் பார்க்க....

## 49 நபர்களே கருத்துப் பதிவு

(கொழும்பு)

அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான கருத்துக்களை பதிவு செய்வதற்கு யாழ் மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் அதிகளவில் ஆர்வம் காட்டவில்லை.

இதனால் நேற்றைய தினம் நடைபெற்ற மக்கள் கருத்தறியும் அமர்வில் 49 பிரதிநிதித்துவங்களே பதிவுசெய்யப்பட்டுள்ளன.

23ஆம் பக்கம் பார்க்க....

## ஒன்றிணைந்த வடக்கு - கிழக்கு அதிகார பகிர்வு மிக்க சமஷ்டி!

### கருத்தறியும் குழுவிடம் மக்கள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த தேசத்தில் அதிகாரப்பகிர்வுடன் கூடிய சமஷ்டியே தமிழ் மக்களுக்கு ஒரே அரசியல் தீர்வென புதிய அரசியலமைப்பு மாற்றம் தொடர்பில் கருத்தறியும் குழுவிடம் பொதுமக்களால வலியுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திற்கான மேற்படி அமர்வு நேற்றைய தினம் காலை ஒன்பது மணி தொடக்கம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து கூறிய பொதுமக்களினாலேயே மேற்படி

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மொழி வேண்டாம்; தமிழ்க் கடவுள் வேண்டும்!

### மகிந்தவின் கோமாளிக் கொள்கை – மனோ

(கொழும்பு)

தமிழ் மொழி வேண்டாம். ஆனால் திருட்டு தேங்காய் அடிக்க தமிழ் இந்து கடவுள்களான விஷ்ணுவும், காளியம்மனும் வேண்டும் என்பதுதான் மகிந்தவின் கோமாளி கொள்கை என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அரச கரும மொழி ஆணைக்குழுவினால் கொழும்பு பிரதேச செயலகத்தில் நேற்று காலை நடத்தப்

24ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச விசாரணையாளர்களை முதலில் மகிந்தவே அழைத்தார்

### அதை மறந்து கொக்கரிக்கக் கூடாது – எஸ்.பி



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே சர்வதேச விசாரணை ஆணையாளர்களை இலங்கைக்குள் முதன் முதலாக அழைத்து வந்தார் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## 9-வது தேசிய சாரணர் ஜம்போறியம் யாழில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரண சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள 9-வது தேசிய சாரண ஜம்போறியானது உள்நாட்டு, வெளிநாட்டு சாரணர்கள் 10 ஆயிரம் பேர்களின் பங்குபற்றலுடன் இம் மாதம் 20-26 ஆம் திகதி வரை யாழ்ப்பாண மாநகரசபை விளையாட்டரங்கு - யாழ்.மத்திய கல்லூரி விளையாட்டரங்கு உட்பட அதனை அண்டிய பிரதேசத்தில் நட

23ஆம் பக்கம் பார்க்க....

## பிக்கப் - மோ.சைக்கிள் விபத்து; முன்பள்ளி ஆசிரியை உயிரிழப்பு

### தப்பிச் சென்ற சாரதி மடக்கிப்பிடிப்பு


24-ம் பக்கம் பார்க்க



## முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

பதவி : பொது முகாமையாளர்
சம்பளக்குறி இல. : 101/8
சம்பள அளவுத்திட்டம் : 11200 - 140X10-150X10-14100
(66/2006இன்படி )

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) கூட்டுறவுப் பணியாளர் 09வது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் மூன்று(03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10வது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்ட பதவியொன்றில் ஆறு(06)வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

- சம்பள அளவுத்திட்டம் = 16020 - 200 X10-220X10-20220 (சுற்றுநிருபம் 13/2015 இன்படி)
- 02/2012 சுற்று நிருபப்படி இலாபம் ஏற்படின் வாழ்க்கைச் செலவுப்படி 5850/- உம் படிகள் நீங்கலாக சம்பளத்தின் 15% உம் வழங்கலாம்.

16020 X15% = 2403/=

**விண்ணப்ப முடிவுத்திகதி 29/02/2016**

விண்ணப்பங்கள் தலைவர் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு கடிதம் மூலமும் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம்.

தலைவர்
முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - முல்லைத்தீவு
தொடர்புகளுக்கு :- 021 2290008

(C-3755)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர்
## பரஞ்சோதி கண்ணன்

முகாமையாளர், வட பிராந்திய தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் ஒன்றியம்

தாயின் மடியில்
1974 - 12 - 26



ஆண்டவன் அடியில்
2016 - 02 - 14

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(3698)

ஆழ்ந்த துயரத்துடன்
உரிமையாளர். பணியாளர், நிர்வாகத்தினர்
வட பிராந்திய தனியார் பேருந்து உரிமையாளர்
சங்கங்களின் ஒன்றியம்

# மரண அறிவித்தல்கள்

## பரஞ்சோதி கண்ணன்



சந்தை மேற்கு ஒழுங்கை பருத்தித்துறையை நிரந்தர முகவரியாகவும் தேராவில் தெற்கு உடையார்கட்டையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பரஞ்சோதி கண்ணன் அவர்கள் 14.02.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி - சூரியகாந்தி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் திருஞானசம்பந்த வேலுப்பிள்ளையின் பெறாமகனும், சகுந்தலாதேவியின் அன்புக்கணவரும் திவாகரன், தயாகரன், சூரியவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகநாதன் - செல்வமலர் ஆகியோரின் மருமகனும், சிறினிவாசன், விஜிதா, கிருஸ்ணன் (பிரான்ஸ்), லட்சுமி (பிரான்ஸ்), சுகிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சுரேந்திரன், ரவிந்திரன், சசிகலா, மிகுந்தா, இந்துஜா ஆகியோரின் மச்சானும், யாழவன், கோமளா, நர்மதா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தேராவில் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(3609) தகவல் - குடும்பத்தினர்

## திருமதி தியாகராசா குணமணி



ஒடக்கரை வீதி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராசா குணமணி 14.02.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - சின்னம்மாவின் அன்பு மகளும் இளையதம்பி - தங்கச்சியம்மாவின் மருமகளும், பொன்னுச்சாமியின் அன்புச் சகோதரியும், தியாகராசாவின் அன்பு மனைவியும்,

செல்வராசா, தங்கராசா, இராசமணி, யோகராசா, கிருஸ்ணராசா (டென்மார்க்), செல்வராணி, யோகராணி, லோகநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், யறோசா, மனோகரி, செல்வராசா, புஸ்பமலர், விஜிதா (டென்மார்க்), லிங்கராசா, காலஞ்சென்ற தட்சணாமூர்த்தி, பாலசுப்பிரமணியம், (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும்,

சுகந்தி, சுகன்யா, சுகேதா, நித்தியசோபா, சியாமளகௌரி (லண்டன்) செல்வபாலன், தவச்செல்வன், மயூரன் (ஜேர்மனி), தமிழ்ச்செல்வி (லண்டன்), தமிழினி, சிவதர்சினி, பிரசாந்தன் (பிரான்ஸ்), பிரதீபன், யாதவன், யாழினி, யசிகரன், தீபிகா (டென்மார்க்), விஸ்னு (டென்மார்க்), வைஸ்னவி (டென்மார்க்), கோகிலா, நிருபரன், தாரகா, கோகுலன், செல்வி (பிரான்ஸ்), மதுரன் (பிரான்ஸ்), மாதுரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், துளசிகா, சுபகரி, அக்சயா, கரிஸ்,ரேனு, பிரவீன், கன்சிகா, மகதி (லண்டன்), அபினாஸ், அக்ஷயன், ராகுலன், துளக்சி, சந்தோஷ், வர்ஷா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17.02.2016 புதன்கிழமை 9.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தங்கராசா (பழம்)
077 220 8410

(C-3758)

தகவல் :-
குடும்பத்தினர்


## சிறப்பு வலய சிறைக்குள் அடைக்கப்பட்டுள்ள யோஷித

சி.எஸ்.என். தொலைக் காட்சி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட ஐவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைப்பகுதி விசேட வலய மாக்கப்பட்டுள்ளது.

யோஷித உட்பட ஐவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைப்பகுதியில் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய கைதிகள் அகற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் எச்.என்.சீ.தனசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த சிறைப்பகுதிக்கு அருகில் உள்ள சிறையில் இருந்து கையடக்கத்தொலைப்பேசி ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது. இதுவே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தநிலையில், பணச் சலவை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட யோஷித உள்ளிட்ட ஐவரும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)




## போக்குவரத்து குற்றம் சம்பந்தமான தீர்ப்புக்களில்

# யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் அநாவசியமாகத் தலையிடாது!

## நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு

(கொழும்பு)

**யாழ்.குடாநாட்டில் உள்ள நீதிபதிகளினால் பிறப்பிக்கப்படுகின்ற போக்குவரத்து குற்றம் சம்பந்தமான தீர்ப்புக்களில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் அநாவசியமாகத் தலையிடமாட்டாது என்று மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.**

போக்குவரத்து குற்றம் தொடர்பான வழக்கொன்றில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பாக யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மீளாய்வு மனு மீதான விசாரணையின் போது, அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பில் தலையிட முடியாது என அவர் மறுத்துள்ளார்.

அண்மைக் காலமாக யாழ்.குடாநாட்டில் இடம்பெற்று வருகின்ற போக்குவரத்துக் குற்றங்கள் சம்பந்தமாக விசேடமாக மது போதையில் வாகனம் ஓட்டியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள சாரதிகளின் சாரதி அனுமதிப்பத்திரங்களை குறிப்பிட்ட காலத்திற்கு இடை நிறுத்துமாறு இங்குள்ள நீதிமன்றங்களில் தீர்ப்பு வழங்கப்படுகின்றது.

இத்தகைய தீர்ப்புக்களை மீளாய்வு செய்து சாரதி அனுமதிப்பத்திரங்களை இடைநிறுத்துமாறு நீதவான் நீதிமன்றங்களினால் விடுக்கப்பட்ட கட்டளையை இரத்துச் செய்யுமாறு கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் மீளாய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்படுகின்றன.

மதுபோதையில் வாகனம் செலுத்தியபோது இடம்பெற்ற வாகனப் போக்குவரத்து விபத்து ஒன்றில் பாதசாரி ஒருவர் மரணம் அடைந்த சம்பவத்தில் சாரதி மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்காக அவருடைய சாரதி அனுமதிப் பத்திரத்தை நீதவான் நீதிமன்றம் 9 மாதங்களுக்குச் செல்லுபடியற்றது என இடைநிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டிருந்தது.

இதேபோன்று இன்னுமொரு வழக்கிலும் சாரதி அனுமதிப் பத்திரத்தை 9 மாதங்களுக்கு இடைநிறுத்தி வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த இரண்டு வழக்குகளிலும் வழங்கப்பட்ட நீதவான் நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை எதிர்த்து யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனுக்களில் சாரதி அனுமதிப்பத்திரத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையுத்தரவை நீக்குமாறு கோரப்பட்டிருந்தது.

இவற்றில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டு சம்பந்தப்பட்ட மீளாய்வு மனுமீதான விசாரணை கடந்தவெள்ளியன்று மேல் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட போது, வாகனப் போக்குவரத்துகுற்றச் செயல்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் நீதவான் நீதிமன்றங்கள் பிறப்பிக்கின்ற கட்டளைகளில் மேல் நீதிமன்றம் அநாவசியமாகத் தலையிட மாட்டாது என்று நீதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## சரத் பொன்சேகாவிற்கு மெகா பொலிஸ் அமைச்சு

பாராளுமன்ற உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எதிர்வரும் 23 ஆம் திகதி மெகா பொலிஸ் அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்யவிருப்பதாக தெரியவருகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான கே.ஏ.டீ.எஸ் குணவர்தனவின் மறைவினை அடுத்து அவரது பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா கடந்த 9 ஆம் திகதி செவ்வாயன்று பதவியேற்றிருந்தார்.

இந்நிலையில் மெகா பொலிஸ் அமைச்சு அவருக்கு வழங்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது. (இ)

## யோஷித ராஜபக்ஷவுக்கு ஆதரவான 4 கடற்படையினர் பணி இடைநிறுத்தம்

யோஷித ராஜபக்ஷவிற்கு ஆதரவு தெரிவித்த நான்கு கடற்படை வீரர்கள் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

பணச் சலவை செய்த குற்றச்சாட்டின் பேரில் யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட ஐந்து பேர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

றக்பி போட்டியொன்று நேற்று முன்தினம் நடைபெற்றபோது, கடற்படை அணியை பிரதிநிதித்துவம் செய்த நான்கு வீரர்கள் யோ007 என்ற பட்டியொன்றை கைகளில் காட்சிப்படுத்தியவாறு விளையாடியிருந்தனர்.

இவ்வாறு விளையாடிய நான்கு வீரர்களின் பணியும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் அக்ரம் அலவி தெரிவித்துள்ளார்.

இவர்கள் கடற்படை றக்பி குழாமிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறெனினும், நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் கடற்படை அணி இராணுவ அணியை வீழ்த்தி வெற்றியீட்டியிருந்தது.

யோஷித ராஜபக்ஷ இலங்கைக் கடற்படை றக்பி அணியின் தலைவராக கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## வெள்ளவத்தைப் பிரதேசத்தில் ஹெரோயினுடன் இருவர் கைது


வெள்ளவத்தைப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை ஹெரோயினுடன் இருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விடுதி ஒன்றில் வைத்தே இவர்களை பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் இவர்களிடமிருந்து 14 கிராம்100 மில்லிகிராம் ஹெரோயினை பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் போதை விற்பனை மூலம் பெறப்பட்டதாகக் கருதப்படும் ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 200 ரூபாவையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் வெள்ளவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதான பெண்ணும், 24 வயதான இளைஞர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சந்தேக நபர்களை நேற்று கல்கிஸை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## பழுதடைந்த பொலிஸ் ஜீப் மீட்பு



வடமராட்சியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் வளாகத்தில் இருந்து பழுதடைந்த நிலையில் ஜீப் வாகனம் ஒன்று நேற்றைய தினம் மீட்கப்பட்டுள்ளது.

இளவாலை பொலிஸ் நிலையம் என எழுதப்பட்டுள்ள இப் பொலிஸ் ஜீப் பழுதுபட்ட நிலையில் பாடசாலை வளாகத்திலுள்ள பற்றைக்குள் நிறுத்தப்பட்டிருந்தது. இலக்கத்தகடு நீக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட இப் ஜீப் வண்டி தொடர்பாக புலனாய்வுத்துறைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-60)

## கட்சியைச் சார்ந்தவர்களால் சு.க.ஒருபோதும் பிளவடையாது

### மொஹான் லால் தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாக பிளவடையும் என்பது எமது கட்சியை சார்ந்தவர்களால் இல்லை என உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரோ தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவிளாலர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தங்களுக்கென ஒரு கட்சியில்லாமல் வேறு கட்சியிலிருந்து வந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட உதய கம்மன்பில, வாசுதேவ நாநயக்கார மற்றும் விமல் போன்றோரே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாக பிளவடையச் செய்வதற்கு முயற்சிப்பதாக அவர் கூறியுள்ளார்.

கடந்த காலத்தில் இனவாதத்தை தூண்டும்படியான வேலைகளை செய்ததனாலேயே மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியடைந்தார். அதேபோன்று இப்போதும் சிலர் இணைந்துகொண்டு இனவாதத்தை தூண்டி அரசியல் இலாபத்தை பெற முயற்சிப்பதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரோ மேலும் தெரிவித்தார். (இ)

# சுப்பர் கிங்ஸ் நினைவுகள் மனதிலிருந்து நீங்கவில்லை

## தோனி உருக்கம்




சென்னை சுப்பர் கிங்ஸ் நினைவுகளை மறந்துவிட்டேன் என்று கூறினால் நான் பொய் சொல்வதாக அர்த்தம் என்று தோனி உருக்கமாக கூறியுள்ளார்.

கடந்த 2013-ம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியின்போது எழுந்த சூதாட்டப்புகாரைத்தொடர்ந்து, சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் ஆகிய இரு அணிகளுக்கு ஐ.பி.எல். போட்டியில் 2 ஆண்டுகள் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து புதிதாக புனே, ராஜ்கோட் ஆகிய அணிகள் சேர்க்கப்பட்டன. புனே, ராஜ்கோட் அணிகள் தங்களுக்கான வீரர்களை ஏலம் மூலமாக தேர்வு செய்தன. இதில் தோனி, கெவின் பீட்டர்சன், அஸ்வின், ரஹானே போன்ற வீரர்கள் புனே அணிக்கு தேர்வு செய்யப்பட்டார்கள்.

புனே அணிக்கு ரைசிங் புனே சுப்பர்ஜியண்ட்ஸ் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. அணியின் கப்டனாக தோனியும் பயிற்சியாளராக ஸ்டீபன் பிளெமிங்கும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில் ரைசிங் புனே சுப்பர்ஜியண்ட்ஸ் அணியின் உடை அறிமுகம் செய்யப்பட்டது. இந்த விழாவில் பேசிய தோனி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தொடர்பான நினைவுகளை மறந்துவிட்டு அடுத்த கட்டத்திற்கு நகர்ந்து விட்டேன் என்று கூறினால் நான் பொய் சொல்வதாக அர்த்தம். மனிதர்களாக இருப்பதின் சிறப்பு இது தான். எட்டு ஆண்டுகளில் உணர்வு பூர்வமான இணைப்பு ஏற்பட்டுவிடும்.

எட்டு ஆண்டுகள் ஒரு அணிக்கு தலைமை தாங்கி விளையாடிவிட்டு, மற்றொரு அணிக்காக விளையாடுவது வித்தியாசமான உணர்வாக உள்ளது. சி.எஸ்.கே. அணியும், அதன் ரசிகர்களும் காட்டிய அன்புக்கும், அரவணைப்புக்கும் உரிய மரியாதை செலுத்தாமல், திடீரென புதிய அணிக்காக விளையாடுவது மிகவும் உற்சாகம் அளிக்கிறது என்று கூறுவது மிகவும் தவறானது. அரசியல் ரீதியாக நான் சொல்வது சரியாக இருக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கலாம், ஆனால் நான் அப்படி பேசுபவன் இல்லை.

ஆனால் ஒரு தொழில்முறை விளையாட்டு வீரராக என்னை தேர்வு செய்த புனே அணிக்கு நன்றி கூற விரும்புகிறேன். சென்னை அணியில் என்னுடன் விளையாடிய வீரர்களின் நினைவு கண்டிப்பாக வரும். எட்டு ஆண்டுகளாக இணைந்து விளையாடினோம். அணியின் முக்கிய வீரர்கள் மாறவில்லை. அது தான் அணியின் பலமாகவும் இருந்தது.

பயிற்சியாளராக ஸ்டீபன் பிளெமிங் இருப்பது என் வேலையை குறைக்கிறது. எங்கள் இருவருக்கும் நீண்ட நாள் உறவு உள்ளது. அவர் ஒரு சிறந்த பயிற்சியாளர். அணியை நிர்வகிக்கும் அவரது திறமை அபாரமானது.

அவரிடம் எனக்கு பிடித்த விஷயம் அவரும் என்னை போன்று அமைதியானவர்.

இந்த முறையும் நாங்கள் இணைந்து சிறப்பாக செயல்படுவோம என்று நம்புகிறேன் என்று கூறியுள்ளார். (க)

**தொண்டர்கள் தேவை**

**வாரத்தில் 4 மணித்தியாலங்கள் மற்றவர்களுக்காக அர்ப்பணிக்க தயாரா?**
சம்பளம் எதுவுமில்லை.
பயிற்சி வழங்கப்படும்.
9.00- 1.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்
(வியாழன் தவிர்ந்த ஏனைய நாட்களில்)
**021 222 8117**
**077 900 8776**
(C-3756)

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலை ஆசிரியர் செல்வி சு.பகீரதி அவர்களின் தாயார்
**அமரர் திருமதி அமிர்தகுணவல்லி சுப்பிரமணியக்குருக்கள்**




அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
(3606)

பாடசாலைச் சமூகம்
யா/ கனகரத்தினம் ம.ம.வி.

## தொடர்ச்சியாக 40ஆவது வெற்றி

# சானியா - ஹிங்கிஸ் ஜோடி சம்பியனாகி புதிய சாதனை



செயின்ட் பீட்டர்ஸ்பேர்க் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா - சுவிட்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

ரஷ்யாவின் செயிண்ட் பீட்டர்ஸ்பேர்க்கில் மகளிர் டென்னிஸ் டிராபி போட்டி நடைபெற்றது.

இதில் நேற்று முன்தினம் நடந்த மகளிர் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் உலகின் நம்பர் வன் ஜோடியான சானியா மிர்சா- மார்டினா ஹிங்கிஸ், ரஷ்யாவின் விரா டஷிவினா - செக்குடியரசின் பார்போரா கிரெஜி கோவா ஜோடியை எதிர்கொண்டது.

இதில் சானியா- ஹிங்கிஸ் ஜோடி 6:3, 6:1 என்ற நேர் செட் கணக்கில் 56 நிமிடங்களில் விரா டஷிவினா- பார்போரா கிரெஜி கோவா ஜோடியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

சானியா - ஹிங்கிஸ் கூட்டணி தொடர்ச்சியாக பெற்ற 40ஆவது வெற்றி இதுவாகும்.

அத்துடன் இது இவர்கள் ஜோடியாக கைப்பற்றிய 13ஆவது பட்டமாகும். (க)

# நியூஸிலாந்தை வீழ்த்தி ஆஸி இன்னிங்ஸ் வெற்றி

நியூசிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில், அவுஸ்திரேலிய அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 52 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

வெலிங்டனில் இடம்பெற்ற இப்போட்டியில், 4 விக்கெட்டுகளை இழந்து 178 ஓட்டங்களுடன் நேற்றைய நான்காம் நாளை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி, 327 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தது.

8 விக்கெட்டுகளை இழந்து 242 ஓட்டங்களுடன் காணப்பட்ட அவ்வணி, இறுதிநேரத் துடுப்பாட்ட வீரர்களால், 300 ஓட்டங்களைப் பெற முடிந்தது.

துடுப்பாட்டத்தில் டொம் லேதம் 63, ஹென்றி நிக்கலஸ் 59, டிம் சௌதி 48, மார்ட்டின் கப்டில் 45, மார்க் கிறெய்க் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் நேதன் லயன் 4, மிற்சல் மார்ஷ் 3, ஜொஷ் ஹேஸல்வூட் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியு, ஸிலாந்து அணி 183 ஓட்டங்களுக்கு



ஆட்டமிழக்க, அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸில், அடம் வோஜஸின் இரட்டைச்சதம், உஸ்மான் கவாஜாவின் சதம் ஆகியவற்றின் உதவியுடன் 562 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இப்போட்டியின் நாயகனாக அடம் வோஜஸ் தெரிவானார். இத்தொடரை 2:0 அல்லது 1:0 என்ற கணக்கில் கைப்பற்றினால், டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்தைக் கைப்பற்ற முடியுமென்ற நிலையில் அவுஸ்திரேலிய அணி, இத்தொடரில் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# டெரன் பிராவோ விலகல்

இந்தியாவில் இடம்பெறவுள்ள உலக இருபது-20 தொடரிலிருந்து, மேற்கிந்தியத்தீவுகள் அணியின் துடுப்பாட்ட வீரரான டெரன் பிராவோ விலகியுள்ளார்.

எனினும், எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று, இரண்டாம் நிலை அணியொன்றை அனுப்பும் நிலையை மேற்கிந்தியத்தீவுகள் அணி எதிர்கொள்ளவில்லை.

சம்பள விவகாரம் தொடர்பாக ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து, அறிவிக்கப்பட்ட 15 பேர் கொண்ட குழாமிலிருந்து முக்கிய வீரர்கள் விலகலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதில் 12 பேர், அத் தொடரில



பங்குபற்றுவதற்குச் சம்மதித்துள்ளனர்.

சுனில் நரைன், தனது பந்து வீச்சுத் தொடர்பில் இன்னமும் பயிற்சி தேவைப்படும் காரணத்தாலும், கெரான் பொலார்ட், உடற்தகுதிக் காரணங்களுக்காகவும் விலகினர்.

டெரன் பிராவோ, டெஸ்ட் போட்டிகளுக்காகத் தன்னைத் தயார்படுத்தும் நோக்கில், உள்ளூர் நான்கு-நாள் போட்டிகளில் பங்குபற்றும் விதமாக, உலக இருபதுக்கு-20 தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

உலகக் கிண்ணமொன்றில் மேற்கிந்தியத்தீவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கிடைத்த வாய்ப்புக்காக மிகவும் நன்றியுடைய வராகவும் கௌரவமானதாகவும் உணர்வதாகத் தெரிவித்த அவர், டெஸ்ட் போட்டிகளில் கவனஞ் செலுத்த விரும்புவதாகவும் தெரிவித்தார். (க)

# பருத்தித்துறை நகரில் சுகாதாரச் சீர்கேடு







(கரணவாய்)

பருத்தித்துறை நகரப்பகுதி சுகாதாரச் சீர்கேடான நகரமாக மாறி வருவதாகவும் இதனை நகர சபை கவனிக்குமா? என பொது மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

நகரப் பகுதியில் கொட்டப்படும் இக்கழிவுப் பொருட்கள் பருத்தித்துறை நகர சபையினால் உரிய வேளையில் அகற்றப்படுவதில்லை. இதன் காரணமாக நகரப் பகுதி எங்கும் குப்பைகள் தேங்கிக் காணப்படுகின்றன. குப்பைகளை கொட்டுவோரும் இதனை கவனத்தில் கொள்வதில்லை.

சந்தைக் கழிவுகள், உணவு நிலையங்களின் கழிவுகள் மற்றும் திண்மக் கழிவுப் பொருட்கள் என்பன காணப்படுகின்றன.

இக் கழிவுப்பொருட்கள் மத்தியில் மாடுகள், நாய்கள் என்பன குவிந்து காணப்படுவதாகவும் அவை அக்கழிவுப் பொருட்களை பரப்புவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைவிட சந்தைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மலசல கூடங்களும் துர்நாற்றமான நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மலசலகூடங்கள் பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் நகரப் பகுதியில் குடிநீர் வசதி இல்லை. குடிநீர் விற்பனையில் மட்டும் தான் கிடைக்கப்படுவதாகவும் இது தமக்கு பாரிய பிரச்சினை என நகர வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதனைவிட நகரப்பகுதிக் கழிவுகள் வெளியேறும் வாய்க்கால்கள் நீண்ட காலமாக துப்புரவு செய்யப்படவில்லை.

இதனால் கழிவுகள் சீரான முறையில் வெளியேற்றப்படாத நிலையில் காணப்படுகின்றது.

அத்துடன் பருத்தித்துறை பொலிஸ் நிலையம், நீதிமன்றம் என்பவற்றுக்கு முன்னால் காணப்படும் கழிவு நீர் வாய்க்காலும் அசுத்தமான, துர்நாற்றம் வீசக் கூடிய நிலையில் காணப்படுகின்றது.

எனவே சுகாதாரச் சீர்கேடு காணப்படுகின்ற பருத்தித்துறை நகரப் பகுதியினை பருத்தித்துறை நகர சபை கவனிக்குமா? என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (இ-5-60)






## மரண அறிவித்தல்

### திருமதி.பகவதி தாமோதரம்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியை/ இராமநாதன் கல்லூரி,மருதனார்மடம்)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும்,தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதி தாமோதரம்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியை இராமநாதன் கல்லூரி) அவர்கள் 14.02.2016 ஞாயிற்றுக் கிழமையன்று இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ் சென்றவர்களான நீலகண்டர், சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், திருவாளர். இராமலிங்கம் தாமோதரம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், விக்கினராஜா, இந்துமதி, நீலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சனாதனன், சனந்தனன், சனகனின் அன்புத் தாயாரும் சந்திரிக்கா, சுகன்யா, வாசுகி ஆகியோரின் அன்பு மாமியாரும், அரன், அயன், அனிக்கா, அபிரா, செயோனின் அன்புப் பாட்டியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.02.2016 இன்று 3மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைகளுக்காக அன்னாரது பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

அவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்: திரு.தாமோதரம்பிள்ளை குடும்பம்,
"திருவாசகம்" சுதுமலை வீதி, தாவடி, கொக்குவில்.
தொ.பே.இல. 021 492 3545 (3605)

## அவன்கார்ட் நிறுவனத்திற்கு நிவாரணம் வழங்கியது அரசு

அவன்கார்ட் நிறுவனம் நான்கு மாதங்களுக்கு முன்னர் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய 25 கோடி ரூபா கட்டணத்தை அரசாங்கம் இரத்துச் செய்துள்ளது.

அவன்கார்ட் நிறுவனம் ரக்னா லங்கா நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகையையே அரசாங்கம் இவ்வாறு இரத்துச் செய்துள்ளது.

அவன்கார்ட் நிறுவனம் தொடர்ந்தும் நஷ்டத்தை எதிர்நோக்கி வருவதால், அந்த நிறுவனம் செலுத்த வேண்டிய கட்டணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

## விருது வழங்கல்



(யாழ்ப்பாணம்)

உடுவில் தெற்கு சத்தியபுரத்தைச் சேர்ந்த சிதம்பரம் அரியரத்தினத்திற்கு கொழும்பு தேசிய சமாதான சங்கத்தின் ஊடாக கீர்த்தி ஸ்ரீ தேசபக்த வைத்திய பண்டிதர் என்ற விருது வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருது கடந்த 13 ஆம் திகதி தேசிய சமாதான சங்கத் தலைவர் கலாநிதி நன் பண்டார ஜயவர்த்தனவினால் வழங்கப்பட்டது. (இ-5)

## இராசி பலன்

16.02.2016
(மாசி 04, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு,
நவமி பின்னிரவு 2.39 மணிவரை
கார்த்திகை காலை 6.54 மணிவரை
ரோகினி பின்னிரவு 5.47 மணிவரை
சுபநேரம் 11.03-12.33 மணிவரை
இராகுகாலம் 3.33-5.03 மணிவரை
கடையிற் சுவாமியார் குருபூசை
சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| சூரி கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் விசாகம் | | |
| புத சுக் | | | குரு ராகு |
| | சனி | செவ் | |

**மேடம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புதிய தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியத்தில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**மிதுனம்:** புதிய நட்பால் பொருள் விரயம் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சயன சுகக் குறைவான நாள்.

**கடகம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, செய் தொழில் மேன்மையுண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**சிம்மம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், செய் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வு நீங்கும், ஆதாயம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும்.

**துலாம்:** சேமிப்புகள் கரையக்கூடிய வாய்ப்புண்டு, மனதில் கவலைகள் தோன்றி மறையும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, கௌரவக் குறைவான நாள்.

**விருச்சிகம்:** பிறரிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள் மீண்டும் உங்களிடம் வந்து சேரலாம், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு:** வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும், தேகாரோக்கியம் சீராகும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான நாள்.

**மகரம்:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**கும்பம்:** மனதில் இனம் புரியாத கற்பனைகள் தோன்றி மறையும், வாகன சுகமுண்டு, சுப காரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மீனம்:** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

# புதிய அரசியலமைப்பு குறித்து கருத்தறியும் அமர்வு ஆரம்பம்

## யாழில் இன்றும் இடம்பெறும்







புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான பொதுமக்களின் யோசனைகளைஅறியும் குழுவின் முதலாம் நாள் அமர்வு நேற்று யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெற்றது. லால் விஜேநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில் எஸ். தவராசா, எஸ். விஜேசந்திரன்.என். செல்வகுமாரன், குமுது குசும் குமார, ஹரினிஅமரசூரிய,உபிள் அபேரத்ன, சுனில் ஜெயரட்ன உள்ளிட்ட 8 பேர் கொண்ட குழுவினர் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பில் மக்களிடமிருந்து வாய்மொழி மற்றும் எழுத்து மூலச் சமர்ப்பணங்களை பெற்றுக் கொண்டனர். இந்த அமர்வில் பல கட்சிகளின் உறுப்பினர்கள், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை தெரிவித்திருந்தனர். (படங்கள்:-பொ.சோபிகா)

### அனைத்துப் பாடங்களிலும் மாணவர்கள் சித்தி

## ஆயிரம் வினாவிடை செயற்றிட்டம் வலிகாமம் கல்வி வலயத்தில் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைவதற்காக ஆயிரம் வினாவிடை செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் கல்விவலய பணிப்பாளர் எஸ். சந்திர ராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் ஐந்து சாதாரண தரம் மற்றும் உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் சித்தியடைய வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு இச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் புலமைப்பரிசில் பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்கள் குறைந்த பட்சம் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொள்வதற்காக அவர்களுக்கு மாதிரி வினாவிடைப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் தரம் ஒன்றில் இருந்து 5 வரையான வகுப்புக்களுக்கு தலா ஒவ்வொரு ஆசிரிய ஆலோசகர்களை நியமித்து அவர்களின் கண்காணிப்பில் இச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் பரீட்சையின் போது 9 பாடங்களிலும் குறைந்தது சாதாரண சித்தி பெறுவதற்கு 9-S செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதில் 9 பாடங்களிலும் ஆயிரம் வினாவிடைகளை தயாரித்து நூல் வடிவில் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

மேலும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கல்வி கற்கும் மாணவர்கள் மூன்று பாடங்களிலும் சாதாரண சித்திபெறுவதற்கு 3-S செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டு 3 பாடங்களிலும் ஆயிரம் வினா விடை தயாரிக்கப்பட்டு நூல் வடிவில் மாணவர்களுக்கு வழங்கப் படவுள்ளன.

மேலும் ஆங்கில பாடத்தில் சித்தி பெறுவதற்காக G.E.-S எனும் செயற்றிட்டத்தின் கீழ் வினாவிடைகள் தயாரிக்கப்பட்டும் நவீன முறையில் இறுவெட்டுக்களின் மூலம். செயன்முறை பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இச் செயற்றிட்டத்துக்காக உதவிக் கல்விப் பணிப்பாளர்,அதிபர்கள், ஆசிரியர்கள் ,ஆசிரிய ஆலோசகர்களுடனான கலந்துரையாடல்கள் அனைத்தும் நிறைவடைந்துள்ள நிலையில் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டு அக்குழுவின் ஊடாக வினாவிடைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் மார்ச் மாதம் அளவில் வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




# பார்த்தீனிய ஒழிப்புக்கு ஒத்துழைக்காத பொதுமக்களின் மீது கடும் நடவடிக்கை

## ஒரு இலட்சம் அபராதம்; 6 மாதம் சிறைவாசம்

(நல்லூர்)

சூழலுக்கு கேடு விளைவிக்கும் பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கையில் ஒத்துழைக்காத பொதுமக்களுக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும் அல்லது 6 மாத கால சிறைத்தண்டனைக்கு ஆளாக நேரிடலாம் என மாகாண விவசாய பிரதிப் பணிப்பாளர் சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார். திண்மக் கழிவுகள், பார்த்தீனியம் என்பவற்றினை கட்டுப்படுத்தல் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று நல்லூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்ட மாகாண விவசாய பிரதிப் பணிப்பாளர் அங்கு மேலும் உரையாற்றும் போது,

பார்த்தீனியம் போன்ற நச்சுக் களையை அழிப்பதற்கு தனியாக விவசாய திணைக்களத்திற்கு மட்டும்தான் கடமை உண்டு என எந்தவொரு பொதுமகனும் நினைக்கக் கூடாது. அவ்வாறு எண்ணுவது தவறானது.

பார்த்தீனியத்தை அழிப்பதில் பொதுமக்கள் அக்கறை காட்டுவதில்லை. பொதுமக்கள் இவ்விடயத்தில் அலட்சியமாக இருந்து விடுகிறார்கள்.



ஒவ்வொரு பொதுமகனும் தமது காணிகளில் உள்ள பார்த்தீனியங்களை ஒழிப்பதற்கு விவசாய திணைக்களங்களுடன் ஒன்றுபட வேண்டும். இதனை மீறுவோர் மீது அரசாங்கம் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும். அல்லது 6 மாத கால சிறைத் தண்டனை அனுபவிக்கநேரிடலாம்எனமேலும் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபையின் செயலாளர்திருமதிரி.அன்னலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பிரதேசசபை உறுப்பினர்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றுச் சூழல் உத்தியோகத்தர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கே.சிவசோதி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். பிரேம்குமார் மற்றும் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட 49 சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பார்த்தீனியம் தொடர்பிலானதமது கருத்துகளை வழங்கியிருந்தனர். (இ-5-81)

### மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் அ.ஸ்ரீபன் றெக்ஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை சுங்கத் திணைக்கள மேலதிக பணிப்பாளர்நாயகம் அ.குலேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்கு முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் க.சபாநாயகம், பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளர் பா.ரஞ்சித்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ விருந்தினராக திருமதி கிறேஸ் பெரேரா கலந்துகொள்ளவுள்ளார். இ-5

# முப்பது வருடங்களுக்கு மேலாக எந்தவொரு புனரமைப்புமின்றி வீதி



பருத்தித்துறை தும்பளை தெற்கு கண்ணகை அம்மன் கோவிலுக்கு செல்லும் வீதியானது 30 வடங்களுக்கு மேலாக எந்தவொரு புனரமைப்புமின்றி காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கற்கோவளம், வராத்துப்பளை, சந்தாதோட்டம், புனித நகர், தும்பளை ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதியாக இவ் வீதி காணப்படுகிறது.

இவ் வீதி தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் கண்டு கொள்வதில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அங்குள்ள பொது மக்களால் உரிய அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மழைக்காலம் வந்து விட்டால் இவ் வீதி சேறும் சகதியுமாக காட்சியளிக்கும்.


எனவே கவனிப்பாரின்றிய நிலையில் காணப்படுகின்ற இவ் வீதி தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொள்ளுமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-19)

# புலம்பெயர்ந்துள்ள மக்களும் வாக்களிக்க வழி ஏற்படுத்தவும்

## அரசியலமைப்பு குழுவிற்கு யாழில் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

**நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக புலம்பெயர்ந்துள்ள மக்களும் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என புதிய அரசியல் அமைப்பு மாற்றம் தொடர்பான கருத்துக்களை பதிவு செய்யும் குழுவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.**





(படங்கள்:- உ. சாளின்)

மேற்படி குழுவின் யாழ். மாவட்டத்திற்கான அமர்வு நேற்றைய தினம் காலை ஒன்பது மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது. இந்த அமர்வில் கலந்து கொண்டு பொது மக்கள் ஆலோசனை வழங்கும் போதே மேற்கண்ட கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது.

தற்போதுள்ள தேர்தல் முறைமை மாற்றப்பட்டு விகிதாசார மற்றும் தொகுதி வாரியான தேர்தல் முறைமைகள் ஒரே தடவையில் அமுல்படுத்தப்பட வேண்டும். இரண்டு தேர்தல் முறைமைகளுக்கான வாக்குச் சீட்டுக்களும் நடைமுறைக்கு கொண்டு வரல் வேண்டும். இதனை அமுல்படுத்தும் வகையில் புதிய அரசியல் அமைப்பில் மாற்றம் கொணடு வரப்படல் வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபை தேர்தல் என அனைத்து விதமான தேர்தல்களும் இந்த முறையில் நடைபெற வேண்டும். நாட்டின் பிரதமர் ஜனாதிபதியால் தெரிவு செய்யப்படாமல் மக்கள் மூலமே தெரிவு செய்யப்படல்வேண்டும்

நாட்டில் கடந்த காலத்தில் யுத்தம் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ளனர். இவர்களில் வடக்கு, கிழக்கினை சேர்ந்த தமிழ் இளைஞர்களே அதிகம் உள்ளனர். ஆகையால் இவர்கள் வாக்களிப்பதன் மூலம் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

ஆகவே புலம் பெயர்ந்துள்ள மக்களுக்கு எமது நாட்டில் எதிர்காலத்தை தீர்மானிக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படல்வேண்டும். மேலும் பல்லின தேர்தல் முறைமை, இரட்டை தேர்தல் முறைமை நீக்கப்படல் வேண்டும். பல்லினங்கள் பிரதிநிதித்துவம் கொண்ட பல்லின அமைச்சரவை வேண்டும்.

இந்த அமைச்சரவை கூட்டுப்பொறுப்புடன் இனப் பாகுபாடின்றி செயற்பட வேண்டும். பெயரளவில் மட்டுமே ஜனாதிபதி முறைமை இருக்க வேண்டும். இந்தியாவில் ஜனாதிபதியை தெரிவு செய்வது போல் பாராளுமன்றிலும் அமைச்சரவையிலும் தேர்வு செய்யப்படல்வேண்டும்

ஜனாதிபதி தேர்தல் முறைமையில் தெரிவு செய்யப் பட்டாலும் அவரும் பெயரளவிலேயே இருக்க வேண்டும். நீதிச்சேவை ஆணைக் குழு, அரச சேவை ஆணைக்குழு போன்றன உட்பட வெகுசிலவே ஜனாதிபதிக்கான அதிகாரங்களாக இருக்க வேண்டும்.

தேர்தல் முறைமையானது சிறுபான்மை இனங்களை பாதிக்காத வகையில், அமைவதோடு அவர்கள் தமது உரிமையை இந்த தேர்தல்கள் மூலம் பெற்றுக் கொள்வதாக இருக்க வேண்டுமே தவிர, அவற்றின் மூலம் தமது உரிமைகளை பறிகொடுக்கும் நிலைக்கு தள்ளப்படக்கூடாது தலைமைகளை தெரிவு செய்வதில் சிறுபான்மை மக்கள் உரித்துடையவர்களாக இருக்க வேண்டும் என்ற ஆலோசனைகள் வழங்கப்பட்டன. (இ-4)

# 'போதை' காணொலிப்பாடல் வெளியீடு




காதலர் தினத்தை முன்னிட்டு *போதை* காணொலிப்பாடல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

# முத்துவிழாவும் மணி விழாவும்

யாழ். உரும்பிராய் இந்துக்கல்லூரி ,சைவத்தமிழ் வித்தியாலய முன்னாள் அதிபர், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அப்பாத்துரை ஈஸ்வரநாதனின் சேவை பணியின் முத்து விழா மற்றும் அகவை 60 இல் மணி விழா நிகழ்வுகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். உரும்பிராய் இந்துக்கல்லூரியின் கற்பக விநாயகர் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக்கல்லூரி ஓய்வுநிலை அதிபர் அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மணிவிழா ஈஸ்வரநாதன், திருமதி கிருபாசக்தி ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதன்போது ஈஸ்வரநாதம என்ற மலர் வெளியீடும் இடம்பெறும். இந்நிகழ்வின் ஆசியுரைகளை சிவஸ்ரீ க.மு. சோமசுந்தரக்குருக்கள்,சிவஸ்ரீ நவரத்தின பிரபுதேவ குருக்கள், அருட்திரு இராசேந்திரம் ஸ்ராலின் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

ஈஸ்வரநாதம மணி விழா மலர் வெளியீட்டுரை மற்றும் நயப்புரையினை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் நிகழ்த்தவுள்ளார். (இ-5)

# பாரம்பரிய முறையில் இலத்தீன் மொழியில் திருப்பலி ஒப்புக்கொடுப்பு

பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் திருத்தந்தையினால் 2016 ஆம் ஆண்டு இரக்கத்தின் வருடமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதனை முன்னிட்டு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நேற்று முன்தினம் கொழும்பு புனித லூசியா பேராலயத்தில் கத்தோலிக்க திருச்சபையின் பாரம்பரிய முறையிலான திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டது. இந்த திருப்பலியில் கீதங்கள் உள்ளிட்ட அனைத்து ஆராதனைகளுமம இலத்தீன் மொழியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா:23சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்:BSc/ தனியார் தொழில்<br>தொ.இ: B/5501 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 5 3/4<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BBA/தனியார் தொழில்<br>தொ.இ: G/5502 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 3 1/2<br>தகைமை/தொழில்:O/L/ சொந்தத்தொழில்<br>தொ.இ: B/5503 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 16சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5505 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 41செவ் 4 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:BSc/ பொறியியலாளர்<br>தொ.இ: B/5504 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 33<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/5510 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 54செவ் 12 இல்<br>உயரம்: 172cm<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில் குவைத்<br>தொ.இ: B/5506 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 22 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BBA, MA/ அரசதொழில்<br>தொ.இ: G/5511 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 5.00 மணிவரை திறக்கப்படும்.

# முல்லைத்தீவு கடலில் அதிகரித்து வரும் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்

## கட்டுப்படுத்துவதற்கு யாருக்கும் அதிகாரமில்லை எனச்சவால்; முல்லைத்தீவு மீனவர் சமாசத் தலைவர் கவலை

(மாமூலை)

**முல்லைத்தீவு கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்துக்கொண்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் சமாசத்தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியதாசா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களால் விடுக்கப்படும் கோரிக்கைகளை அதிகாரிகள்,அரசியல்வாதிகள் இதுவரை நிறைவேற்றவில்லை.

ஆனால் தென்னிலங்கையில் இருந்து இங்கு வந்து அத்துமீறல்களில் ஈடுபடும் மீனவர்களுக்கு பிரச்சினையென்றால் உடனடியாக தீர்வு வழங்குகின்றனர்.

அந்தவகையில் அண்மையில் முல்லைத்தீவில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் முல்லைத்தீவு மீனவர்களின் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்ட பின்பும் அத்துமீறல்கள் தொடர்கின்றன என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இதேவேளை தென்பகுதியிலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவர் நாயாற்றுப்பகுதியில் மீன்பிடிப் படகுகளைக் கொண்டு வந்து அத்துமீறும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

குறித்த நபர் முல்லைத்தீவு மீனவ சமாசக் கொள்கைகளை மீறும் வகையில் செயற்படுகின்றார்.

தன்னைக் கட்டுப்படுத்துவதற்கு இங்கு எவருக்கும் அதிகாரம் இல்லை.நீங்கள் எங்கு வேண்டுமென்றாலும் முறையிடலாம் என அவர் சவால் விடுத்துள்ளார்.

ஆரம்பத்தில் 32படகுகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது 350 இற்கும் மேற்பட்ட மீன்பிடிப்படகுகள் எமது பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன.

இவ்வாறான அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை தொடருமாகில் மீண்டும் நாட்டில் கலவரம் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான முழுப்பொறுப்பையும் அரச அதிகாரிகள்,அரசியல்வாதிகள் ஆகியோரே ஏற்க வேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட மீனவ சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (2-3-301)








கொக்குத்தொடுவாய் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு அண்மையில் பாடசாலை அதிபர் என். விசயரத்தினம் தலைமை யில் நடைபெற்றபோது.... (படங்கள்:-பனிக்கன் குளம் செய்தியாளர்)

### துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட

# மாணவர்களுக்கான வலயமட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள்.

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இடையிலான வலயமட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள கால அட்டவணையை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் மார்ச் மாதம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மு/மாங்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் ஆண்,பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

மறுநாள் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் ஆண்,பெண் இருபாலாருக்குமான சதுரங்கம்,பூப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும்6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் ஆண்,பெண் இருபாலாருக்குமான கரம்,கபடி ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்,மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை ஆகியவற்றின் மைதானங்களில் ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட்,எல்லே ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 12ஆம் சனிக்கிழமைகாலை 8.30மணிக்கு மு/மாங்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் ஆண்,பெண் இருபாலாருக்குமான வலைப்பந்தாட்டம், எறிபந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதம்19ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மு/யோகபுரம் மகாவித்தியாலயம்,மு/மல்லாவி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மைதானங்களில் 15 வயது ஆண்கள்,17வயது ஆண்கள்,19வயது ஆண்கள்,19வயது பெண்கள் ஆகியோருக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை மெய்வல்லுநர் நிகழ்வு எதிர்வரும் மார்ச் மாதம் 21,22,23ஆகிய தினங்களில் நடைபெறும் என அவர் அறிவித்துள்ளார். (2-15)

# புளொட் அமைப்பின் அலுவலகம் வவுனியாவில் திறக்கப்பட்டது



தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) வவுனியா மாவட்ட அலுவலகம் நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனால் திறந்து வைக்கப்பட்டது.


வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள சிவன் கோவிலில் விசேட வழிபாடுகள் இடம்பெற்ற தன் பின்னர் தோழர் உமா மகேஸ்வரனின் சமாதி அமைந்துள்ள வளா கத்தில் இவ் அலுவலகம் திறந்து வைக்கப்-பட்டது.



இவ் அலுவலகத் திறப்பு விழாவில் மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், க.சிவநேசன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான பாலச்சந்திரன், முன்னாள் வவுனியா உப நகரபிதா சந்திரகுல சிங்கம் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-3-250-311-303)

# மடு பூமலர்ந்தான் கிராமத்தில் குடிநீர்த் தாங்கி அமைப்பு

மடு பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பூமலர்ந்தான் கிராமத்தில் கடந்த ஆண்டு மீள் குடியேறிய மக்கள் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு பெரும் சிரமத்தை எதிர் நோக்கினர். அங்குள்ள மக்களும் அதிகாரிகளும் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.



அதனைத் தொடர்ந்து அங்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர், அவர்களது அடிப்படை தேவையாகிய குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் தமது வருடாந்த பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து கடந்த ஆண்டு 5 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து நீர்த்தாங்கி மற்றும் நீரிணைப்பு என்பன கடந்த ஆண்டு அமைக்கப்பட்டன.

இத்திட்டத்துக்கான காசோலை அண்மையில் மன்னாரில் உள்ள அமைச்சரின் உப அலுவலகத்தில் வைத்து பூமலர்ந்தான் கிராம அபிவிருத்தி சங்கத்தினரிடம் அமைச்சர் கையளித்தார். (2-281)

# தமிழ்ச் சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய செயலாண்மைக்குழு தெரிவும்

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய செயலாண்மைக்குழு தெரிவும் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் சங்க நிறுவுனரும் மூத்த தலைவருமாகிய வே.இறைபிள்ளை தலைமையில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் முன்னெடுத்து வரும் தமிழ்ப் பணிகள் தொடர்பாக கலந்தாலோசிக்கப் பட்டு,முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப் பட்டுள்ளதுடன் புதிய செயலாண்மைக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இதன் தலைவராக நா.சோதிநாதன் ,செயலாளராக செ.சிவகுருநாதன்,பொருளாளராக திருமதி கி.தர்மிலா,ஆகியோர் தெரிவாகினர்.

அத்துடன் தமிழ்ச் சங்கத்தை எதிர்காலத்தில் விரிவுபடுத்தும் நோக்குடன் தமிழ்ச் சங்கத்தின் இளைஞர் அணிக்கென உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டதுடன் செயலாண்மைக்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (2-3-277)

### மாந்தை கிழக்கு பிர.செயலக பிரிவிற்குட்பட்ட

# ஏழு கிராமங்களுக்கு நிரந்தரமாக கிராம அலுவலர்கள் நியமிக்கவில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் ஆதங்கம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளில் 7 கிராமங்களுக்கு நிரந்தரமாக கிராம அலுவலர்கள் நியமிக்கப் படாமையால் கிராம மக்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தமது கிராமத்திற் காக பதில் கடமையாற்றும் கிராம அலுவலர்க ளைத் தேடி அலைந்து திரிவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 15 கிராம அலுவலர்கள் பிரிவுகளில் வன்னி விளாங்குளம், அம்பாள் குளம், கரும்புள்ளியான் குளம், சிராட்டி குளம், செல்வபுரம், மூன்றுமுறிப்பு, பொன்னகர் ஆகிய கிராமங்களுக்கு நிரந்தர கிராம அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை.

இவர்களுடன் சிவபுரம் கிராமத்திற்கான நிரந்தர கிராம அலுவலரும் தற்போது மருத்துவ விடுமுறையில் இருப்பதால் 8 கிராமங்களுக்கு கிராம அலுவலர்கள் இல்லாது காணப்படுகின்றது.

இக்கிராம மக்களின் கடமைகளை ஏனைய 7 நிரந்தர கிராம அலுவலர்களும் தமக்கான வேலைப்பளுச் சுமைகளுக்கு மத்தியில் மேற்படி கிராம மக்களின் நலன் கருதி பதில் கடமையாற்றி வருகின்றனர்.

தமது கிராமங்களுக்கு நிரந்தரமாக கிராம சேவையாளர்களை நியமித்து தருமாறு பாதிக்கப்பட்ட கிராம மக்கள் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கள், வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர்கள் ஆகியோருக்கு முறை யிட்டும் இதுவரை பயன்கிடைக்கவில்லை என ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

எனவே உரிய தரப்பினர் மேற்படி விடயத்தில் கவனம் எடுத்து தமக்கான நிரந்தர கிராம அலுவலர்களை நியமித்து தருமாறு பாதிக்கப்பட்ட கிராம மக்கள் கோரிக்கையொன்றை விடுத்துள்ளனர். (2-15)

# கடலட்டை வளர்ப்புத் திட்டத்தின் கீழ்

## நாச்சிக்குடா கடலில் கடலட்டை அறுவடை



கிளிநொச்சி பூநகரியில் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் (ILO)நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கடலட்டை வளர்ப்புத் திட்டத்தின் அறுவடை நிகழ்வு கடந்த 13ஆம் திகதி பூநகரி நாச்சிக்குடா கடற்பகுதியில் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன் கலந்து கொண்டார்.

இதன்போது அறுவடை செய்யப்பட்ட



கடலட்டைகள் சீன நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-277)

# கிளி.வன்னேரிக் குளத்தில் பறவைகள் சரணாலயம்

## நூலகத்திறப்பு விழாவில் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் பறவைகள் சரணாலயம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் தெரிவித்துள்ளார். வன்னேரிக்குளம் உதயதாரகை சனசமூக நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்ட நூலகத் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

வன்னேரிக்குளத்தில் பறவைகள் சரணாலயம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன்மேற்படி பகுதியில் வீட்டுத் திட்டங்கள் இதுவரை கிடைக்காதவர்களுக்கு வீட்டுத்திட்டங்கள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வதாக உறுதியளித்த பாராளுமன்ற உறுப்பினர், மின்சார வசதி கிடை க்காதவர்களு க்கு இந்தமாத இறுதி க்குள் மன்சார வசதி கிடைக்க நட வடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை திறந்து வைக்கப்பட்ட நூலகக் கட்டடத்தில் கணனி வகுப்புக்களை நடத்துவதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினா எஸ்பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் தயாபரன், கரைச்சிப் பிரதேச சபை செயலாளர் ஆகியோா கலந்து கொண்டிருந்தனர். இந்த சனசமூக நிலைய நூலகத்திற்கான நிதி கரைச்சிப் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் டெனீஸ்வரனினால் ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-3-307-295)

### கரைச்சி பிரதேச செயலர் பிரிவில்

# 3ஆயிரத்து 895 பேருக்கு மாதாந்தக் கொடுப்பனவு

கிளிநொச்சி - கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் மூவாயிரத்து 895 பேருக்குமாதாந்த உதவிக்கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாக கரைச்சி பிரதேச செயலகம் வெளியிட்டுள்ள புள்ளிவிபரத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, கரைச்சி பிரதேச செயலக சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாகவே இந்த மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

இதனைவிட 124 பேருக்குபுற்று நோய்க்கான கொடுப்பனவுகள், 11 பேருக்கு காச நோய்க்கான கொடுப்பனவுகள், 84 பேருக்கு சிறுநீரக நோய்க்கான கொடுப்பனவுகள், 2 பேருக்கு தொழு நோய்க்கான கொடுப்பனவுகள் என்பன வழங்கப்படுகின்றன.

அத்துடன் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட 52 பேருக்கு தலா ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் திரிசவிய திட்டத்தின் கீழ் 118 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா 3 ஆயிரம்ரூபாவும்வழங்கப்படுவதாக கரைச்சி பிரதேச செயலகம் வெளியிட்டுள்ள புள்ளிவிபரத்தில் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-3-281)




# அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலய அபிவிருத்திக்கு எப்போது வழி பிறக்கும்

முல்லைத்தீவு - அம்பலவன்பொக்கணை மகாவித்தியாலயம் மீள்குடியேற்றத்திற்கு பின்னர் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருவதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அம்பலவன் பொக்கணையும் ஒன்று. ஷெல் தாக்குதல் காரணமாக பாடசாலை கட்டடங்கள் சேதமடைந்து காணப்படுகின்றன.

பாடசாலையில் தற்போது 165 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். விஞ்ஞான ஆய்வு கூடமோ, கணனி கல்வி வசதிகளோ இல்லை. யுத்தம் முடிவடைந்து மீள் குடியேற்றம் செய்யப்பட்டு சுமார் ஏழு ஆண்டுகள் ஆகியுள்ள நிலையிலும் பாடசாலையின் அபிவிருத்தி செயற்பாடுகள் சிறியளவிலேயே இடம்பெற்றுள்ளன. மாத்தளன். பொக்கணை உள்ளிட்ட பிரதேசங்களில் வசித்து வரும் மாணவர்கள் இந்த பாடசாலையை நம்பியுள்ளனர் என அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். போர்க்காயங்களுடன் காட்சி தரும் பாடசா லையை யாரும் கவனிப்பதில்லை என மாணவர்கள் கவலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-3-281)







கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் விளையாட்டு துறையினரின் ஏற்பாட்டில் 42 ஆவது தேசிய மெய் வல்லுநர் போட்டியை முன்னிட்டு மாவட்ட ரீதியிலான ஆண், பெண் இருபாலாருக்குமான ஊர் சுற்றும் மரதன் ஓட்டப்போட்டி கடந்த 13 ஆம் திகதி காலை 6 மணியளவில் கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பித்து இரத்தினபுரம் திருவையாறு ஊடாக மருதநகர் சென்று கரடிப் போக்கு சந்தியை சென்றடைந்து ஆரம்ப இடத்தை வந்தடைந்தது.

இதில் ஆண்கள் 10 கிலோமீற்றர் தூரமும் பெண்கள் 8.5 கிலோமீற்றர் தூரமும் சுற்றி வந்தனர்.

(படங்கள்:கிளிநொச்சி செய்தியாளர்)

# குமாரபுரம் கிராமத்திற்கான மின்சார விநியோகம் விரைவில்

(தண்ணீரூற்று)

முல்லைத்தீவு முள்ளியவளை தண்ணீரூற்று பகுதியிலுள்ள குமாரபுரம் கிராமத்தின் சித் திரவேலாயுதர் கோவிலுக்கும் அதனை அண்மித்த 2கிலோமீற்றர் சுற்றளவு கொண்ட பகுதியிலுள்ள மின்னிணைப்பு பெறாத வீடுகளுக்கும் மின்சாரம் வழங்குவதற்கான தூண்கள் நிறுத்தப்பட்டும் அதற்கான வயர்கள் பொருத்தும் பணி மின்சார சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதி மக்களுக்கான மின்சாரம் வெகு விரைவில் கிடைக்கப்பெறுமென தெரிவிக்கப் படுகின்றது. (2-292)

# அதிபர் தரம் 3 போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

2015 ஆம் ஆண்டு நடந்த அதி
பர் தரம் மூன்றுக்கு ஆட்சேர்ப்புச்
செய்வதற்கான போட்டிப் பரீட்சை
பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.
இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த
420 பேர் தகைமை பெற்றுள்ளனர்.
அவர்களின்பெயர்விபரம்வருமாறு.
(தொடர்ச்சி)....

THUSYANTHAN, Y.-PALAVI
STREET, POLIKANDY EAST, VALV
ETTITURAI,JAFFNA-822 6250
02V, SUTHERSHAN, V.-WELWA
THAI, NELLIADY, KARA VEDDY-
711981640V VIJAYA KUMAR, M-
MANIKKAMPATT AI, ALVAI
NORTH, ALVAI- 790 363604V,
MAHILESWARAN, S- MEESA
LAI NORTH, KODIK AMAM.-
8377808 10V, JEYAM ATHY, J.J.-
SANTHIRAVASA, THUNNALAI
SOUTH, KOVAVE DDY- 838650
260 V, JEYAKKA NTHAN, P.- SRI
MAHAL, VATHI RI, KARAVEDDY-
730394 292V, SUBENDIRAN, S-
VALLAI ROAD, THONDAIMAN
ARU-767352239V, SHASHI THA
RAN, S- SIVAN KOVIL ROAD,
SITH THANKENY- 780700890V,
MUT HTHARASAN, T.-PANNAK
AM SOUTH, SULIPURAM- 781
612570V, PERINPAKUMAR, K.-
KATHIRAMALAI SIVAN KOVILA
DY, STATION ROAD, CHUNN
AKAM-760023299V, ARA FATH,
K.R.Y.-20/1, MN/PANDARAV
ELI, CHILAWATHTHURAI- 7814
81165V, RAVICHAND RAN, S-
185A, KASTHURIYAR ROAD,
JAFFNA- 693512662V, JEYAKU
MAR, S-ANKALAPAY, INUVIL
EAST, CHUNNAKAM- 7668732
86V, SELVANANTHA RAJAH, S-
66/4, OLD ROAD, KANTHARO
DAY, JAFFNA-755 451 789V,
SELVANANTHARA JAH, N.-66/
4,OLD ROAD, KANTHARMADAM,
JAFFNA- 751511 515V, AHILAN,
S- NEELAKIRI, KALVAYAL, CHA
VAKACHCHE RI- 790332237V,
RAKULAN, K- PERUMKULAM
ROAD, KALVAYAL, CHAVAK ACH
CHE RI- 852760982V, RAJASEEL
AN, R.-PORIYAVALAVU, PUL OLY
NORTH,POINT PEDRO.-700171
280V, JEYAMOHAN, S- HIGHL
EVEL ROAD, PULO LY SOUTH,
PULOLY- 741130 670V, LOKESW
ARAN, K- MUTH ALIYAR VALA
VU, KARANAVAY SOUTH, KARA
VEDDY-711 440 496V, PRAGA
SH, S.-KALI KOVI LADY, THAVA
DY NORTH, KOKUVIL- 81349
2660V, THAVA RATNAM, T.-SADAI
YALY, KARAI NAGAR- 732291
741V, RAVIN DRAN, A-ACHCH
ELU, NEER VELY, JAFFNA-8215
12077V, SARVESWARAN, S- 18,
SCHOOL LANE, THAVADY, JAFF
NA- 792 112447V, GANESHWH
ARAN, S- UPUYAKATHIRKAM
AM, PULOLY SOUTH, POINT
PED RO- 721141250V, ARUNTH
AVASEELAN, T.- SARASWA
THYVASAM, MEESALAI EAST,
MEESALAI-740661248V, LATH
AWATHY, P.-KATPAKATHARU,
MANIPAY ROAD, ANAIKOD
DAI- 687270746V, SANTHI RAM
OHAN, S.-VATTAPALAI, MULLI
YAWALAI-768642109V, SUTHA
KARAN, S.-KANUKENI Y ADY
WEST, MULLIYAWALAI -775274
697V, KULARATHAN, M. -NEAR
THE VIDYANANDA COLLEGE,
MULLIYAWALAI, MULLAITIVU.-
745323618V, MAKESWARAN,
Y.-WORD 4, KOMPAVIL, PUTHU
KUDIYIR UPU, MULLAITIVU -
752223 270V, BALAKRISHNAN,
P.- VISUVAMADU EAST, VISU
VAMADU-682901748V, NARE
NDIRAN, K.-WORD5, KUMU LAM
UNAI, MULLIYAVALU.-7102100
98V, MOHAJEEVAN, S.-WARD
2, PUTHUKKUDIYIR UPPU MUL
LAITIVU.-7128 92374V, PONN
AMPALAM, S.- MULVALLIPUN
AM, SECON DARY HIGH SCH
OOL, VALLIP UNAM, PUTHUKU
DIYIRUPU- -816774535V, MA
HENDRAN, K.-WARD 5, ANAN
DAPURAM, PUTHUKKUDI YIRU
PU, MULLA ITHIVU. -700 243
036V, KUGA THASAN, S.- VITHI
YANANDA COLLEGE, MULLIYA
WALAI, MULLAITIVU-8228510
96V, KETHEESWARAN, S.- WO
RD 2, KOMPAVIL, PUTHUKUDI
YIRUPU-731712697V, JAYA KA
NTH, V.- VATTAPALAI, MUL LIY
AWALAI, MULLAITIVU.-82366
1916V, JOSEPH, A.R.-MULLAI
TIVU MAHA VIDYALA YAM,
MULLAITIVU.-713245 046V,
ANTONDIAS, A.-143, VIVEKAN
ANTHANAGAR EAST, KILINO
CHCHI.-740142771V, MANGALA
RUBAN, T.-WORD 4, KOMPA
VIL, PUTHUKUDI YIRUPU, MU
LLAITIVU.-720 323281V, JEYAT
HEESAN, A.-SELLAVARIPIDDI,
KANDAVA LAI, PARANTHAN. -
751 551 100V, JEYACHRISTOE,
J.-UDAYARKADDU, MAHAVID
YALAYAM, UDAYARKUDDU-8411
62960V, MOHANATHA SAN, S.-
WORD 3, MULLI YAWALAI, MU
LLAITIVU.-7911 23810V, SHA
NTHINIY, I-MA MOOLAI, MUL
LIYAVALAI.-777642367V, SUR
ESHTHA RAN, M.-MAMOOLAI,
MULLIY AVALAI. -793090552V,
FALE EL, M-118, LEBBAI STREET,
THARAPURAM, MANNAR.-791
872375V, THAVARAJAH, S-33/
4, N.RADCHAKAR TEM PLE
ROAD, OLLIMODDAI, MAN
NAR.- 741323486V, ANG ELIKA,
SR.M.-CARMELAHAM, MU RU
NKAN PIDDY, MURUNKAN.-
695791526V, SHI HAR, S.H.M.-
653, KASHMEER STREET, UPP
UKKULAM, MANNAR.-81265
0335V, EMILRAJ LOGU, S.-46,
2ND CROSS STREET, EMILNA
GAR, MANNAR- 782461834V,
CROOS, I.S.-WARD 4, VANKALAI,
MANN AR.-721850633V, FAWSE
EN, A.-KARISAL R.C.T.M.S.,
PESA LAI, MANNAR.-7105909
15V, RAJAKUMAR, G.T.Q.48/20,
ALAYA VEETHY, ELUTHOOR,
MANNAR.-752620270V, AS MY,
M.S.M.-WARD 6, ERUKKA LAM
PIDDY.-753182020V, CROOS,
G.M.F.-WARD 9, VANKALAI,
MANNAR.-702771366V, CROOS,
S.A-39/5, HOSPITAL ROAD,
CHINNAKKADAI, MA NNAR.-
652352057V, MARY LIYONI, J.C.-
PUNITHAVALAN AR R.C.T.M.S.,
THALVUPADU, MANNAR.-777
861905V, CONSTANTINE, S-
KARUKKAKULAM, VADDAKKA
NDAL ,MANNAR.-701563603V,
PAU LMESIYA CROOS, S.J.J.- 16,
PERIYAPANDIVIRICHAN,- MADU. -
725863144V, SRIJEYALUX MY,
S.-THALAIMAN NAR PIER G.T.
M.S., THALAIMANNAR, MANN
AR.-816064015V, KRISH NAPA
VANANTHAM, J-26/5, INFANT
JESUS STREET, MAN NAR.-
747152217V, SIRAIVA, A.R.-
WARD 5, PESALAI, MAN NAR.-
692862457V ,ANTON XAVIER,
F.X.-HOS PITAL ROAD, ADAMP
AN, MANNAR.-78354 3672V,
IGNESIALINDA, A.R.-323, SEMI
NARY ROAD, MAN NAR.-72574
2150V, DANIST AN, S.-34/6,
CHINNAKADE, MANNAR.-7326
72664V, SU LHAR, S.M.- 23,
SULAIHAMA NZIL, UPPUKKUL
AM, MAN NAR.-772452934V,
KISHNA THAS, A.-624, KOKKA
VIL ROAD, THUNUKKAI.-7400
614 45V, MAHENTHIRARAJAH,
S.2745, PALALY ROAD, THI RUN
ELVELY NORTH, JAFFNA.-6722
00636V, THISARUPAN, M.-RAM
ANATHAPURAM WE ST GOV
ERNMENT TAMIL MIXED SCH
OOL, VADDAKA CHCHI,-KILI
NOCHCHI.-851191941V, GIS
GARD, T.D.-71, UTHAYANAGAR
WEST, KILIN OCHCHI.-79123
3909V, JEYA RANEE, L.-64, THO
NDAMA ANNAGAR EAST, KILIN
OCH CHI.-665313247V, JEGAN,
B.-409, ANANDHAPURAM, KIL
INOCHCHI.-770614643V, UTH
AYAPAVAN, S.-RAMALINK AM
ROAD, CHAVAKACHCHE RI, JA
FFNA:-771763561V, SIVA NES
AN, K.-ALIYAWALAI, THA LAIY
ADY, JAFFNA.-791243 270V,
PIRIYANTHAN, N-KILIN OCH
CHI M.V., WILSON ROAD, KILINO
CHCHI.-833133314V, BAKI RATHAN,
S.-142, PANDIYANKU LAM, NAD
DANKANDAL, MAN KULAM.-
811701424V, VINOT HAN, A.-
ARIVALAYAM, IMAY ANAN EA
ST, UDUPPIDDY.-782034332V,
SRIRANGAN, J.-KIRANCHI, SI
VAPURAM, PUNAGARY.-820
084195V, KARUNANANTHAN,
K.-162/2, MURASUMODDAI,
PARANT HAN.-723020832V,
JOYALPIY ASEELAN, P.-188,
UTHAYANA GAR EAST, KILINO
CHCHI.-741 494108V, ELANK
UMAR, S.-401, ARUMUGAM
ROAD, VADD AKA CHCHI, KILI
NOCH CHI.-733192801V, SATH
AN ANTHAN, R.-254/A, UTH
AYA NAGAR EAST, KILINOCH
CHI.-721922162V, IYNKARAN, G.-
48, NERIYAKULAM ROAD, NELUKU
LAM, VAVUNIYA.-8303638 15V,
VASUTHEESAN, T.-KANU KKAI,
AVARANGAL, PUTTUR.- 82227
2347V, FAISAR, K.M.-PUTHIYAK
UDIMANAI, SOO DUVENTHAPU
LAVU, PAVATKU LAM, VAVUNI
YA.-7522806 49V, GUNARUB
AN, I.-12, 8 ACRES, 1ST LANE,
VIYASAR VEE THI, THONIKAL,
VAVUNIYA.-757421208V, ANT
ON ALVINAS, S.-KATKANTHA
KULAM, MURU NKAN ,MAN
NAR.-750623972V, CHANDR
AMOHAN, V.-262, HOUSING
SCHEME, SRIRAMP URAM, VAVU
NIYA.-8302028 30V, MAHESW
ARALINGAM, K.-18/11, VIMALA
ILLAM, 4TH LANE, THAMPAN
AIKULA RO AD, NELUKULAM,
VAVUNIYA. -752760632V, AS
WER, M.M.M.- 182, PADIVAM 2,
PAVATKU LAM, VAVUNIYA.-75
20534 05V, JEYAPRAGASH, J.-
78, PERIYATHAMPANAI, VAV
UN IYA.-800233895V, MUHU
NTH AN, S.-45, OUTER CIRCU
LAR ROAD, VAVUNIYA.-822052
614V, MATHIVANNAN, T.-148,
ANNA ROAD, THONIK KAL, VA
VUNIYA.-740745310V, SIVAK
ANESHAN, S.-VAVUNIYA TAMI
LMATHIYA M.VID., KAN DY
ROAD, VAVUNIYA.-800 6831
14V, THUVARAKESAN, K.-174/
A, UKKULANKULAM, VAVUNI
YA.-825802380V, BA SKARAN,
K.-KULAVISUDDAN, NEDUNKE
NY.-740022423V, THAVANES
AN, P.-25/23C, 1ST LANE, GOD
SHED ROAD, THO NIKKAL,
VAVUNIYA.-7715104 34V, SA
KEETHARAN, T.-455/3, KORAV
UPOTHANAI ROAD, RAMBAI
KULAM, VAVUNIYA.-75046151
4V, SELVAKUMAR, K.-173, 3RD
LANE, PANDARIKU LAM, VAVU
NIYA.-7811527 30V, SELVARA
SA, S.-ERUK KALANKAL POVARA
SANKU LAM, VAVUNIYA.-7911
5348 4V, JEYALALITHA, N.-131,
MARAVANKULAM, SASTHIRI
KULANKULAM, VAVUNIYA.-837
790751V, SENTHURSEL VAN, S.-
75/2, UKKILANKULAM, VAVU
NIYA.-851034889V, FENIN ROSH
AN, F.X.27, 2ND LANE, KATHIR
ESU ROAD, VAIRAVAPU LIYANK
ULAM, VAVUNIYA.-7734125
53V, KAMALATHAS, S.-44, SCH
OOL LANE, UKKILA NKULAM,
VAVUNIYA.-8172518 20V, MUR
ALEETHARAN, M-THARANIK
ULAM, SASTHIRI KULANKU
LAM, VAVUNIYA.-703262333V,
THAYAHARAN, S.-160/2, MU
RASUMOODAI, PARANTHAN.-
713592900V, KOMALESWARAN, K-
104/1, GLOBEMIL ROAD, PANDA
RI KULAM, VAVUNIYA.-760021
474V, PRATHEEVANANTH, S-.
178/20, GODSHED ROAD, THO
NIKAL, VAVUNIYA.-7624244
10V, NISAR, S.-SINNACHIPPI
KULAM, NERIYAKULAM, VAVU
NIYA-763012840V, THARSHA, T.-
8, NNER CIRCULAR ROAD,
VAVUNIYA.-785313143V, KINGS
LEY VIJEYAPALAN, G.-5th LANE,
LUXAPANA POST, KOVILPUTH
UKULAM, VAVUNIYA.-6620114
79V, THAYALINY, T-.94, THEKK
AWATTA, VAVUNIYA.-74747
1096V, SIVAKARAN, S.-15/10,
5th LANE, VEPPANKULAM, VA
VUNIYA.-751372213V, ARUMU
GARANJAN, P.-315, KARUMP
ULLIYAN, NADDANKANDAL,
MANKULAM.-772091141 V, JEYA
KUMAR, K.-27/2, 4th LANE, MA
THURAIVEERAN KOVIL ROAD,
MAHARAM BAIKULAM, VAVU
NIYA.-770 233798V, PIRAPHA
HAR, S.-7B, URBAN COUNCIL
QUARTERS, MANNAR ROAD,
VAVUNIYA. -721470709V, DHA
RMASIRI, G.G.M.N.-30, THEERU
WEGAMA, VAVUNIYA.-7426
82455V, ABEYKOON, M.W.J . S.B.
MADUKANDA NATIONAL SCHOOL,
MADUKANDA, VAVUNIYA.-
840443078V, JAYAKODY, W.B.R.
SIRISUMANA MAHA VIDYALA
YA, PERIYAULUKKULAM, VAV
UNIYA.-811494330V,- THILA
KARATHNA, J.S.-**PERIYAULUK
KULAMA**, VAVUNIYA.-7412806
71V, PADMALATHA, J.M.D.-NE
DUNKULAM, VAVUNIYA.-78
8611560V, BANDARA, H.M.A.
G.S. MAHAKACHCHKODIY SC
HOOL QUATERS, MAHAKACH
CHAKODIYA, VAVUNIYA.-82 25
31520V, WIMALADASA, S.M.I.
N.-MAMADUWA, VAVU NIYA.-
757071134V, SHAMIN THAR
SHAN, T.-132, 2nd CROSS STREET,
VAVUNIYA.-7702219 94V, JEYAPR
AHASH, M.-91A, LUXAPANA
ROAD, THONIKK AL, VAVUNI
YA. -801755160V, MURUGAVEL,
N-218, 4th LANE, UKKILAN KUL
AM, VAVUNIYA.-792081444V,
KUNARUBAN, N.-12, 8 ACAKR,
1st LANE, VIYA SAR VEETHI, THO
NIKAL, VAVUNI YA.-723651514V,
SENTHILNA THAN, J-.KANAG
ARAYANKULAM NORTH, KAN
AGARAYAN KULAM, VAVUNI
YA.- 730572 832V, JANANTHAN,
S.-107A, MUNIYAPPAR KOVIL
VEETHY, KOOMANKULAM, VAV
UNIYA.- 801271839V, HIBATHT
HULLA, M.S.-C/O. JAYA, 35, 2nd
LANE, PAD DANICHOOR, VAVUN
IYA.- 850 450480V, MATHINY, S.-
15/10, 5th LANE, VEPPANKULAM,
VAVU NIYA.-766541461V, JEN
ANA NTHASIVAM, T.28/9, 7th
LANE, VEPPANKULAM, VAVU
NIYA.-711803343V, PRASANA,
K.-6th MILE POST, K.K.S. ROAD,
CHU NNAKAM, JAFFNA.-83168
1713V, EDWARDAMALRAJ, P.-
JESU PURAM, PERIYAKOMARAS
AN KULAM, VAVUNIYA. 7610
5220 9V, ILANGOVAN, K.-130B,
GOD SHED ROAD, VAVUNIYA.-
821533449V, SUTHAKARAN, M.-
NELUKULAM KALAIMA GAL
MAHA VIDYALAYAM, VAVUNI
YA.-832533009V, MOHAN, T.-88/20,
MANNAR ROAD, NELUKKUL
AM, VAVUNIYA.-7425410 53V, TH
ARMASEELAN, M.-16, LADIES
COLLEGE, CHAVA KACHERY,
JAFFNA.-7804229 80V, MU
RUGATHASAN, M.PUT HUKULAM
MAHA VIDYALAYA, SASTHIRIK
OLANKULAM, VAV UNIYA.-
802314221V, PAKEE THARAN,
T.-223/44, 7th LANE, KOVILPU
THUKULAM, VAVU NIYA.-780
070943V, PERIYA SAMY, V.-85A,
SOOSAIPILLAY ARKULAM, VA
VUNIYA.-7323 92696V, KEMAL
ATHAN, B.-2nd MILE POST, MA
NNAR ROAD, NELUKULAM,
VAVUNIYA.-813483173V, NI
MALAN, S.-86, BEHIND HOSPIT
AL ROAD, KUDIYIRUPPU, VA
VUNIYA.-83 3401700V, RAJARAT
NAM, S.-21/ 15A, KOVILVEE THY,
KURU MANKADU, VAVU NIYA.-
670 381714V, JEGANATHAN,
M. PANDIYANKULAM, PRIMA
RY SCHOOL, NADDANKAND
AL.- 762551721V.

(முற்றும்)

# மாபெரும் ஆரோக்கிய நடைபயணம்











படங்கள்:-பொ.சோபிகா

வடமாகாண சுகாதார அமைச்சும், யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறையும் இணைநது 35 ஆம் அணி மருத்துவ மாணவர்கள் ஊடாக மாபெரும் ஆரோக்கிய நடைபயணம் நேற்றையதினம் நடைபெற்றது. வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மாகாண ஆரோக்கிய விழா-2016 எனும் தொனிப் பொருளில் நடைபெறும் இந்த விழிப்புணர்வு செயற்பாட்டின் 2 ஆம் பகுதியாக இந்த நடைபயணம் நடைபெற்றது.

ஆரோக்கிய நடைபயணம் மக்கள் நடைப்பயிற்சியில் ஈடுபடுவதை தூண்டுவதற்காகவும் தொற்றா நோய்களை தடுப்பதில் உடற்பயிற்சியின் பங்குபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட இந்த நடைபவனி காலை 8 மணிக்கு யாழ். பண்ணையிலுள்ள வடமாகாண சுகாதார பணிமனையில் ஆரம்பமாகி முற்பகல் 11 மணிக்கு யாழ். மருத்துவ பீட விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தது. இந்த நடைபவனியில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாரகன, பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள், கிராம சேவகர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# எங்கேயும் எப்போதும் பகையாகும் புகை



மனிதனின் அத்தியாவசியத் தேவை காற்று. உணவு இல்லாமல் மூன்று வாரம் வரைகூட உயிர் வாழ்ந்துவிட முடியும். ஆனால், காற்று இல்லாமல் மூன்று நிமிடங்களுக்கு மேல் உயிர்வாழ முடியாது. பெருகிவிட்ட வாகனங்கள், தொழிற்சாலை மாசு போன்ற சுற்றுச்சூழல் சீர்கேடுகள் காரணமாக நாம் வாழ அடிப்படைத் தேவையான காற்றே, உயிர்க்கொல்லியாகிக் கொண்டிருக்கிறது.

உலகம் முழுவதும் காற்று மாசு காரணமாக உயிர் இழப்பவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன் உலக அளவில் மனிதன் மரணம் அடைவதற்கு நான்காவது காரணியாக இருந்த நாள்பட்ட மூச்சுக்குழாய் அடைப்பு நோய் (Chronic Obstructive Pulmonary Disease) இன்னும் ஐந்து ஆண்டுகளில் இரண்டாவது காரணியாக மாறவுள்ளது என எச்சரித்திருக்கிறது உலக சுகாதார நிறுவனம்.

இந்தியாவின் சுற்றுச்சூழல் துறை ஆய்வு ஒன்று, இந்திய தலைநகர் டில்லியில் நாள் ஒன்றுக்கு 80 பேர் மாசடைந்த காற்றை சுவாசிப்பதால்தான் இறக்கின்றனர் எனத் தெரிவிக்கிறது. டில்லி, மும்பைக்கு அடுத்த படியாக காற்று மாசடைந்த மோசமான நகரம் சென்னை. நல்ல தண்ணீரை விலை கொடுத்து வாங்குவது போலவே சுத்தமான காற்றை சுவாசிக்க மிகப்பெரும் விலையை நாம் கொடுக்க வேண்டிய நாளும் வரும்.

நல்ல காற்றில் 20.94 சதவிகிதம் ஒட்சிசன் இருக்கிறது. காற்று மாசடைவது காரணமாக காற்றில், நச்சான வேதிப் பொருட்களின் அளவு அதிகரித்துவிட்டன. மாசடைந்த காற்றை சுவாசிப்பதால் முதலில் பாதிக்கப்படுவது நுரையீரல் நாள்பட்ட மூச்சுக் குழாய் அடைப்பு நோய், நுரையீரல் புற்றுநோய் ஆகிய நுரையீரல் பாதிப்புகள் மாசடைந்த காற்றை சுவாசிப்பதால் ஏற்படுகின்றன. மாசடைந்த காற்றில காபனீரொட்சைட் அதிகமாக இருப்பது மட்டுமின்றி, புற்றுநோயை ஏறபடுத்தும் காரணிகளான கார்பன் மோனாக்சைடு, நைதரசன் டை ஒக்சைட் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் சல்ப்ர்டை ஆக்சைடு போனறவையும் அதிக அளவில் கலந்து இருக்கும். இந்தக் காற்றை சுவாசிப்பது மரணத்தை விரைவுபடுத்தும்.

### சி.ஓ.பி.டி

மாசடைந்த காற்றை சுவாசிக்கும்போது, நுரையீரலுக்குக் காற்று செல்லும் குழாய் மற்றும் நுரையீரல் கொஞ்சம் கொஞ்சமாகச் சுருங்கி வீங்கிவிடும். அடிக்கடி இருமல் வரும் சளி இருக்கும். ஆனால், வெளியே வராது. நுரையீரலின் செயற்றிறன் குறைந்து, கடைசியில் செயற்கை ஒடசிசன் கருவி துணை கொண்டே வாழ வேண்டிய நிலை வரலாம். சென்னை போன்ற பெரு நகரங்களில் நாள்பட்ட மூச்சுக் குழாய் அடைப்பு நோய் பல்கிப் பெருகிவருகிறது. பலருக்கு இப்படி ஒரு நோய் இருப்பதே தெரியாமல் வெறும் காய்ச்சல், சளி, இருமல் என சாதாரணமாக எடுத்துக் கொள்வதால் வாழ்நாள் சுருங்கி விடுகிறது.

### சி.ஓ.பி.டியை எப்படிக் கண்டுபிடிப்பது?

சாதாரணமாக இருமல் வந்தாலோ, சளி பிடித்தாலோ சி.ஓ.பி.டி நோய் இருக்குமோ என பயப்பட வேண்டாம். தண்ணீர் போல வெளிவரும் சளி பயப்பட வேண்டியது அல்ல. தொடர்ந்து, இரண்டு வாரத்துக்கும் அதிகமாக இருமல் வருகிறது என்றாலோ, அடர் மஞ்சள் நிறம், கறுப்பு நிறம், இரத்தம் கலந்த சிவப்பு நிறத்தில் சளி கட்டியாக வருகறது என்றாலோ உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.

### முன் பரிசோதனை?

நுரையீரல் முழுமையாகப் பாதிக்கப்பட்ட பின்னர் வைத்தியசாலைக்கு வருவதைவிட முன்கூட்டியே காப்பது நலம். நுரையீரல் செயற்றிறன் அறியும் பரிசோதனை (PFT TEST) மூலம், ஒருவரின் நுரையீரல் சுருங்கி இருக்கிறதா, எவ்வளவு சுருங்கி இருக்கிறது போன்ற விபரங்களைக் கண்டுபிடிக்க முடியும்.


### வீட்டிலேயே பரிசோதனை

நுரையீரல் செயற்றிறனை வீட்டிலேயே பீக் ஃப்ளோ மீற்றர் (Peak flow meter) எனும் கருவியைப் பயன்படுத்தி கண்டறியலாம். இந்தக் கருவியில் மிக வேகமாக ஒரு நிமிடம் வரை ஊதிக் கொண்டே இருக்க வேண்டும்.

ஒரு நிமிடத்தில் 350 மில்லி லீற்றர் வேகத்தில் ஊத முடிந்தால், எந்தப் பாதிப்பும் இல்லை. 350 மில்லி லீற்றரை விட குறைவான வேகத்திலேயே ஊத முடிகிறது எனில், தொடர்ந்து இதே போல ஏழு நாட்களுக்கு பரிசோதனை செய்து, விபரங்களை குறித்துக்கொண்டு வைத்தியரை சந்திப்பது நல்லது.

### ஆஸ்துமா

ஆஸ்துமா மரபியல் ரீதியாகவும் அலர்ஜி காரணமாகவும் வரக் கூடிய நோய். இவர்கள், மாசடைந்த காற்றை சுவாசிப்பதால், சி.ஓ.பி.டி எளிதில் வந்துவிடுகிறது. மேலும், ஆஸ்துமா பாதிப்புகளையும் தீவிரப் படுத்துகிறது. ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டவர்கள் மாசடைந்த காற்று



இருக்கும் இடங்களில் வசிப்பதைத் தவிர்க்க வேண்டும். புளிப்பான பழங்கள், நீர்க் காய்கறிகள் போன்றவற்றைச் சாப்பிடக் கூடாது, காதுக்குள் தண்ணீர் போகவிடக் கூடாது. குளிர்சாதன வசதி இருக்கும் அறைகளில், குளிர்சாதன பெட்டிக்கு நேராக உட்காரக் கூடாது. நீச்சலின்போது, காதுகளைப் பாதுகாக்கும் ஸ்விம்மிங இயர்பிளக்குகளைப்பொருத்திக்கொள்ள வேண்டும். இறால், நண்டு, கருவாடு போன்றவற்றைச் சாப்பிடக் கூடாது.

### புகை நமக்குப் பகை

சிகரெட் பிடிப்பது, சிகரெட் புகை கலந்த மாசடைந்த காற்றை சுவாசிப்பது என இரண்டுமே புற்றுநோயை ஏற்படுத்தும். அதிலும், சிகரெட் பிடிப்பவரைவிட அவருக்கு அருகில் நிற்பவருக்குத்தான் எளிதில் நுரையீரல் பாதிக்கப்படும். சிகரெட் புகைக்கும்போது, அதில் உள்ள வேதிப்பொருட்கள் இரண்டு வகையாக வெளியேறுகின்றன. சிகரெட்டை வாயில்வைத்து காற்றை உறிஞ்சும்போது, அதில் உள்ள நிக்கோட்டின், காபனரொட்சைட் போன்றவை நேரடியாக நுரையீரலுக்குள் செல்கின்றன. சிகரெட்டில் இருந்து வெளியேறும் புகை வழியாக கார்பன் மோனாக்சைடு, சல்பர் டைஆக்சைடு போன்ற மிகவும் மோசமான வாயுக்கள் வெளியேறி காற்றில் கலக்கின்றன. 18 வய தில் ஒருவர் சிக ரெட் பிடிக்க ஆரம் பித்து, அவர் சிகரெட் புகை யோடுமாச டைந்த காற்றை யும் சுவா சிக் கும் போது 45 - 50 வயதில் பெரும பாலும் மரணம் வந்து விடும். சிகரட் பிடிபவர்களுக்கு சி.ஓ.பி.டி, ஸ்குவாமஸ் செலகாரிநோமா (SquamousCell Carcinoma) எனும் நுரையீரல் புற்றுநோய், வழக்கமான நுரையீரல் புற்று நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகம்.

ஸ்குவாமஸ் செல் கார்சி நோமா வகை புற்றுநோய், புகைப்பவர்களில் யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். இதற்கு எந்த சிகிச்சையும் பலன் தராது. அதிகபட்சம் ஆறு மாதங்கள் வரைதான் இவர்களால் வாழ முடியும்.

நுரையீரல் செயல்திறனை அறிவதன் மூலம் புற்றுநோய் பாதிப்பில் இருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆறேழு ஆண்டுகளாகத் தொடர்ந்து சிகரெட் பிடித்து வந்தவர்கள், சிகரெட் புகை இருக்கும் இடத்திலேயே தொடர்ந்து இருப்பவர்கள் எக் ஸ்ரே பரிசோதனை எடுத்துப்பார்த்து தங்களின் நுரையீரல் என்ன நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு புற்றுநோய் பாதிப்புகளில் இருந்து மீள முடியும்.

# ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் கிறிஸ்தவ தலைவர்கள் சந்திப்பு



(ஹவானா)

கி.பி.1054இல், கிறிஸ்தவ மதம் போப் ஆண்டவரை தலைமையாக கொண்ட இலத்தீன் திருச்சபை எனவும், ஆர்த்தோடக்ஸ் சபை எனவும் இரண்டாக பிரிந்தது. இந்த இரு சபைகளையும் இணைக்கும் முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்து வரும் நிலையில், ஆர்த்தோடக்ஸ் சகோதரர்களை சந்தித்து கட்டித்தழுவ ஆவலாக இருப்பதாக அண்மையில் போப் பிரான்சிஸ் கூறியிருந்தார்.

தற்போது மெக்சிக்கோவிற்கு பயணம் மேற்கொண்டு வரும் போப் பிரான்சிஸ், இதற்காக கியூபா தலைநகர் ஹவானாவில் உள்ள ஜோஸ் மார்த்தி விமான நிலையத்துக்கு சென்றார். இதைப்போல ரஷ்ய ஆர்த்தோடக்ஸ் தலைவர் கிரில்லும் பராகுவே, பிரேசில் மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பயணம் மேற்கொள்கிறார். அவரும் ஹவானா விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இவர்கள் இருவரையும் கியூபா ஜனாதிபதி ரவூல் காஸ்ட்ரோ தனித்தனியாக வரவேற்றார். இதைத்தொடர்ந்து போப் பிரான்சிசும், ரஷ்ய ஆர்த்தோடக்ஸ் தலைவர் கிரில்லும் விமான நிலையத்திலேயே சந்தித்துக் கொண்டனர். அப்போது ஒருவரையொருவர் கட்டியணைத்து முத்தமிட்டு அன்பை பரிமாறிக் கொண்டனர்.

சுமார் 2 மணி நேரம் நடந்த இந்த சந்திப்பின் போது, இரு தலைவர்களும் ஈராக், சிரியா போன்ற நாடுகளில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுவதற்கு எதிரான பிரகடனம் ஒன்றில் கையெழுத்திட்டனர். சுமார் 1000 ஆண்டுகளுக்குப்பின் போப் ஆண்டவரும், ஆர்த்தோடக்ஸ் தலைவரும் சந்தித்த நிகழ்வு, வரலாற்று சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. (இ)

# தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பிரிட்டன் இளவரசி மிடில்டன்

(லண்டன்)

பிரித்தானிய மகாராணியான இரண்டாம் எலிசபெத் பற்றிய ஆவணப்படம் ஒன்றில் பங்கேற்க இளவரசியான கேட் மிடில்டன் முதன் முதலாக தொலைக்காட்சி நிகழ்ச்சியில் உரையாடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரித்தானிய மகாராணியான இரண்டாம் எலிசபெத் எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதி தனது 90ஆவது பிறந்தநாளை கோலாகலமாக கொண்டாடவுள்ளார்.

இந்த பிறந்தநாள் தினத்தில் பிரித்தானிய தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று மகாராணியின் வாழ்க்கைவரலாறு, முக்கிய பணிகள் குறித்து விபரிக்கும் வகையில் ஆவணப்படம் ஒன்றை வெளியிடவுள்ளது.

இதில் மகாராணியும் கலந்து கொள்வார் என எதிர்ப்பார்க்கப்படும் நிலையில், தற்போது கூடுதலான தகவல்களும் வெளியாகியுள்ளன.

அதாவது, மகாராணியை பற்றி உரையாட இளவரசி கேட் மிடில்டனும் இந்த ஆவணப்படத்தில் இடம்பெறவுள்ளதாகவும், இதற்கு மகாராணி ஒப்புதல் வழங்கியுள்ளதாகவும் தெரிகிறது.

கடந்த 2010ஆம் ஆண்டு இளவரசர் வில்லியமுடன் நிச்சயதார்த்தம் நடைபெற்றபோது தான் கடைசியாக தொலைக்காட்சியில் கேட் மிடில்டன் தோன்றினார். இதற்கு பிறகு, அதிகாரபூர்வமாக எந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளவில்லை.

இதுமட்டுமில்லாமல், இளவரசர் வில்லியமை திருமணம் செய்த பிறகு அவருக்கு ஒரு நல்ல மனைவியாகவும், அவருடைய இரண்டு பிள்ளைகளுக்கு ஒரு நல்ல தாயாராகவும் பொறுப்புடன் செயற்பட்டு வருவதாக கேட் மிடில்டனை மகாராணி பாராட்டியுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

அரச குடும்பத்தின் விதிமுறைகளை கவனத்துடன் பின்பற்றி இளைஞர்கள் மற்றும் பொதுமக்களிடையே நற்பெயரை கேட் மிடில்டன் பெற்றுள்ளதால், தன்னைப் பற்றிய ஆவணப்படத்தில் பங்கேற்க அனுமதி வழங்கியுள்ளதாகவும் பிரித்தானியாவில் வெளியாகும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ)

# படையினருடன் துப்பாக்கி சண்டை 10 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை!

பாகிஸ்தானில் பலுசிஸ்தான் மாகாணத்தில் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இந்த நிலையில் அங்கு சிபி மாவட்டம், சங்கான் பகுதியில் பலுசிஸ்தான் விடுதலை படையினர் என்ற பெயரில் சட்டவிரோதமாக இயங்கி வருகின்ற தீவிரவாதிகள் பதுங்கி உள்ளதாக பாதுகாப்பு படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து பாதுகாப்பு படையினர் நேற்று முன்தினம் அங்கு விரைந்து தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக கூறப்பட்ட பகுதிகளை சுற்றி வளைத்தனர். அங்கு பதுங்கி இருந்த தீவிரவாதிகளை சரண் அடையுமாறு பாதுகாப்பு படையினர் கூறினர்.

ஆனால் அவர்கள் அதற்கு செவி சாய்க்காமல், பாதுகாப்பு படையினர் மீது துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். உடனே பாதுகாப்புப் படையினரும் தங்கள் துப்பாக்கிகளால் தக்க பதிலடி கொடுத்தனர்.

இரு தரப்பினருக்கும் இடையே நீண்ட நேரம் கடுமையான துப்பாக்கி சண்டை நடந்தது. முடிவில் 10 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். 12 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர். 3 பதுங்குமிடங்கள் நிர்மூலமாக்கப்பட்டன.

இது குறித்து பாதுகாப்பு படை அதிகாரி ஒருவர் கூறும்போது,




“இந்த துப்பாக்கி சண்டையில் தீவிரவாத தளபதி ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்” என்றார்.

பலுசிஸ்தான் மாகாண அரசு செய்தி தொடர்பாளர் அன்வர் அல்ஹக் காக்கர் கூறுகையில், “சிபியில் பாதுகாப்பு படையினர் நடத்திய தாக்குதல் நடவடிக்கையில், சட்டவிரோதமான பலுசிஸ்தான் விடுதலை இராணுவத்தின் தளபதி அஸ்லாம் ஆச்சோ கொல்லப்பட்டார்” என்றார்.


இந்த துப்பாக்கி சண்டையின் போது தீவிரவாதிகள் வசமிருந்து வெடிகுண்டுகள், ரொக்கெட்டுகள் என பெருந்திரளான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. கைதுசெய்யப்பட்ட தீவிரவாதிகளை இரகசிய இடத்திற்கு கொண்டுபோய் பாதுகாப்பு படையினர் விசாரித்து வருகின்றனர்.

கொல்லப்பட்ட தீவிரவாதிகளும், பிடிபட்ட தீவிரவாதிகளும் பாதுகாப்பு படையினர் மீது பல்வேறு தாக்குதல்களை நடத்தியதுடன், ஹாஸ் குழாய்களையும் தகர்த்து இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ)




# வேலையில்லாத் திண்டாட்டத்தை உருவாக்க காத்திருக்கும் ரோபோ

## அமெரிக்க வல்லுநர்கள் எச்சரிக்கை



(வோஷிங்டன்)

ரோபோக்களின் தொழில்நுட்பத்தில் செயற்கை அறிவு தொடர்ந்து முன்னேறி வருவதால் அடுத்த 30 ஆண்டுகளில் ஏறக்குறைய உலகின் மொத்த மக்கள்தொகையில் பாதியளவிற்கு வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகும் என கணனி வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

இதுபற்றி அமெரிக்காவில் உள்ள ரைஸ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானியாக பணியாற்றி வரும் மோஷி வார்தி தெரிவித்தவை வருமாறு,

அடுத்த 30 ஆண்டுகளில் மனிதர்கள் செய்யும் எல்லா வேலைகளையும் ரோபோக்கள் செய்யும். இதனால், உலகப் பொருளாதாரம் 50 சதவீதம் அளவுக்கு வேலையில்லா திண்டாட்ட பிரச்சினையை சந்திக்கும். இயந்திரங்கள் எல்லா வேலைகளையும் செய்தால் மனிதர்கள் என்ன செய்வார்கள்? என்ற இந்த கேள்வியை மனித சமுதாயம் முன்னிறுத்த வேண்டும் என விரும்புகிறேன்.

நாம் இதுவரை உருவாக்கியுள்ள தொழில்நுட்பங்கள் அனைத்தும் மனித இனத்திற்கு எந்த அளவிற்கு நன்மையை வழங்கியிருக்கிறது என்பதையும் சிந்திக்க வேண்டும். தொடர்ந்து ரோபோட்டிக் தொழில்நுட்பத்தில் செயற்கை அறிவு முன்னேற்றம் கண்டு வருவது வருமானத்தில் ஏற்ற இறக்கங்களை உருவாக்கி சமநிலையற்ற தன்மையையும், நடுத்தர வேலை வாய்ப்புகள் முழுவதையும் அழித்து விடும்.

இவ்வாறு அவர் எச்சரித்துள்ளார். (இ)

# இரும்புச்சத்து மாத்திரை டி.என்.ஏவை பாதிக்கும்

## நிபுணர்கள் அதிர்ச்சித் தகவல்

உடல் நலத்துக்கு இரும்புச்சத்து மிக அவசியமாகும். உடலில் ஒட்சிசனை எடுத்து செல்வதில் இதன் பங்கு மிகவும் அவசியமாகும். எனவே இதை உலகில் இலட்சக்கணக்கானவர்கள் உட்கொள்கின்றனர். அதே நேரத்தில் அவற்றை அளவுக்கு அதிகமாக சாப்பிட்டால் பல்வேறு பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அளவுக்கு அதிகமாக சாப்பிடுவதால் இரத்த சோகை ஏற்பட்டு உடலில் சோர்வும், சுறுசுறுப்பின்மையும் உருவாகிறது. அனைத்துக்கும் மேலாக சாப்பிட்ட 10 நிமிடத்தில் மிக முக்கியமான டி.என்.ஏ. மூலக்கூறுகள் பாதிப்படைகிறது.

இத்தகவல் இங்கிலாந்தில் உள்ள இம்பீரியல் கல்லூரி மாணவர்களின் ஆராய்ச்சியின் மூலம் தெரிய வந்துள்ளது. எனவே இரும்புச் சத்து மாத்திரைகளை கவனமுடன் கையாளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ)

# சிங்கப்பூர் செயற்கைக்கோள் திறம்பட இயங்கி வருகிறது

கடந்த டிசெம்பர் மாதம் 16ஆம் திகதி ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து 6 சிங்கப்பூர் செயற்கைக்கோள்கள் விண்ணில் ஏவப்பட்டன. சிங்கப்பூர் செயற்கைக்கோள்களை இந்தியா ஏவியிருப்பது இதுவே முதல்முறையாகும். 6 செயற்கைக்கோள்களில் TeLEOS-1 என்ற 400 கிலோ எடையுள்ள செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்பட்ட ஒரு மணிநேரம் 48 நிமிடங்களில் கிரவுண்ட் ஸ்டேஷனுடன் வெற்றிகரமாக தொடர்பில் இணைந்தது.

இந்நிலையில், இந்த செயற்கைக்கோளின் கமரா செயற்பாட்டு நடைமுறையின் ஒருபகுதியாக இன்-ஆர்பிட் டெஸ்ட் நடத்தப்பட்டது. இதில் வெற்றிகரமாக படங்களை எடுத்து அனுப்பியதுடன் நன்றாகவும் இயங்கி வருவதாக சிங்கப்பூர் டெக்னாலஜிஸ் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் நேற்று தெரிவித்துள்ளது. (இ)

# கரண்டி மோட்டார் சைக்கிள்


அமெரிக்காவைச் சேர்ந்த கலைஞர் ஜேம்ஸ் ரைஸ் அற்புதமான மோட்டார் சைக்கிளை உருவாக்கியிருக்கிறார்.

இந்த மோட்டார் சைக்கிள் முழுவதும் கரண்டிகளை வைத்தே உருவாக்கியிருக்கிறார் என்பது தான் சிறப்பு.

கரண்டி மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றும் 2 இலட்சம் முதல் 2.75 இலட்சம் வரை விற்பனை செய்யப்படுகின்றன. கரண்டி அசாதாரணமானது. கலை பொருட்கள் செய்வதற்கு ஏற்றது. எங்கள் திருமணத்தில் ஏராளமான கரண்டிகள் எஞ்சிவிட்டன. அவற்றைத் தூக்கி எறிய மனம் இல்லை. உடனே கரண்டிகளை வைத்து ஏதாவது செய்யும்படி கேட்டுக் கொண்டார் என் மனைவி. அப்படி உருவானது தான் இந்தக் கரண்டி மோட்டார் சைக்கிள்.

வரைவதை விட இதுபோன்ற விடயங்களை உருவாக்குவதில் எனக்கு ஆர்வம் அதிகம். நானே என் மோட்டார் சைக்கிளை உருவாக்கியிருக்கிறேன். கார்களைப் புதுப்பித்திருக்கிறேன். பாடசாலையில் படிக்கும்போதே மினி பைக் உருவாக்கிவிட்டேன். அந்த அனுபவம் மோட்டார் வாகனங்களைச் சிற்பங்களாக மாற்றுவதற்கும் உதவியது. இது 100 சதவீதம் கரண்டிகளால் ஆன மோட்டார் சைக்கிள். கரண்டிகளைத் தேவைக்கு ஏற்ப வளைத்திருக்கிறேன்.

மோட்டார் சைக்கிளை விரும்புபவர்களுக்கு மட்டுமின்றி, பார்ப்பவர்கள் அனைவருக்கும் என்னுடைய படைப்புகள் பிடிக்கும் என்கிறார் ஜேம்ஸ். இவரது படைப்புகள் பல விருதுகளைக் குவித்துள்ளன. (இ)



## சிரிய விவகாரம் குறித்து

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடன் ரஷ்ய ஜனாதிபதி புடின் உரையாடல்



சிரிய விவகாரம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் ரஷ்ய ஜனாதிபதி புடின் தொலைபேசியில் வெளிப்படையாக பேசி ஆலோசனை நடத்தியுள்ளனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு சீரழிந்துள்ள சிரிய நாட்டின் தற்போதைய நிலை குறித்து அறிவதற்காக ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு ஒபாமா தொலைபேசி அழைப்பை எடுத்து உரையாடினார். அப்போது ரஷ்ய போர் விமானங்கள் தன்னுடைய வான்வெளி தாக்குதல் நிறுத்த வேண்டும் என ஒபாமா வலியுறுத்தினார்.

மேலும், போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதற்கு இன்னும் ஒரு நாளே உள்ள நிலையில், சிரியாவின் வடக்கு பகுதியில் குர்திஷ் முகாம்கள் மீது துருக்கி குண்டு மழை பொழிவது குறித்து ஜனாதிபதி ஒபாமா கவலை தெரிவித்தார். சிரியாவில் எதிர்த்தரப்பு படைகளுக்கு எதிராக வான்வெளி தாக்குதல நடத்துவதன் மூலம் ரஷ்யா ஆற்றிய ஆக்கபூர்வமான பங்களிப்பையும் அவர் சுட்டிக்காட்டினார்.


இருநாட்டு தலைவர்களும் சர்வதேச சிரிய ஆதரவு குழு கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்ட விவகாரங்கள் குறித்தும் போடப்பட்ட ஒப்பந்தம் குறித்தும் ஆலோசனை செய்தனர். நுண்ணுயிரிகளின் வல்லுநர் குழு தொடர்பான பணிகளில் இரு நாடுகளின் தொடர்பில் இருக்கும் என்று இருநாட்டு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். (இ)

# சிரியாவில் குர்திஷ் போராளிகள் மீது துருக்கிப்படைகள் குண்டு மழை!

சிரியாவின் வடக்கில் குர்திஷ் படைக்குழுக்கள் ஆதிக்கமுள்ள இடங்கள் மீது துருக்கி நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்த துருக்கி பிரதமர் அஹமட் தவுடோக்குளு, குர்திஷ் போராளிகளால் கைப்பற்றப்பட்டுள்ள சிரிய நகரங்களில் இருந்து அவர்கள் பின்வாங்க வேண்டும் என எச்சரித்தார்.

இந்நிலையில் இரண்டாது நாளாக துருக்கிப்படைகள் குர்திஷ் படைகள் மீது குண்டு மழை பொழிந்து வருகின்றன.


இந்த தாக்குதல் குறித்து துருக்கியின் தேசிய செய்தி நிறுவனம் கூறுகையில், சிரியாவின் ஆலெப்போ மாகாணத்தில் உள்ள அஷாஸ நகரில் குர்திஷ் கிளர்ச்சியாளர்கள் மீது துருக்கி பீரங்கிப்படைகள் தாக்குதல் நடத்தின. குர்திஷ் போராளிகளின் தாக்குதலுக்கு பதிலடியாகத்தான் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.



சிரியாவில் மக்கள் பாதுகாப்பு படை என்ற குர்திஷ் போராளிகள் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் துருக்கிப்படைகள் பீரங்கி குண்டு தாக்குதல் நடத்தியுள்ளன.

துருக்கியின் இந்த தாக்குதலுக்கு சிரிய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

துருக்கி படைகள் தாக்குதல் நடத்தி வரும் பகுதிகளில் ஏற்கனவே ரஷ்யப்படைகள் வான்வெளி தாக்குதல் நடத்தி வருவதாக கூறியுள்ளது. (இ)



# உடைந்து விழுந்த பனிப்பாறைகளால் ஒன்றரை லட்சம் பென்குயின்கள் பலி!

அந்தாட்டிக்காவில் காலநிலை மாற்றத்தால் கொழும்பு நகரை விட 3 மடங்கு அதிக பரப்பளவு கொண்ட பனிப்பாறைகள் உடைந்து விழுந்ததில் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பென்குயின் பறவைகள் பலியாகியுள்ளதாக அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தாட்டிக்காவில் உள்ள Cape Denison என்ற பகுதியில் வாழ்ந்து வந்த சுமார் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பென்குயின் பறவைகள் பற்றி கடந்த 100 ஆண்டுகளாக ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பென்குயின் பறவைகள் பொதுவாக திறந்தவெளி தண்ணீர் பரப்பளவு உள்ள பகுதிகளில் மட்டுமே அதிகமாக வசிக்கும்.

இங்கிருந்து சில மைல்கள் தொலைவில் உள்ள கடலுக்கு சென்று மீன்களை வேட்டையாடி உயிர் பிழைக்கும். ஆனால், காலநிலை மாற்றம் காரணமாக கடந்த 2010 ஆம் ஆண்டு சுற்றுப்புற தண்ணீர் வற்றியதால் ஒரு மிகப்பெரிய பனிப்பாறை உருவாகியுள்ளது.

இந்த பனிப்பாறையின் பரப்பளவானது கொழும்பு நகரை விட 3 மடங்கு அதிக பரப்பளவு கொண்டதாகும். அதாவது, பென்குயின்கள் வசித்த பகுதிக்கும் கடலுக்கும் இடையே திடீரென இந்த பனிப்பாறை உருவாகியுள்ளது.


இதன் விளைவாக, மீனை வேட்டையாட வேண்டிய பென்குயின்கள இந்த பனிப்பாறை மீது ஏறி சுமார் 60 கி.மீ. பயணித்தால் தான் கடலை அடைய முடியும்.

இந்நிலையில், இங்கு வசித்த ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பென்குயின் பறவைகள் பற்றி ஆய்வு எடுக்க முயன்றபோது, இவற்றில் தற்போது 10 ஆயிரம் பென்குயின்கள் மட்டுமே அந்த பகுதியில் வசிப்பதாகவும், எஞ்சிய ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பென்குயின்கள் கடந்த 5 ஆண்டுகளில் உணவு இல்லாமல் அடுத்தடுத்து உயிரிழந்துள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

காலநிலை குறித்து ஆய்வு மேற்கொண்டு வரும் ஆராய்ச்சியாளர்கள் கூறியபோது,

இந்த பனிப் பாறை உடையாவிட்டால், அடுத்த 20 ஆண்டுகளில் இங்குள்ள அனைத்து பென்கு யின்களும் உயிரிழந்து விடும் வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளனர். (இ)

# கடைக் கண்ணாடிகளை பதம்பார்த்த லான்ட்மாஸ்ரர்



வேகக்கட்டுப்பாட்டை இழந்த லான் மாஸ்ரர் உணவகத்திற்குள் பாய்ந்ததில் சாரதி காயமடைந்ததுடன் உணவக முன் பக்கக் கண்ணாடிகள் சேதமடைந்தன.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முற்பகல் 9 மணியளவில் கொக்குவில் கிழக்கு ஆடியபாதம் பகுதியில் இடம்பெற்றது.

சீமெந்து பக்கெற்றுக்களுடன் சென்று கொண்டிருந்த குறித்த லான் மாஸ்ரர் திடீரென வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் உணவகத்திற்குள் பாய்ந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-81)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-15.02.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.02 | 146.02 |
| பவுண்ட் | பிரிட்டன் | 205.33 | 212.58 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 158.40 | 164.68 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 144.12 | 150.12 |
| டொலர் | கனடா | 102.07 | 106.21 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 100.27 | 105.01 |
| டொலர் | சிங்கப்பூர் | 101.02 | 104.89 |
| ரூபா | இந்தியா | 2.10986 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.5429 |
| குவைத் | டினார் | 482.1703 |
| ஓமான் | ரியால் | 373.7294 |
| கட்டார் | ரியால் | 39.5202 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3679 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1780 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 80 | 80 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 60 | 70 | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 200 | 200 | 200 | 200 | 200 |
| தக்காளி | 50 | 50 | 60 | 60 | 50 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 40 | 35 | 40 | 40 |
| கோவா | 60 | 80 | 90 | 60 | 70 | 80 | 90 |
| கரட் | 200 | 160 | 240 | 240 | 180 | 250 | 150 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 | 70 | 100 | 70 |
| புடோல் | 60 | 40 | 80 | 60 | 40 | 60 | 70 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 50 | 45 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 100 | 80 | 80 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 60 | 70 | 50 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 80 | 100 | 80 | 80 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 100 | 80 | 70 | 12C | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 80 | 70 | 50 | 80 | 70 |
| பயற்றங்காய் | 140 | 120 | 120 | 100 | 90-120 | 80 | 80 |
| லீக்ஸ் | 80 | 100 | 120 | 120 | 80 | 140 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 80 | 100 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 220 | 200 | 240 | 240 | 180 | 240 | 150 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 600 | 600 | 450 | 600 | 1000 |
| போஞ்சி | 80 | 100 | 80 | 120 | 60 | 100 | 70 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 50 | — | 60 | 70 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 30 | 25 | 15 | 30 | 20 |
| தேசிக்காய் | 60 | 50 | 60 | 80 | 50 | 40 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 40 | 50 | 30-40 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 120 | 180 | 140 | 140 | 100 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 50 | 80 | 80 | 50 | 100 | 80 |
| முள்ளங்கி | 20 | 40 | 80 | 40 | 30 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 40 | 30 | 20 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | — | — | — | 100 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## சிறிசபாரத்தினத்தைச் சுட்டுக்கொன்றார், கிட்டு 101

இந்தக்குழுவில் ஈழ தேசிய விடுதலை முன்னணி சிபார்சு செய்யும் 2 பிரதிநிதிகளைச் சேர்த்துக் கொள்ளத் தயார் என்று இலங்கை அரசு அறிவித்தது.

இது குறித்து பிரதமர் ராஜீவ் காந்தி டில்லியில் நிருபர்களிடம் கூறியதாவது,

**உடன்பாடு**

போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழு குறித்து ஏற்பட்டிருந்த சிக்கல் தீர்ந்து விட்டது. இதில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இது ஒரு பெரிய சாதனை. முதல் வெற்றி.

போர் நிறுத்தம் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படவில்லை என்றால் மக்கள் மனதில் எந்த நம்பிக்கையும் ஏற்படாது.

இப்போது போர் நிறுத்தத்தை கடைப்பிடிக்க இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டுள்ளது அங்கு அமைதி திரும்புவதற்கான முதற்படியாகும்.

**தனிநாடு**

இலங்கையில் தனிநாடு (தமிழ் ஈழம்) அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்தியா ஏற்கவில்லை.

இலங்கை அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதே எங்கள் விருப்பம் அந்த வகையில் எங்களால் இயன்ற உதவிகளை செய்யத் தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு ராஜீவ் காந்தி கூறினார்.

**ஜெயவர்த்தனாவுடன் சந்திப்பு**

இந்த நிலையில் கொமன் வெல்த் நாட்டுத்தலைவர்கள் மாநாடு அமெரிக்கா அருகில் உள்ள பகாமா தீவில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் பங்கேற்ற இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா உட்பட 45 நாடுகளின் தலைவர்கள் பகாமா சென்றனர்.

அப்போது பிரதமர் ராஜீவ் காந்தியும் ஜெயவர்த்தனாவும் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பேசினார்கள். இந்த சந்திப்பு 18.10.1985 அன்று நடந்தது.

இலங்கைத் தழிழர் பிரச்சினையை மேலும் நீடித்துக் கொண்டே போவது நல்லது அல்ல. விரைவில் உடன்பாடு ஏற்பட வேண்டும். அதற்கு இந்தியா தன்னால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்ய தயாராக இருக்கிறது என்று ஜெயவர்த்தனாவிடம் ராஜீவ் காந்தி கூறினார்.

பூட்டான் தலைநகரான திம்புவில் முறிந்து போன சமரசப் பேச்சு மீண்டும் தொடர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

**ஈழ தேசிய விடுதலை முன்னணி**

இதற்கிடையே 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கையில் தமிழ்ப் போராளிக் குழுக்கள் ஒரே குடையின் கீழ் திரண்டன. ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய இயக்கங்கள் இணைந்து ஈழ தேசிய விடுதலை முன்னணி (ஈ.என்.எல்.எவ்.) என்ற கூட்டணி உருவாக்கப்பட்டது.

உமாமகேஸ்வரனும் பிரபாகரனும் ஈழ தேசிய விடுதலை முன்னணியில் இணைந்தனர். ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபாவை பிரபாகரன் முதல் முறையாக அப்போது தான் சந்தித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர பூட்டான் தலைநகரம் திம்புவில் நடந்த சமரசப் பேச்சுவார்த்தையிலும் தமிழ்ப் போராளிகள் ஈழ தேசிய விடுதலை முன்னணி என்ற பெயரிலேயே பங்கேற்றனர்.

**மோதல்**

இந்த நிலையில் போராளிக் குழுக்கள் இடையே மோதல் உருவானது. 27.04.1986 அன்று இலங்கைக் கடற்படைத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் படகு ஒன்று சிக்கியது. இதில் விடுதலைப் புலி அருணாவும் இன்னும் சிலரும் உயிரிழந்தனர்.

இந்த அருணா யார் தெரியுமா? 1983 ஆம் ஆண்டு ஜூலை 6 ஆம் திகதி அதிகாலை காங்கேசன்துறை சீமெந்து ஆலைக்குள் இலங்கை இராணுவ அதிகாரிகள் போல உடையணிந்து 5 எக்ஸ்ப்ளோடர்களை எடுத்துக் கொண்டு ஜீப்பில் கிளம்பினாரே சீலன் என்கின்ற சார்லஸ் அந்தோணி- பிரபாகரனின் வலதுகரமான அவர், இராணுவ வீரர்களின் பிடியில் சிக்கி உயிரோடு அவர்களிடம் சிக்கக் கூடாது என்பதால் என்னைச் சுட்டுக் கொன்று விடு என்று அதட்டலாக ஆணையிட்டாரே- அந்தச் சார்லஸ் அந்தோணியை சுட்டுக் கொன்று விட்டு இரத்தக் காயங்களுடன் தப்பினாரே அந்த அருணாதான்.

**முழு அடைப்பு**

உயிரிழந்த அருணாவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் ஏப்ரல் 28 ஆம் திகதி அன்று முழு அடைப்புப் போராட்டம் நடந்தது. இதை மக்கள் முழு மனதுடன் முன் வந்து நடத்தினார்கள்.

ஆனால் இதற்கு 4 நாட்களுக்கு முன்பு 4 சிங்களக் கடற்படையுடன் ஏற்பட்ட மோதலில் ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த 11 பேர் பலியானார்கள். அவர்கள் மறைவுக்கு மரியாதை செலுத்தாத மக்கள், விடுதலைப் புலிகளுக்கு மட்டும் அஞ்சலி செலுத்துவதை ரெலோ இயக்கத்தினரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.


இதனால் 29 ஆம் திகதி முழு அடைப்பு நடத்துமாறு பொது மக்களைக் கட்டாயப் படுத்தினார்கள். இந்தக் கட்டளையை மக்கள் ஏற்கவில்லை. இதனால் ஆத்திரம் அடைந்த ரெலோ இயக்கத்தினர் கல்வியங்காடு பகுதியில் மக்களை கண்மூடித்தனமாகத் தாக்கினார்கள். அதோடு அவர்கள் நிற்கவில்லை அந்தப் பகுதியில் இருந்த விடுதலைப் புலிகளின் தளபதிகள் பஷீர் காக்கா, முரளி ஆகியோரை கைது செய்து அழைத்துச் சென்றனர்.

(தொடரும்)



குண்டு வீச்சில் சேதம் அடைந்த கிளிநொச்சி கடைவீதியின் ஒரு பகுதி.

## பொய்ப் பிரசாரம் செய்யும்
# ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்
## நிதியமைச்சர் அறிவிப்பு



(கொழும்பு)

**பொய்ப் பிரசாரங்களில் ஈடுபடும் ஊடகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**

நிதி அமைச்சில் நேற்று முன்தினம் மாலை நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் விரோத நிலைப்பாடுகளை ஊடகங்களில் பிரசாரம் செய்யும் தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புவது, கடன் பெற்றுக் கொள்வது தொடர்பில் வார இறுதி ஆங்கில பத்திரிகையொன்று வெளியிட்டிருந்த பிரதான செய்தி பொய்யானது.

வெளிநாடுகளிடமிருந்து கடன் பெற்றுக்கொள்ளாது அந்நிய செலாவணியை பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்த நடவடிக்கைகளை சீர்குலைக்கும் நோக்கில் சில தரப்பினர் பொய்யான செய்திகளை பிரசாரம் செய்கின்றனர். பொய்யான செய்திகளை வெளியிடுவதனால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உள்ளிட்டவர்கள் அச்சமடையக் கூடும்.

இவ்வாறான பொய்யான செய்திகளை பிரசுரிக்கும் போது எங்கள் பக்கத்தின் தகவல்களையும் சற்றே கேட்டறிந்து கொள்ளவும்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நாம் நல்லாட்சியை ஏற்படுத்தினோம். ஊடகங்களுக்கு சுதந்திரத்தை வழங்கியிருந்தோம்.

இந்த ஊடக சுதந்திரத்தை மிகவும் மோசமான வகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டாம். அனைத்து ஊடகங்களும் அல்ல சில ஊடகங்கள் எமது வெற்றிப் பயணத்தை தடை செய்ய வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறு பொய்யான செய்தி வெளியிடும் ஊடகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# லசந்தவின் கொலை தொடர்பில் மேலும் 10 பேரிடம் விசாரணை

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க தொடர்பில் மேலும் 10 பேரிடம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புலனாய்வுப் பிரிவினர் இந்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நுவரெலியா பிரதேசத்தைச் சேர்ந்த கிராம சேவை உத்தியோகத்தர் ஒருவர் உள்ளிட்ட 10 பேரிடம் வாக்கு மூலங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் உயிரிழந்த பிச்சை ஜேசுதாசன் வசித்து வந்த கிராம சேவைப் பிரிவில் கடமையாற்றிய கிராம உத்தியோகத்தரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. ஜேசுதாசனுடன் தொடர்புகளைப் பேணியவர்களிடமும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

ஜேசுதாசனின் தேசிய அடையாள அட்டையைத் திருடி அதனைப் பயன்படுத்தி 5 சிம் அட்டைகளைப் பெற்றுக் கொண்ட நபரை கைது செய்ய விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

லசந்த கொலை தொடர்பில் பிச்சை ஜேசுதாசன் என்னும் கராஜ் உரிமையாளரும் மற்றும் கந்தேகெதர பியவன்ச என்ற இராணுவப் புலாய்வுப் பிரிவு உறுப்பினரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பிச்சை ஜேசுதாசன் சிறையில் உயிரிழந்ததுடன், பியவன்ச சட்டமா அதிபரின் உத்தரவிற்கு அமைய விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

லசந்த கொலை தொடர்பிலான விசாரணைகள் நீண்ட காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் கொலையாளிகள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## முக்கிய பிரபு சிறைக்கூட புனரமைப்பு குறித்த செய்தியில் உண்மையில்லை
### சிறைச்சாலை திணைக்களம் சுட்டிக்காட்டு

முக்கிய பிரபு சிறைக் கூடமொன்று புனரமைக்கப்பட்டு வருவதாக வெளியான செய்தி பொய்யானது என சிறைச்சாலை திணைக்களம் அறிவித்துள்ளது. வெலிக்கடைச் சிறைச் சாலையின் முக்கிய பிரபு சிறைக் கூடமொன்று அவசர அவசரமாக புனரமைக்கப்பட்டு வருவதாகவும்,

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரில் ஒருவர் விரைவில் கைது செய்யப்பட்டு அந்தக் சிறைக் கூடத்தில் அடைக்கப்படலாம் என பத்திரிகைகள் மற்றும் இணைய ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. எனினும் இந்த செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாது என சிறைச்சாலை திணைக்களம் அறிவித்துள்ளது.

பொய்யான செய்திகளை வெளியிட்டமை தொடர்பில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரபல நடிகர், அரசியல்வாதி விஜயகுமாரதுங்க, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட வெலிக்கடை சிறைச்சாலையின் எஸ் பிரிவு இவ்வாறு புனரமைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், சரத் பொன்சேகா சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் எஸ் பிரிவு கைதிகளின் பற் சிகிச்சைப் பிரிவாக மாற்றப்பட்டது என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் துசார உபுல்தெனிய ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

சில ஆண்டுகளாகவே இந்தப் பகுதி சிறைச்சாலை பற் சிகிச்சைப் பிரிவாக செயற்பட்டு வருகின்றது. இந்த பற்சிகிச்சைப்பிரிவு அகற்றப்படவில்லை. அதற்குள் பிரபுக்கள் சிறைக் கூடமொன்று கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

பொய்யான செய்திப் பிரசுரம் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை திணைக்களப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## துணை பொலிஸ் அத்தியட்சகர் மட்டுமே இதுவரை கைதானார்

எம்பிலிப்பிட்டி இளைஞன் மரணச் சம்பவம் தொடர்பில் துணைப் பொலிஸ் அத்தியட்சகர் மட்டுமே இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளார் என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 21 உத்தியோகத்தர்களை கைது செய்யுமாறு எம்பிலிப்பிட்டி நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

எனினும், உத்தரவிடப்பட்டு 18 நாட்கள் கடந்துள்ள நிலையிலும் துணைப்பொலிஸ் அத்தியட்சகர் மட்டுமே கைதாகியுள்ளார். ஏனையவர்களிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்களை அழைத்து புலனாய்வு பிரிவினர் விசாரணை நடத்தி வாக்கு மூலங்களை பதிவு செய்து வருகின்றனர். (இ)

## இன்று ஒரு தகவல்
### கஷ்டப்படாமலிருக்க கஷ்டப்படவேண்டும்

அலுங்காமல் குலுங்காமல் அத்தனை வசதிகளையும் அடைய வேண்டும் என்று எண்ணுவது முறையான செயலன்று.

எல்லாம்– எதற்கெடுத்தாலும் பணம் என்று ஆகி விட்ட இந்த உலகில் அதை முறையான வழியில் கணிசமான அளவில் பெறுவதற்கான முயற்சிகளில் உடனடியாக இறங்கியாக வேண்டும்.

செக்கு மாடுகளாகவும் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுபவர்களாகவும் வாழ்பவர்கள் அன்றாடம் மனக் கஷ்டங்களையும் சந்திக்கிறார்கள்.

இந்த மனக் கஷ்டமும் பணக் கஷ்டமும் மிகப் பொல்லாதவை. வெளியுலகத்தால் கேவலமாக எண்ணக் கூடியவை. ஆனால்,

நம் முயற்சியில்–நம்–தொழிலில் மேற் கொள்ளும் கஷ்டங்கள் இருக்கின்றனவே, இவை நமக்குப் பெருமை சேர்க்கக் கூடியவை. உலகோரால் வியந்து போற்றக் கூடியவை.

சிறு சக்கரத்தை இயக்கிப் பெரிய சக்கரத்தைச் சுழலச் செய்யும் தொழில் ரீதியான விஞ்ஞானத் தத்துவம் இருக்கிறதே, இதை வாழ்க்கைப் பாடத்திலும் நாம் அன்றாடம் கண்கூடாகக் காண்கிறோம். ஆனால் ஏனோ உணருவதில்லை.

மேலும் சற்று விளங்கும் வகையில் சொல்ல வேண்டுமானால், உள்ளத்தாலும் உடலாலும் நாம் வலிய மேற்கொள்ளும் சிறு கஷ்டங்கள் இருக்கின்றனவே, அவை நம் வாழ்க்கை என்னும் பெரிய சக்கரத்தைத் தங்கு தடையின்றிச் சுழலச் செய்யக் கூடிய மகத்தான சக்தி வாய்ந்தவை.

இத்தகைய சிறு கஷ்டங்களை மேற்கொள்ளத் தயங்குபவர்களிடம், மனக்கஷ்டம், பணக் கஷ்டம் மற்றும் பல விதக் கஷ்டங்கள் சேர்ந்து, மலையாய் குவிந்து, மலைப்பாக எண்ண வைக்கின்றன.

நம் உடல் மீது பன்னீர்த் துளிகள் சிந்தப் படவேண்டுமானால் உடலில் இருக்கும் வியர்வைத்துளி முதலில் வெளிப்பட்டு விலகிவிட வேண்டும்.

வழக்கமான உத்தியோகம் என்றால் வருமானத்திற்கு வேறு என்ன வழி என்று சிந்திக்க வேண்டும்.

சொந்தத் தொழில் இருப்பின், கஷ்டப்பட கஷ்டப்பட அது விரிந்து கொடுத்துக் கொண்டே போய் நிழல் தரும் ஆல மரமாய் தழைத்தோங்கும்.

இவற்றிற்கெல்லாம் வழி தெரியவில்லையென்றால், நம்முடைய சிந்தனை உண்மையாகச் செலவிடப்படவில்லை, அல்லது உலகத்தை நாம் புரிந்து கொள்ளவில்லை என்று பொருள்.

ஒரு நாளில் எவ்வளவு நேரம் நம் முன்னேற்றத்துக்காக, நம் கஷ்டங்களைப் போக்குவதற்காக நாம் முயற்சி மேற்கொண்டோம்? அல்லது உழைத்தோம்? என்று கணக்கிட்டுப் பார்த்தோமானால், அது மிகமிக குறைவாகவே இருக்கும்.

இந் நிலையில் கஷ்டப்படுகிறேன்என்று புலம்புவதில் என்ன பயன்? உடலும் உள்ளமும் செயலும் சிந்தனையும் கரமும் கருத்தும் இணைந்து செயற்பட ஆரம்பித்துவிட்டால் பணமும் புகழும் வந்து குவியும். கஷ்டம் என்பது கனவாய்ப் போய்விடும்.

லேனா தமிழ்வாணன்

# பாரிய போராட்டம் வெடிக்கும்
## அரசை எச்சரிக்கிறார் தினேஷ்


உள்ளூராட்சி மன்றத் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படாவிட்டால் பாரிய போராட்டம் வெடிக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நீர்கொழும்பு, கொச்சிகடே ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சந்திப்பொன்றில் நேற்று முன்தினம் பங்கேற்ற போது அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாகவே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பற்றிய வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு செய்யத் தவறினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் எதிராக இலட்சக் கணக்கான மக்களைத் திரட்டி வீதியில் இறங்கி போராட்டம் நடத்த நேரிடும்.

முற்போக்கான இடதுசாரி கட்சிகள் அனைத்தினதும் ஒத்துழைப்பின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுடன் இணைந்து கூட்டணியில் பயணிக்க



இணங்குகின்றோம் என 'தினேஷ் குணவர்தன உறுதியளித்துள்ளார். (இ)




# விடாக்கண்டன்!

““ஐயா! இன்று உங்கள் வீட்டு விருந்திற்கு முதல் ஆளாக வந்துள்ளேன். விருந்து தயாரானதும் எழுப்புங்கள்,““ என்ற மகேன், அந்த வீட்டுத் திணணையில் படுத்துக் கொண்டான்.

உள்ளே வந்த சுதன், மனைவியிடம், ““நேற்று வெளியூரில் இருந்து வந்தானே. அவன் இன்று விடிகாலையிலேயே வந்து விட்டான். நம் வீட்டுத் திண்ணையில் படுத்து இருக்கிறான். விருந்து சாப்பிடாமல் போக மாட்டான் போல இருக்கிறது,““ என்று கவலையுடன் சொன்னான்.



““இதற்காகவா கவலைப்படுகிறீர்கள்? காய்ச்சல் வந்தவள் போல நான் படுத்துக் கொள்கிறேன். அவனிடம் என் மனைவிக்குக் காய்ச்சல். நாளை வா, விருந்து சாப்பிடலாம் என்று அனுப்பி வையுங்கள்,““ என்றாள் அவள்.

““நல்ல வழி சொன்னாய்,““ என்று மனைவியைப் பாராட்டினான் சுதன்.

பொழுது விடிந்தது. திண்ணையில் படுத்திருந்த மகேனிடம் சோகமான முகத்துடன் வந்தான் சுதன்.

““என் மனைவிக்குக் காய்ச்சல். படுத்த படுக்கையாகக் கிடக்கிறாள். இந்த நிலையில் அவளால் எப்படிச் சமைக்க முடியும்? நாளை வாருங்கள். கண்டிப்பாக விருந்து சாப்பிட்டுச் செல்லலாம்,““ என்றான்.

““மனைவிக்குக் காய்ச்சல் என்பதற்காக அன்னதானத்தை யாராவது நிறுத்துவார்களா? பதினாறு வகைக் கறிகளோடு, வடை, பாயசம் நான் செய்கிறேன்,““ என்றான் மகேன்.

சுதனின் பதிலுக்குக் காத்திராமல் சமையல் அறைக்குச் சென்றான். சமைக்கத் தொடங்கினான்.

இதை எதிர்பாராத சுதனும், அவன் மனைவியும் திகைத்தனர்.

சிறிது நேரம் சென்றது. சுதன் காதில் மெதுவாக ஏதோ சொன்னாள் அவள். அவன் முகம் மலர்ந்தது.

““சமையலை முடித்து, வாருங்கள். சாப்பிடலாம்,““ என்று அவர்களை அழைத்தான் மகேன்.

““அடுப்படியில் இருந்ததால் புகை படிந்து இருக்கிறீர். ஆற்றிற்குச் சென்று நீராடிவிட்டு வாரும். வரும் போது வாழைத் தோப்பில் இலைகளை அரிந்து எடுத்து வாரும்,““ என்றான் சுதன்.

அவனும் ஆற்றிற்கு சென்று நீராடிவிட்டு, வாழை இலைகளுடன் வந்தான்.

அவன் வருவதை இருவரும் பார்த்தனர்.

உரத்த குரலில் அவள், ““வந்தவர்களுக்கு எல்லாம் சாப்பாடு போட நாம் சத்திரமா நடத்துகிறோம். யாருக்கும் இங்கே சாப்பாடு கிடையாது?““ என்று கோபத்துடன் கத்தினாள்.

““நான் யாருக்குச் சாப்பாடு போடச் சொன்னாலும் நீ போட வேண்டும். எதிர்த்துப் பேசினால் தொலைத்து விடுவேன்,““ என்று பதிலுக்குக் கத்தினான் சுதன்.

இப்படியே அவர்கள் இருவரும் சண்டை போடடபடியே வாயிலைப்பார்ததனர்.

இலைகளுடன் நின்றிருந்த மகேன் அங்கிருந்து அசைவதாகத் தெரியவில்லை.

““நீங்கள் இப்படி மிரட்டினால் நான் என் அம்மா வீட்டிற்குச் சென்று விடுவேன்,““ என்று கத்தினாள் அவள்.

““என்னை எதிர்த்தா பேசுகிறாய்? எங்கே வேண்டுமானாலும் போய்த் தொலை,““ என்று அவளை அடித்தான் சுதன்.

““ஐயோ! என்னை இப்படி அடித்துக் கொல்கிறாரே... கேட்பார் இல்லையா?““ என்று ஒப்பாரி வைத்து அழுதாள்.

அவளை அடிப்பதை அவன் நிறுத்தவில்லை.

அவர்கள் இருவரும் வாயிலைப் பார்த்தனர்.

அங்கே அவனைக் காணவில்லை.

அவளை அடிப்பதை நிறுத்தினான் சுதன்.

““அந்த ஏமாளி நன்றாக சமைத்து வைத்திருக்கிறான். எனக்குப் பசியாக உள்ளது நாம் சாப்பிடுவோம்,““ என்றாள் சுதனின் மனைவி.

இருவரும் சாப்பிட அமரந்தனர்.

““அடியே! எப்படி என் திறமை? உனக்கு வலிக்காமல் அடித்தேனே,““ என்று பெருமையுடன் சொன்னான் சுதன்.

““நான் மட்டும் உங்களுக்குச் சளைத்தவளா? நோகாமல் எப்படி அழுது ஒப்பாரி வைத்தேன் பாரத்தீர்களா?““ என்று பெருமையுடன் சொன்னாள் அவள்.

பரண் மேல் ஒளிந்து இருந்த மகேன், ““நான் மட்டும் உங்களுக்குச் சளைத்தவனா? போகாமல் வந்தேனே,““ என்று அவர்கள் முன் குதித்தான்.

தங்களது திறமை அவனிடம் செல்லாது என்பதை இருவரும் அறிந்தனர். அவனுக்கு விருந்து போட்டு அனுப்பி வைத்தனர்.

(முற்றும்)

## 02.2016 16 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1568 - நெதர்லாந்தின் அனைத்து மக்களுக்கும் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினரால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- 1646 - இங்கிலாந்தின் முதலாவது உள்நாட்டுப் போரின் கடைசிச் சமர் டெவன் நகரில் இடம்பெற்றது.
- 1796 - ஆங்கிலேயர் கொழும்பை டச்சுக்களிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1838 - தென்னாபிரிக்காவில் நாட்டல் என்னுமிடத்தில் சூலு இனத்தவரால் வூட்ரெக்கர்கள் எனப்படும் பிரித்தானிய குடியேறிகள் 300 பேர் வரையில் (பெண்கள், குழந் தைகள் உட்பட) படுகொலை செய்யப்பட்டனர்.
- 1918 - லித்துவேனியா ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1934 - ஆஸ்திரியாவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1937 - வொலஸ் கரோத்தேர்ஸ் நைலோனுக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் படைகள் பிலிப்பைன்சின் கொரெகிடோர் தீவில் தரையிறங்கினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: முதல் தடவையாக அமெரிக்கப் போர் விமானம் டோக்கியோவைத் தாக்கியது.
- 1945 - அமெரிக்கப் படைகள் பிலிப்பைன்சின் பட்டான் குடாவை மீளக் கைப்பற்றினர்.
- 1947 - 80 ஆண்டுகளாக பிரித்தானியர்களாக இருந்த கனேடியர்கள் முதற்தடவையாக கனேடிய குடியுரிமையைப் பெற்றனர். பிரதமர் வில்லியம் லியோன் மக்கென்சி முதலாவது குடியுரிமையைப் பெற்றார்.
- 1959 - ஜனவரி 1 இல் புல்ஜென்சியோ பட்டீஸ்டாவை அதிபர் பதவியில் இருந்து அகற்றிய பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் புதிய தலைவரானார்.
- 1961 - எக்ஸ்புளோரர் 9 (S-56a) விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1983 - ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மற்றும் தெற்கு ஆஸ்திரேலியா மாநிலங்களில் இடம்பெற்ற காட்டுத்தீயில் சிக்கி 71 பேர் கொல்லப்பட்டனர்.
- 1985 - ஹெஸ்புல்லா தீவிரவாத இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1986 - சோவியத் கப்பல் மிகைல் லெர்மொண்டொவ் நியூசிலாந்தில் மூழ்கியது.
- 1988 - சிங்களத் திரைப்பட நடிகர், அரசியல்வாதி விஜய குமாரதுங்க கொழும்பில் சுட்டுக கொலை செய்யப்பட்டார்.
- 2005 - கியோட்டோ உடன்பாடு நடைமுறைக்கு வந்தது.
- 2007: 2000 ஆம் ஆண்டில் தர்மபுரி பேருந்து தீவைப்பு நிகழ்வில் மூன்று மாணவிகளை உயிருடன் எரித்துக்கொலை செய்த அ.தி.மு.க.வினர் மூவருக்கு தூக்குத் தண்டனயும் மேலும் 25 பேருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.

### பிறப்புகள

- 1834 - ஏர்ன்ஸ்ட் ஹேக்கல், செருமானிய உயிரியலாளர், மெய்யியலாளர். (இ. 1919)
- 1909 - மு. நவரத்தினசாமி, பாக்குநீரிணையை நீந்திக் கடந்தவர். (இ. 1969)
- 1934 - தெளிவத்தை ஜோசப், ஈழத்து எழுத்தாளர்
- 1941 - கிம் ஜொங்-இல், வட கொரிய தலைவர். (இ. 2011)
- 1978 - வசீம் ஜாஃபர், இந்தியத் துடுப்பாளர்.

### இறப்புகள

- 1656 - தத்துவ போதக சுவாமிகள் (றொபேட் டீ நொபிலி), கத்தோலிக்கக் குரு, தமிழ்நாட்டில் சமயப்பணி ஆற்றியவர். (பி. 1577)
- 1885 - வீ. இராமலிங்கம், ஈழத்துப் புலவர்.
- 1944 - தாதாசாகெப் பால்கே, இந்தியத் திரைப்பட இயக்குனர், தயாரிப்பாளர். (பி. 1870)
- 1954 - டி. கே. சிதம்பரநாத முதலியார், தமிழக எழுத்தாளர். (பி. 1882)
- 1988 - விஜய குமாரதுங்க, சிங்களத் திரைப்பட நடிகர், அரசியல்வாதி. (பி. 1945)
- 1990 - கெய்த் ஹேரிங், அமெரிக்க ஓவியர். (பி. 1958)

### சிறப்பு நாள்

- லித்துவேனியா - விடுதலை நாள் (1918)

# வீதிப் புனரமைப்பில் புறக்கணிப்பு; மக்கள் முதலமைச்சருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியை புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்கக்கோரி அப்பிரதேச மக்களால் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு விளையாட்டரங்க வீதி மற்றும் சிறு வீதிகள் கடந்த வருட இறுதிப்பகுதி முதல் செப்பனிடப்பட்டு வருகின்றன. தற்போது சிறுவீதிகள் செப்பனிடப்படுகின்ற அதேவேளை குறிப்பாக இரண்டு வீடுகள் உள்ள சிறு வீதி கூட செப்பனிடப்படுகின்ற போதும் 12குடும்பங்களுக்கு மேல் வசிக்கின்ற எமது சிறுவீதி செப்பனிடப்படாது புறக்கணிக்கப்பட்டுள்ளமையை தங்களின் மேலான கவனத்திற்கு பிரதேச மக்களாகிய நாம் முன்வைக்கின்றோம்.

இவ்வாறான முறையற்ற வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வீதி செப்பனிடல் நடவடிக்கைகள் தொடர்பில் தாங்கள் உடனடியாக மேலதிக நடவடிக்கை எடுப்பதுடன் நேர்த்தியான வீதி செப்பனிடல் பணிகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கவும், புறக்கணிக்கப்பட்ட எமது சிறுவீதியை செப்பனிட மேலதிக நடவடிக்கைகளை உடனடியாக தாங்கள் மேற்கொள்ளுமாறு விளையாட்டரங்க வீதி பிரதேச மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம் என அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ்.உள்ளூராட்சித்திணைக்களம்,உதவி ஆணையாளர், யாழ்.அரசாங்க அதிபர், கோப்பாய் பிரதேச செயலாளர், வடமாகாண சபை பேரவைத் தலைவர் யாழ்.மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளர் ஆகியோரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.(இ)

# போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவு ஊடாக போதனாசிரியர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய வீட்டு மின் இணைப்பு, மனை முகாமைத்துவம் ஆகிய பயிற்சி நெறியை அறிமுறை, செயல்முறை ரீதியாக கற்பிக்கக் கூடியவர்களிடமிருந்தே இவ் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியானவர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் கற்பிக்கவிருக்கும் பயிற்சி நெறியையும் குறிப்பிட்டு எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் வடமராட்சி வலயக்கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவில் நேரடியாக ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# இலங்கையில் பெண்களின் தற்கொலை வீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

பெண்களின் தற்கொலை வீதம் அதிகரித்து செல்வதாக ஐக்கிய இராச்சியத்தின் அரச மருத்துவ சபையின் விசேட நிபுணர் அசங்க விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

காதலர் தினத்தை அடுத்து இந்த சதவீதம் வேகமாக அதிகரிப்பதாக, மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் நாளொன்றுக்கு பெண்களின் தற்கொலை வீதம் 4 தொடக்கம் 5 சதவீதமாக உள்ளதாகவும் இதில் 18 தொடக்கம் 26 வயதுக்கு இடைப்பட்ட பெண்களே அதிகமாக தற்கொலை செய்து கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உலக அளவில் பெண்களின் தற்கொலை வீதத்துடன் ஒப்பிடுகையில் இலங்கை மூன்றாவது இடத்தை பெறுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக கொழும்பு, களுத்துறை, நீர்கொழும்பு மற்றும்கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே இந்த நிலைமை அதிகமாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும், மத்திய தரக் குடும்பத்தைச் சார்ந்த பெண்களே இவ்வாறு தற்கொலை முயற்சிகளில் அதிகம் ஈடுபடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# ஆணாக மாறிய அழகு ராணி

அமெரிக்காவைச் சேர்ந்த அழகி அஷ்டன் கொல்பி (வயது- 17) மிஸ் டீன் கொலம்பஸ் போட்டியில் பட்டம் வென்றவர். மிஸ் ஓகையோ அழகு போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளார்.

கடந்த 2 வருடங்களில் மட்டும் இவர் 7 அழகு ராணி போட்டிகளில் பங்குபற்றி பல பரிசுகளை பெற்றுள்ளார். கடந்த சில வருடங்களாக அவருக்கு தனது உடலில் பல மாறுதல் ஏற்பட தொடங்கியது. பெண்ணாக இருப்பதில் சிரமம் ஏற்படுவதாக உணர்ந்தார். பின்னர் அவர் ஆணாக மாற விரும்பினார். அதற்கான டெஸ்டோஸ்டெரன் ஓமோன் சிகிச்சை எடுத்து கொண்டார். (இ)

# காத்தான்குடியில் காதலர்களுக்கு எச்சரிக்கை




(கொழும்பு)

உலகம் முழுவதும் கொண்டாடப்படும் காதலர் தினத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மட்டக்களப்பு காத்தான்குடியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதுடன் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.


தனியார் நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன் இளைஞர் தலைமைத்துவ கற்கை நெறியை தொடரும் மாணவர்களும் சமூக அமைப்புக்களும் இணைந்து மேற்கொண்டனர்.

புறக்கணிப்போம் இந்த கலாசார சீரழிவை எனும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (இ-31)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 634

Search for people, places and things | Nagendram | Home


ஜனார்த்தன்



துஷா



ரகுபரன்




தர்மிஷன்




சிவாஞ்சலி



கிசோனா





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2016~13.03.2016



எந்தக்காரியத்தை எப்படிச் செய்தால் வெற்றி பெறலாம் என்று அறிந்து வைத்திருக்கும் மிதுனராசி நேயரகளே!

மாசிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசி நாதன் புதன் 8இல் மறைந்திருக்கின்றார். 'மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் வந்து சேரும். அதுமட்டுமல்ல, 8க்கு அதிபதி சனி, 6ல் சஞ்சரித்து விபரீத ராஜ யோகத்தையும் உருவாக்குகின்றார்.

எனவே சரிந்து போன உங்கள் தொழில் சமநிலைக்கு வந்து சேரும். இதை உணர்ந்து செயற்பட்டு பொருளாதார நிலையைப் பெருக்கிக் கொள்வீர்கள். அறிந்த நணபர்கள் மட்டுமல்லாமல், புதிய நண்பர்களும் உங்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் அகலும்.

சேமிப்பில் ஒரு பகுதியை எடுத்துச் சொத்துக்கள் வாங்குவதற்கும், வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதற்கும் அர்ப்பணிக்கப் போகிறீர்கள். 'இரு மூன்றில் சனி தான் வந்தால், இன்னல்கள் அகன்று ஓடும்' என்பது ஜோதிட நியதி. எனவே சனியின் சஞ்சார பலத்தால் வரும் துன்பங்கள் வாயிலோடு நின்று விடும். வருமானத்தை உயர்த்த புதிய முயற்சிகளைக் கையாளுவீர்கள்.

பெருமைக்குரிய விதத்தில் பிள்ளைகளும் நடந்துகொள்வர். பிரச்சினைகளும் ஒவ்வொன்றாக நல்ல முடிவிற்கு வரும். அதே நேரத்தில் 6க்கு அதிபதியும், 8க்கு அதிபதியும் இணைந்து செயல்படும் விதத்தில் இந்த மாதத்தின் பிற்பகுதியில் கிரக நிலைகளின் சஞ்சாரம் அமைகின்றது. எனவே பூமி விற்பனையால் பொருளாதார நிலை அதிக அளவு உயரலாம். எதிர்பாராத தனலாபம் இல்லம் தேடிவரும். மாற்று மருத்துவத்தின் மூலம் ஆரோக்கியப் பாதிப்புகள் அகலும்.

உத்தியோகத்தில் மேலிடத்து ஆதரவு கிடைப்பதோடு பதவி உயர்வும், பல நாட்களாகக் கனவு கண்ட சம்பள உயர்வும் இப்பொழுது வந்து சேரலாம். அங்காரகனுக்கும், சனிக்கும் பிரீதி செய்தால் நற்பலன்களைப் பெறலாம்.

**சுக்ர பெயர்ச்சிக் காலம்!**

மாதத்தொடக்க நாளில் மகரததில சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக புத, சுக்ர யோகம செயல்படப் போகின்றது. பொன், பொருள் சேர்க்கைக்கு அஸ்திவாரமிடப் போகின்றீர்கள். மண், மனை வாங்கும்யோகமும் உணடு. மக்கள் செல்வங்களுக்கு சீர்வரிசை வாங்கும் யோகமும் உண்டு. சிக்கனமின்றி செலவழிக்கத் திடீர், திடீரென தன லாபம் வந்து கொண்டேயிருக்கும். பக்க பலமாக இருந்த பெணகளால் ஏற்பட்ட பகை மாறும். பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். மார்ச் 8ஆம் திகதி கும்பத்திற்கு சுகரன் செல்ல இருக்கினறார். இதன் விளைவாக பெற்றோர்களின மணி விழா, பவள விழா, முத்து விழா போன்ற விழாக்களை நடத்தி மகிழ வாய்ப்புக்கைகூடி வரலாம். பூர்வீக சொத்துக்களில் இருந்த பர்ச்சினைகள் அகலும்.

**பொருளாதார விருத்தி தரும் புதனின் பெயர்ச்சி!**

பிப்ரவரி 26ஆம் திகதி கும்பத்தில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். மார்ச் 12ஆம் திகதி மீனத்தில் புதன் நீச்சம் பெறுகின்றார். மீனத தில் புதன் நீச்சம் பெறும் நேரம் மிகச் சிறந்த பலன் கிடைக் கும். புதன் ராசி நாதனாக இருந்தாலும் கேந்தி ராதிபத்ய தோஷம் பெற்றவர் என் பதால் இக் காலம் ஒரு பொற் காலமாக அமையும். எடுத்த காரியத்தை எளிதில் முடிப்பீர்கள். தக்க விதத்தில் தொழில் வளம் மேலோங்கும். அரசு வழிச் சலுகைகளும் எதிர்பார்த்தபடி கிடைக்கும்.




**செவ்வாய் சனி சேர்க்கைக் காலம்!**

6ம் இடத்திற்கும், 11ம் இடத்திற்கும் அதிபதியான செவ்வாய், 8ம் இடத்திற்கும், 9ம் இடத்திற்கும் அதிபதியான சனியோடு பெப்ரவரி 26ஆம் திகதி இணைகின்றார். இந்தக் கிரக சேர்க்கை உங்களைப் பொறுத்தவரை ஆரோக்கியத் தொலலைகளை கொடுத்தாலும், திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்க வைக்கும. திடீர் திருப்பங்களைச் சந்திப்பீர்கள். கட்டிடப்பணி தொடரும். தொழிலில புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். துணையாக இருபபவர்கள் தோள கொடுத்து உதவுவர். உத்தியோக மாற்றங்கள் எதிர் பார்த்தபடி அமையும். உங்கள் கடன் சுமை குறைய உடன் பிறபபுகள வழி வகுப்பர். இம்மாதம் அனுமன வழிபாடு அல்லல் தீர்க்கும். சிவராத்திரியன்று சிவாலய வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

இம்மாதம்மனக்கவலை மாறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பகை மாறி பாசம் கூடும். குருவின் பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால் குழந்தைகளின் சுப காரியப் பேச்சுக்கள முடிவாகும். கணவன மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊர் மாற்றத்தோடு கூடிய உத்தியோக உயர்வு கிடைக்கும். பெற்றோர்களின் ஆதரவு திருப்தி தரும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் பொது நலத்தில இருப்பவர்களுக்கு வந்து சேரும். கடல் கடந்து செல்லும் யோகத்தை யோசிக்காது ஏற்றுக் கொள்வது நல்லது. சிவபெருமானை வழிபடுவதன் மூலம் சிறப்புகளைக் காணலாம்.

## உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டும் நேரம்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



சலசலப்பான வாழ்க்கையில் கலகலப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கடக ராசி நேயர்களே!

மாசி மாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, யோசித்து செயல்படுவதே நல்லது. பாசத்தோடு பழகியவர்கள் கூட திடீரென குணம் மாறலாம். 2இல் ராகுவும், குருவும் சஞ்சரிப்பது மட்டுமல்ல 2க்கு அதிபதியாக சூரியன் 8ம் இடத்தில் அல்லவா சஞ்சரிக்கின்றார். எனவே குடும்பச்சுமை கூடுதலாக இருக்கும். கொள்கைப் பிடிப்பைத் தளர்த்திக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

அஷ்டமத்தில் கேதுவும் அடியெடுத்து வைத்திருப்பதால் சர்ப்ப கிரகத்தின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கின்றது. சுயதொழில் செய்பவர்கள் உற்பத்தி செய்த பொருள் விற்கவில்லையே என்றும் வாங்கி விற்பவர்கள் சரக்கு தேங்கி நிற்கிறதே என்றும் கவலைப்படுவர். நாணயப் பாதிப்பு ஏற்படுமோ என்ற பயம் உருவாகலாம். இருந்தாலும் தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகம் பெற்றவர்கள் நீங்கள். தெளிந்த சிந்தனை உங்களுக்கு உண்டு. திறமை மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருப்பர்.

எனவே மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகிவிடும். எதிர் கொள்ளும் பிரச்சினைகள் பெரிதாகத் தோன்றினாலும் பிறகு படிப்படியாகக் குறைந்து உங்களுக்கு சாதகமாக முடியும். 6க்கு அதிபதி குரு வக்ரம் பெற்றுச் சஞ்சரிப்பது யோகம் தான். ஊருக்கு நன்மை செய்ய முற்படுவீர்கள். அதனால் வீண்பழிகள் ஏற்பட்டாலும் அதைப் பற்றிக் கவலைப்படமாட்டீர்கள். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும்.

ராகு கேதுக்களுக்கு பிரீதி செய்வதன் மூலம் மன நிம்மதியையும், மகிழ்ச்சியையும் வரவழைத்துக் கொள்ள இயலும். அதே நேரத்தில் பார்க்கும் குருவை பலப்படுத்துவது நல்லது. முல்லைப்பூ மாலை அணிவித்து குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டால் நல்ல வாய்ப்புகள் வந்து கொண்டேயிருக்கும். இரண்டில் சஞ்சரிக்கும் குரு திரண்ட செல்வத்திற்கு உத்தரவாதம் கொடுக்கும்.

**சுக்ர பெயர்ச்சிக் காலம்!**

உங்கள் ராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் சப்தம ஸ்தானத்தில், மாதத்தின் தொடக்க நாளில் சஞ்சரிக்கப் போகினறார். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அருகில் இருப்பவர்களின் ஆதரவு கிடைகக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்கும் வாய்ப்பு சிலருக்கு கைகூடும். திடீர் மாற்றங்களை சந்திக்க நேரிடலாம். வெளிநாடு அல்லது அடுத்த மாநிலத்தில் பணி புரிய ஒரு சிலருக்கு வாய்ப்புகள் கூடிவரும். மார்ச் 8ஆம் திகதி கும்பத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். இக் காலம் ஒரு பொற் காலமாக அமையும். கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். அடிப்படை வசதி களைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

**பொருள் வரவைப் பெருக்கும் புதனின் பெயர்ச்சி!**

பிப்ரவரி 25ஆம் திகதி கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். மார்ச் 12ஆம் திகதி மீனத்தில் நீச்சம் பெறப் போகின்றார். 3, 12க்கு அதிபதி நீச்சம் பெறுவதும், மறைவதும் யோகம் தான். தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர். வெளிநாடு செல்லும் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உயர்வும், ஊதிய உயர்வும் எதிர்பார்த்தபடி கிடைக்கும்.




**செவ்வாய் சனி சேர்க்கைக் காலம்!**

பெப்ரவரி 26 ஆம் திகதி விருச்சிக ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். அங்குள்ள சனியோடு இணைவது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படலாம். வாரிசுகளின் எதிர காலநலன் கருதி தீட்டிய திட்டங்களில் மாற்றம் ஏற்படும். வரன்கள் கை நழுவிச் செல்லலாம். கரம் குளிர சம்பாதித்தாலும் மிச்சம் வைக்க முடியவில்லையே என்று கவலை ப்படுவீர்கள்.

பரிகாரம் மூலம் பலன் பெற வேண்டிய நேரமிது. இம்மாதம் விநாயகர் வழிபாடு வெற்றியை வழங்கும். சிவபெருமான் வழிபாட்டை சிவராத்திரியன்று மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

வழிபாட்டின் மூலமே வளர்ச்சியைக் கூடடிக்கொள்ள வேண டிய மாதமாகும். எட்டில் கேது இருப்பதால் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசிதது்ச் செய்வதே நல்லது. விரயங்கள் கூடும். வீடு மாற்றச் சிந்தனை மேலோங்கும். அரை குறயாக நின்ற பணிகளை தொடர முடியவில்லையே என்று கவலைபபடுவீர்கள். கணவன் மனைவிக்குள ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்லவும். பிள்ள்ளைகளை உங்கள மேறபார்வையில் வைத்துக கொளவது நல்லது. சனி செவ்வாய் சேர்கைக காலத்தில் உறவினர் பகை அதிகரிக்கலாம். மனநிம்மதி குறையாதிருக்க சிறப்பு வழிபாடுகளை தேர்ந்தெடுத்துச் செய்வது நல்லது. உங்கள் பெயரில் சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை ஏற்படும். துணிவும், தன்னம்பிக்கையும் உங்களுக்கு கைகொடுக்கும்.

## திடீர் இடமாற்றம் தித்திக்க வைக்கும்!

(தொடரும்)


# பட்டம் விடும் வயோதிபர்

"கப்பல் பட்டம் மேலே பறக்குது அதே பட்டம் கடலிலும் ஓடுது" 30 அடி பட்டம் கட்டி பறக்கவிட்ட 96 வயதான வல்வெட்டித்துறை உதய சூரியன் வீதியைச் சேர்ந்த துரைசாமி நவரத்தினத்தின் சாதனை இவ்வருடமும் நினைவு கூரப்படுகின்றது. இவர் கடலில் செல்லும் கப்பலைப்போன்று பட்டம் கட்டி அதை வானில் பறக்க விட்டார். இதற்காக இவர் பலராலும் கௌரவிக்கப்பட்டு பரிசில்களும் பெற்றார்.

இதனைவிட கடந்த காலங்களிலும் இவரது சாதனைக்குரிய பட்டங்கள் வானில் பறக்க விடப்பட்டிருந்தன.








# உரிமையாளர் இல்லாத காணிகளில் டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு நோட்டீஸ்

## 3 நாட்களுக்குள் 021 222 2645 இற்கு அறிவிக்க அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் நெறிப்படுத்தலுக்கு அமைவாக டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் நாடு பூராகவும் தேடி அழிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையூடாக இது தொடர்பான அறிவித்தல் நோட்டீஸ் வீடுகளில் எவரும் இல்லாத நிலையில் அங்கு ஒட்டப்பட்டு வருகின்றன.

அந்த நோட்டீசில் "இந்த வளவில் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய இடங்கள் இருக்கிறதா?என பரிசீலனை செய்ய டெங்கு பரீட்சகர்கள் இன்றைய தினத்தில் வருகைதந்த போதும் இந்த இடம் மூடப்பட்டிருந்ததால் இங்கு நுழைய முடியவில்லை.இந்த வளவில் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய இடங்கள் இல்லை என உறுதி செய்து 3நாட்களுக்குள் யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு தொலைபேசி எண் 021 222 2645 என்னும் இலக்கத்தின் ஊடாக அறிவிக்கவும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கவனிப்பாரற்று காணப்படும் காணிகளில்டெங்குநுளம்புகள்பெருகுவதனால் அவ்வாறான காணிகள் இனங்காணப்பட்டு அங்கு பனர்கள் கட்டப்படுவதுடன் அவ்வாறான காணிகளை அரசாங்கம் பொறுப்பெடுக்க வேண்டும் என சிபார்சு செய்யவுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் பிரதம மருத்துவ அதிகாரி டாக்டர் றுவான் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாருடைய கவனிப்பும் இல்லாது காணப்படும் காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்கு மாறுசிபார்சுசெய்வதன் ஊடாக உரிமையாளர்கள்உடனடியாக பதிலளிக்க முற்படுவார்கள்.

இவ்வாறான காணிகளை அரசாங்கம் சுவீகரிப்பதற்கு கொழும்பு மாநகரசபை சிபார்சு செய்வது தொடர்பான அறிவித்தல்கள் ஏற்கனவே பல இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

டெங்கு நுளம்புகள் சட்டத்தின் பிரகாரம் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களைத் துப்புரவு செய்வதற்கு 14 நாட்கள் காணி உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உரிமையாளர் கோரிக்கை விடுத்தால் மேலும் 14நாட்கள் வழங்கப்படும்.அத்துடன் குறித்த பகுதியை பரிசோதிப்பதற்கான அனுமதியும் பெறப்பட்டிருக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

டெங்கு நுளம்புகள் பெருக்கம் குறித்து பொதுச்சுகாதார பரிசோதகர் சங்கத் தலைவர் உப்புள் றோகண தெரிவிக்கையில்,

முதலீடுகளாக விலைக்கு வாங்கிவிடப்பட்டுள்ள காணிகள் மற்றும் உரிமையாளர்கள் வெளிநாடுகளிலுள்ள காணிகள் என்பவை கவனிப்பாரற்றுக் காணப்படுவதால் அவை டெங்கு நுளம்புகள் பெருகுவதற்குஏதுவாகஅமைந்துள்ளன. கவனிப்பாரற்றுக் காணப்படும் காணிகளின் உரிமையாளர்களை கண்டு பிடிப்பது மிகவும் சிரமம் நிறைந்தஒன்றாகமாறியிருக்கின்றது.

காணிக்கு அருகில் வசிக்கும் அயலவர்களைக் கேட்டால் உரிமையாளர்கள் தூர இடத்தில் வசிப்பதாக, வேறு நகரில் அல்லது வெளிநாட்டிற்குச் சென்று விட்டதாகவோ தெரிவிக்கின்றனர்.

இதன் விளைவாக போதிய தகவல்கள் இல்லாமையால் வழக்குகளைப் பதிவு செய்ய முடியாதுள்ளதுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

மேற்படி காணிகள் தொடர்பானதகவல்கள் தெரிந்திருந்தால் கிராம உத்தியோகத்தர்களிடம் இருந்து தகவல்கள் கோரப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3)



கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பின் 2 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட சிறப்பு செயலமர்வு ஒன்ற அண்மையில் கைகொடுக்கும் நிறுவனத்தில் நடைபெற்றது. இச் செயமர்வில் இங்கிலாந்தில் இருந்து வருகை தந்த உள வள வைத்திய நிபுணர்கள் கந்தையா சிவகுமார் கலந்து கொண்டிருந்தார்.

(படம் (சித்தங்கேணி செய்தியாளர்)

# செய்தித்துளிகள்

## தள்ளாடி நடக்கும் வயோதிபரிடமிருந்து ஒன்றரைக் கிலோ கிராம் கஞ்சா மீட்பு

மொனராகலை, ஹூலந்தாவ சந்தியிலுள்ள பிபிலை பேருந்து தரிப்பு நிலையத்தில் ஊன்றுகோலுடன் நின்றிருந்த 76 வயதான முதியவர் ஒருவரிடமிருந்து ஒன்றரை கிலோ கிராம் காய்ந்த கஞ்சா மொனராகலை பொலிஸாரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளது.

வெல்லவாய, பலஹருவ பிரதேசத்திலிருந்து வந்த இவர் ஹூடலந்தாவ சந்தியில் இறங்கி மகியங்கனை பேருந்திற்காக காத்திருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஊன்று கோலுடன் தள்ளாடி நடக்கும் இந்த முதியவர் மூலமாக வேறொருவர் இந்த கஞ்சாவை மகியங்கனை அல்லது பிபிலைக்கு கடத்த முயன்றதாக சந்தேகம் எழுந்துள்ளதாகவும், இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் மொனராகலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(இ)

## முதலைக்கு இரையாகி பெண் பலி

கிரிந்தி ஓயாவுக்கு குளிக்கச் சென்ற பெண்ணொருவர், முதலைக்கு இரையாகி உயிரிழந்துள்ளார். திஸ்ஸ மகாராமை, கோணகமுவ, கோன்வெலேணப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றதாகப்பொலிஸார் தெரிவித்தனர்.

கோணகமுவப் பகுதியைச் சேர்ந்த62வயதானபெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக திஸ்ஸ மகாராமைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற கொண்டு வருகின்றனர்.(இ)

## உணவு விஷமானதில் 20 மாணவர்கள் மினுவாங்கொடை வைத்தியசாலையில்

காலை உணவு விஷமானதில் 20 மாணவர்கள் மினுவாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று காலை பலபோவ கனிஷ்ட வித்தியாலயத்தில் வழங்கப்பட்ட காலை உணவே இவ்வாறு விஷமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகம் தெரிவித்துள்ளது,

8 மற்றும் 9 வயதான மாணவர்கள் காலை உணவை உட்கொண்ட பின்அவர்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டதாகவும், இதனை அடுத்து இவர்கள் மினுவாங்கொடை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தக்காளி மற்றும் நெத்திலிக்கருவாடு சேர்க்கப்பட்ட உணவையே இவர்களுக்கு வழங்கியதாகவும் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## கண்டியில் காயங்களுடனான சடலம் மீட்பு

கண்டி - சில்வெஸ்டர் ஆரம்பப் பாடசாலை பிரிவுக்கு அருகில் இருந்து நபரொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி சடலம் நேற்று காலை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சடலம் வாழைச்சேனை பிரதேசத்தை சேர்ந்த நபருடையது என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், சடலத்தில் காயங்களுடனான இரத்தம் காணப்படுவதால் இது கொலையாகவும் இருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(இ)

## கைக்குண்டு வீச்சு இருவர் கைது

திருகோணமலை, நானகாம் கட்டைப் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது கைக்குண்டு வீசப்பட்டமை தொடர்பில் 40, 44 வயதுடைய இரண்டு பேரை சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று திங்கட்கிழமை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஆட்டோ சாரதியொருவரினுடைய வீட்டின் மீதே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இவ்வாறு வீசப்பட்ட கைக்குண்டு வீட்டில் பட்டு வெடித்துள்ளது. இதன்போது உயிர் ஆபத்து எதுவும் ஏற்பட வில்லையென்பதுடன், வீட்டுகளுக்கு சிறிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த அசம்பாவிதத்துக்கு தனிப்பட்ட பிரச்சினை காரணமென விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## யானைக்குட்டி வளர்த்த தேரருக்கு பிடியாணை

(கொழும்பு)

பொல்ஹென்கொடயிலுள்ள ஆலன் மத்தினியராமய விகாரையில், சட்டவிரோதமான முறையில் யானைக் குட்டியொன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுக்காக, வண.உடுவே தம்மாலோக்க தேரரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு, சட்டமா அதிபர் உத்தரவிடடுள்ளார்.

அவரை கைது செய்வதற்கு முன்னர், அவரிடமிருந்து வாக்குமூலமொன்றை பெறுமாறு சட்டமா அதிபர் பணித்துள்ளதாக குற்றபபுலனாய்வு திணைக்கள அதிகாரிகள், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற நீதவான நிஷாந்த பீரிஸூக்கு அறிவித்துள்ளனர். (இ)


# புதிய அரசியல் திட்டம் தயாரிப்பதில் தேசிய, சர்வதேச அனுபவங்கள்

அரசியல் திட்டம் என்பதை அர சாங்கத்தின் அதிகாரங்கள் ஆளப் படுவோரின் உரிமைகள் இவ்விரு பகுதியினருக்கும் இடையேயான தொடர்புகள் என்பவற்றை வழிப் படுத்தும் தத்துவங்களின் தொகுப்பு எனலாம்.

அரசியல் திட்டம் அல்லது அரசி யல் யாப்பு ஒன்றை நாடொன்று ஆக்குவதாக இருந்தால் புதிய சமு தாய மாற்றமொன்று ஏற்பட்டிருக் கும் பொழுது உலகப் போர் அல் லது உள்நாட்டுப் போர் ஒன்றிலி ருந்து மீள் எழும்போது அந்நாடு புதிய அரசியல் திட்டம் அல்லது அரசியல் யாப்பு ஒன்றை ஆக்க முனைகின்றது.

உலகில் எழுதாத யாப்பைக் கொண்ட பிரித்தானியா 1653 இல் அரசாங்கத்தின் கருவி எனும் சட் டத்தை உருவாக்கியது. 1688 இல் நடந்த புரட்சியின் போது உரிமை கள் பட்டயம் ஒன்றை உருவாக் கியது. இவை அரசியல் திட்டமொன் றின் இயல்புகளைக் கொண்டிருந் தன.

1776 இல் ஏற்பட்ட அமெரிக்க சுதந்திரப்போரை அடுத்து 1787 இல் புதிய அரசியல் திட்டமொன்று உருவாக்கப்பட்டது. இதில் ஜோர்ஜ் வாஷிங்டன், தோமஸ் ஸ்பெயின், விஞ்ஞானி பெஞ்சமின் பிராங் ளின் என்போர் முக்கியமானவர்கள்.







ரஷ்யாவில் 1917 ஒக்டோபர் புரட் சியை அடுத்து அதன் தலைவர் வி.இ.லெனின் புதிய அரசியல் திட்ட மொன்றை முன் வைத்தார்.

அதில் நாட்டினது பெயரே சோவி யத் சோசலிச குடியரசுகளின் ஒன்றி யம் என அழைக்கப்பட்டது.தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டது.

இவ் அரசி யல் திட்டத்தின் அடிப் படையில் யு.எஸ்.எஸ்.ஆர்.மிகக் குறுகிய காலத்தில் வல்லரசாகி காலப் போக்கில் அதன் திரிபுவாதக் கொள்கையால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. 1990 களில் அது பல நாடுகளாகச் சிதறுண்டது.

1949 இல் சீனப்புரட்சியை அடுத்து மக்கள் சீனக் குடியரசு புதிய அரசியல் திட்டத்துடன் அறிமுகமா னது. அவ்வாறே எமது அயல் நாடான இந்தியா 1947 இல் சுதந்திரம் அடைந்த போது 1950 களில் உருவாக்கப் பட்ட இந்தியக் குடியரசு அரசியல் யாப்பில் மதச்சார்பின்மை, மொழி வாரி மாநிலங்களின் சுயாட்சி என் பன உறுதிப்படுத்தப்பட்டன.

1994 இல் தென்னாபிரிக்கா வில் பெரும்பான்மை கறுப்பின மக்களுக்கும், சிறுபான்மை வெள்ளை யின மக்களுக்கும் நெல்சன் மண் டேலா தலைமையில் நல்லிணக்கம் ஏற்பட்ட பொழுது அங்கு புதிய யாப்பை உருவாக்குவதற்கான குழு ஒரு வருட காலத்தில் 17ஆயிரத்திற்கும் மேற் பட்ட கலந்துரையாடல்களையும் 14 ஆயிரத்திற்கு மேற்பட்ட தனிப் பட்ட மனுக்களையும் திரட்டியதாக ஆய் வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இவ்வாறான சர்வதேச அனுப வங்களின் அடிப்படையில் எமது நாட்டின் அனுபவத்தை ஆராய் வோம்.

இலங்கை 1947 சோல்பரி அர சியல் திட்டத்தினைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தலும் சுதந்திர மும் கிடைத்த போதும் காலனித்துவ தொடர்புகளில் இருந்து தன்னை முழுமையாக விடுவித்துக் கொள்ள வில்லை.

பிரித்தானிய மன்னரை ஒத்த அதிகாரங்கள் மகாதேசாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

1956 இல் பஞ்ச சக்திகளின் பங்களிப்புடன் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க பிரதமரானார். இவர் நாட்டு மக்களின் அபிலாசை களைப் பிரதிபலிக்கும் வகையில் ஒரு புதிய அரசியல் திட்டத்தை உரு வாக்கும் வகையில் ஒரு கூட்டுக் குழுவை அமைப்பதற்கான பிரே ரணையை பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார்.

அதில் அரசியல் ரீதியாக மாற் றுக் கருத்துக் கொண்டோர் மற்றும் எல்லா இன, மத குழுக்களின் பிரதி நிதிகளுக்கும் இடம் கொடுத்தார்.

1959 இல் இவர் கொலையுண் டதால் இம் முயற்சி கைவிடப்பட்டது.

இலங்கையில் புதிய அரசியல் திட்டத்திற்கான பொருத்தமான காலம் இது எனலாம். பண்டாரநாயக்கா கொலை செய்யப்படாமல் இருந் திருந்தால் இலங்கையின் தலைவிதி வேறொன்றாகவே இருந்திருக்கலாம்.

பண்டாரநாயக்கவின் இம் முயற்சியை 1970 களில் ஆட்சிக்கு வந்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் முன் னெடுத்தது. முழுப்பாராளுமன்ற மும் அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்பட்டு யாப்பு வரையும் குழு வின் தலைவராக கலாநிதி கொல்வின் – ஆர்.டி.சில்வா நியமிக் கப்பட்டார்.

1972 இல் வெளியிடப்பட்ட புதிய யாப்பு மே மாதம் 22 ஆம் திகதியை குடியரசு தினமாக்கியது.

இலங்கையின் பெயர் சோசலிச ஜனநாயகக் குடியரசாகியது. இவ் யாப்பு பொருளாதார ரீதியாக முற் போக்கானதாக அமைந்த போதும் மொழி, இனம், மதம் சார் பிரச்சினை களை தீர்க்க தவறி விட்டது.

1935 இல் இலங்கையின் முழு மையான சுதந்திரத்துக்காகப் போரா டிய டாக்டர் என்.எம்.பெரேரா, டாக் டர் கொல்வின், ஆர்.டி. சில்வா, பீற்றர் கெளமன், டாக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்க போன்றவர்களால் காலத்திற்கு ஏற்ப முழுமையான குடியரசு யாப்பை உருவாக்க முடி யாமல் போனமை வரலாற்றுத் தவறே!

1957 ஜுன் 5 ஆம் திகதி சிங் கள்ம் மாத்திரம் சட்டம் வந்த போது **ஒரு மொழி இருநாடு, இரு மொழி ஒரு நாடு** என்று சொன்னவர்கள் அதே தவறை 1970 களில் செய் தார்கள்.

இலங்கைத் தழிழரசுக் கட்சி முன்வைத்த சமஷ்டிப் பிரேரணை நிராகரிக்கப்பட்டது. அவ்வாறே ஐக் கிய தேசியக் கட்சியின் பிரேரணை யும் புறந்தள்ளப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

1970 இல் தரப்படுத்தல், 1972 இல் அரசியல் யாப்பை அடுத்து தமிழ் மாணவர் பேரவை உருவானது. இதிலிருந்து ஆயுதமேந்திய பல இரகசிய இயக்கங்கள் உருவாகி வளர்ந்தன.

1977 இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட் சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் 5 வருடங்களில் புதிய அரசியல் திட்டத்தைக் கொண்டு வருவதற்காக பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற் றியது. டாக்டர் என்.எம்.பெரேரா தனது ஆய்வொன்றில் ஒரு நாடு ஒரு அரசியரல் திட்டத்திலிருந்து இன்னொரு அரசியல் திட்டத்திற்கு அடிக்கடி மாறக்கூடாது என்பது அரசியலில் ஏற்றுக் கொள்ளப் **பட்ட தத்துவம் என்றும் அத்தகைய தொடர்ச்சியான மாற்றங்கள், உறுதி யின்மை, பாதுகாப்பின்மை, பணி வின்மை என்பவற்றை ஏற்படுத் தும் என்றார்.**

ஆனால் ஜே.ஆர்.ஜெவர்த்தன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை, விகிதாசார தேர்தல் முறை என்பவற்றுடன் புதிய அர சியல் திட்டத்தை 1978 இல் நிறை வேற்றினார்.

நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் நாட்டை சிங்கப்பூர் பாணி யில் துரிதமாக அபிவிருத்தி செய் வேன் என்றார்.

ஆனால் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெவர்த்தன தனது நிறைவேற்று அதிகாரத் தின் மூலம் தொழிற்சங்கங்களை ஒடுக்கினார். அரசியல் கட்சிகளை பலவீனமாக்கினார்.

தமிழ்த் தீவிரவாத இயக்கங் களை ஒடுக்குவதற்காக 1979 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட் டத்தை கொண்டு வந்தார்.

1987 இல் இந்திய– இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராக கட்சிக்குள் ளேயும், வெளியேயும் எதிர்ப்புக்கள் கிளம்பிய போது நிறைவேற்று அதிகாரத்தின் மூலமே அதனைத் தனக்குச் சாதகமாக நிறைவேற்றினார்.

இவ்வாறாக அவருக்கு பின்னர் வந்த அனைத்து ஜனாதிபதிகளும் நிறைவேற்று அதிகாரத்தை பயன் படுத்த தவறவில்லை.

இறுதியாக மகிந்த ராஜபக்ஷ வின் ஆட்சிக் காலத்தில் நாடு பூராக உட்கட்டமைப்பு வசதிகள்அதிகரித்த போதும் குடும்ப ஆட்சி, அரச சொத் துக்களை துஸ்பிரயோகம் செய்தல், ஊழல் மோசடிகளுக்கு இடம் கொடுத் தல், பாரிய அழிவுகள் மூலம் யுத் தத்தை வென்றமை போன்ற செயற்பாடு கள் அவரின் மோசமான சர்வாதி காரத்தை எடுத்துக் காட்டியுள்ளன.

விகிதாசாரத் தேர்தல் முறை சிறிய கட்சிகளின் மற்றும் சிறு பான்மை இனங்களின் பிரதிநிதித் துவத்துக்கு நன்மை பயப்பினும், விருப்பு வாக்கு முறை வேட்பாளர் களிடையே போட்டி, பூசல், வன் முறைகளைத் தூண்டியமை எல் லோரும் அறிந்த விடயமே.

இந் நிலையிலேயே 2015 இல் தெரிவு செய்யப்பட்ட புதிய ஜனா திபதியும் புதிய பாராளுமன்றமும் இணைந்து புதிய அரசியல் திட்ட மொன்றை உருவாக்க முனைந் துள்ளன.

அதற்காக பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற் றுவதற்கான பிரேரணையை பிர தமர் முன்வைத்துள்ளார்.

அதில் முக்கியமான விடயங்க ளாக நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தல் , தேர்தல் முறையை மாற்றுதல், இனப் பிரச் சினைக்கான தீர்வு என்பன உள் ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கை வரலாற்றில் என்று மில்லாதவாறு சுதந்திரக்கட்சியும் ஜக்கிய தேசியக் கட்சியும் இணைந்து ஆட்சியமைத்துள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய சிறு கட்சிகளும் அரசிற்கு ஆதரவளிக்கின்றன.

ஜனாதிபதி கூறுவது போல தெற்கிற்கு சமஷ்டி என்ற பதமும் வடக்கிற்கு ஒற்றையாட்சி என்ற பதமும் வெறுப்பாக உள்ளன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் **தற்பொழுது 68% வீதமான சிங்கள மக்கள் அதி காரப் பகிர்வை ஏற்பதாக கருத் துக் கணிப்புக்கள் மூலம் தெரிய வந்துள்ளன என்கிறார்.**

கட்சிகள் மற்றும் அமைப்புக் கள் அரசியல் திட்டம் தொடர்பாக தங்கள் பிரேரணைகளை முன் வைப்பார்கள்.

அரசியல் திட்டம் தொடர்பாக கருத்தறியும் குழு மாவட்ட ரீதியாக மக்களின் அபிப்பிராயங்களை வாய் மூலமும் எழுத்து மூலமும் பெற்று வருகின்றன.

இவையாவற்றையும் அடிப்படை யாகக் கொண்டு நல்ல உள்ளடக் கத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பு அரசியல் திட்டக்குழுவை சாா்ந்ததாகும்.

எனவே நாட்டின் நீண்ட காலப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய, நடைமுறை சாத்தியமான, 21 ஆம் நூற்றாண்டிற்கு பொருத்தமான அரசியல் திட்டமே எமது வெற்றிக்கு வழியாகும்.

பி.முத்துலிங்கம்
ஓய்வு நிலை
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
தென்மராட்சி.

ஒவ்வொரு மனிதனும் 'பிறந்தது வெற்றி பெறத்தான். தோல்வி அடைய அல்ல.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சுருதியை மாற்றும் சம்பந்தர் அரசுமீது நம்பிக்கை இழந்தாரா?

2016ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டுவிடும் என்று கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் ஒற்றை ஆட்சியின் கீழ் அரசு தருகின்ற தீர்வை பெற்றுக் கொள்வதற்குத் தயாராக இருந்தார்.

எனினும் இப்போது சம்பந்தரின் பண்ணும் பதமும் மாறத் தொடங்கியுள்ளது.

தனது காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருந்த சம்பந்தர் அதற்காக பல்வேறு விட்டுக்கொடுப்புகளை அரசுக்கு செய்திருந்தார்.

வரவு செலவுத்திட்டத்தை எதிர்க்கட்சித் தலைவரும் அவர் சார்ந்த கட்சியினரும் ஆதரித்ததன் மூலம் இலங்கைப் பாராளுமன்றத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி இருந்தார்.

இதற்கு மேலாக இந்த நாட்டின் சுதந்திர தின விழாவிலும் சம்பந்தர் பங்கு பற்றி தமிழ் மக்களின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த முற்பட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் என்பதற்காக எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டும் என்றில்லை என்று கூட சம்பந்தர் கூறும் அளவுக்கு இந்த ஆட்சியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் என நம்பியிருந்தார்.

ஆனால் இப்போது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் தனது சுருதியை மாற்றத் தலைப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் நடந்த கட்சி மாநாட்டில் சமஷ்டி முறையிலான தீர்வை சம்பந்தர் வலியுறுத்தியதும் சகலரும் அதிர்ந்து போயினர்.

இதனைத் தொடர்ந்து இனப்பிரச்சினைக்கான தீர்வு வலிமையானதாக இருக்கவேண்டும் என்பதில் அவர் கொண்டுள்ள நிலைப்பாடுகள் அவரின் கருத்துக்களாக வெளிப்படத் தொடங்கியுள்ளன.

திவயின என்ற சிங்களப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் ஆங்கிலேயர்கள் சிங்களவர்களிடம் கையளித்த தமிழர்களின் நாடு மீண்டும் எங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று சம்பந்தர் கர்ச்சித்திருப்பது அதிர்ச்சியான உண்மை.

ஆங்கிலேயர்கள் சிங்களவர்களிடம் கையளித்த தமிழர்களின் நாடு மீளவும் எங்களிடம் தரப்பட வேண்டும் எனில் அது தனிநாடாகக்கூட இருக்கலாம் என்பதே பொருள்.

ஆக, இணக்க அரசியல் அவசியமானது. இலங்கை அரசை எதிர்த்து நாம் எதையும் பெற்றுவிட முடியாது என்று தமிழ் மக்களுக்கு அறிவுரை கூறிய சம்பந்தர் இப்போது திடீர் என தனிநாடு கேட்கும் அளவில் தனது நிலைப்பாட்டை மாற்றியமை எதற்கானது?

இலங்கையின் நல்லாட்சி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமாட்டாது என்றா? அல்லது நாங்கள் கூடுதலாகக் கேட்டோம். அவர்கள் குறைவாகத் தந்தார்கள். தொடர்ந்து முயற்சிப்போம் என்று சொல்லி தமிழர்களை ஆற்றுப்படுத்துவதற்கான பூர்வாங்க முயற்சியா? அல்லது தமிழ் மக்கள் பேரவையின் உதயமா? எதுவுமே புரியாமல் உள்ளது.

இருந்தும் நல்லாட்சியில் சம்பந்தருக்கு நம்பிக்கையீனம் ஏற்படத் தொடங்கியுள்ளது என்று கூறுவதைத் தவிர இப்போதைக்கு மேலதிகமாகச் சொல்ல எதுவுமில்லை.

# காணாமல் போனோர் தொடர்பில் அவசர சான்றிதழ் நியாயமாகாது

## நியாயமான ஆய்வு அவசியம்-டக்ளஸ்

காணாமற்போன எமது உறவுகள் தொடர்பில் அவசரமாக சான்றிதழ்கள் வழங்குவதென்பது எமது மக்களுக்கான நியாயமாக அமையாது.

எனவே, காணாமற்போனவர்கள் தொடர்பில் நியாயமான ஆய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையிலான தேசிய பொறிமுறையே அவசியமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)யின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள செயலாளர் நாயகம், காணாமற்போனவர்கள் தொடர்பில் ஜனாதிபதிஆணைக் குழு அமைக்கப்பட்டு, காணாமற்போனவர்களின் உறவுகளின் சாட்சியங்கள் பெறப்பட்டுள்ளன. மேலும் பெறப்படுகின்றன. இந்த ஆணைக்குழு தொடர்பில் எமது நிலைப்பாட்டினை நாம் ஏற்கெனவே முன் வைத்துள்ளோம். இங்கு முன்வைக்கப்பட்டுள்ளதும், முன்வைக்கப்படுகின்றதுமான சாட்சியங்கள் தொடர்பில் பக்க சார்பற்ற வகையிலான முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதை நான் கடந்த 13ஆம் திகதி நாடாளுமன்றத்திலும் வலியுறுத்தியுள்ளேன்.

இங்கு சாட்சியங்களை வழங்கியுள்ள ஒரு சாரார், அறியாமைகள் காரணமாகவும், தூண்டப்பட்ட நிலைகளிலும், சுய தேவைகள் நிமித்தமும் சாட்சியங்களை வழங்கியுள்ளதாக சந்தேகங்கள் எழுந்துள்ளன. இந்த சந்தேகம் எமக்கு மட்டுமல்ல, பலருக்கும் உண்டு.

இந்த சாட்சியங்கள் முறையாக ஆராயப்பட்டதன் பின்னர், உண்மைகள் பகிரங்கப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு உண்மை என உறுதிப்படுத்தப்படுகின்ற சம்பவங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு நியாயமான பரிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். இதற்கமைவாக தேசிய பொறிமுறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டும் என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## யாழ்.நீதிமன்ற தாக்குதல்; 3 நபர்களுக்கு பிடியாணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதி மன்றக் கட்டடத் தொகுதி மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் மூன்று சந்தேக நபர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்களுக்கே யாழ். நீதவான் எஸ். சதீஸ்தரன் நேற்று இந்த பிடியாணை உத்தரவை பிறப்பித்துள்ளார்.

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது சம்பவத்துடன் தொடர்புடைய 72 சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

எனினும் 65,66 மற்றும் 67 ஆம் இலக்க சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலையாகவில்லை.

நேற்றைய விசாரணைகளை அடுத்து குறித்த 3 சந்தேகநபர்களுக்கும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதுடன் அடுத்த விசாரணையின் போது அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் எனவும் நீதவான் எஸ்.சதீஸ்தரன் உத்தர விட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜுன் 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (செ-12)

# வரதட்சணை முறையை இரத்து செய்ய வேண்டும்

## ஜே.வி.பி.கோரிக்கை

இலங்கையில் திருமணங்களின் போது வரதட்சணை முறைமை முற்று முழுதாக இரத்து செய்யப்பட வேண்டுமெனவும், இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பினை இல்லாமல் செய்யும் எக்டா ஒப்பந்தம் கைச்சாத்திடப்படக் கூடாது எனவும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இளைஞர்,யுவதிகள் எதிர்நோக்கி வரும் கல்வி, தொழில் இல்லா பிரச்சினையுடன் காதல் பிரச்சினையும் காணப்படுகின்றது.

பணம் இல்லாமல் திருமணம் செய்து கொள்ள முடியாது. பாரியளவில் பணத்தைச் செலவழித்தே திருமணம் செய்து கொள்ள வேண்டியுள்ளது.

21 ஆம் நூற்றாண்டு பற்றி பேசினாலும் இன்னமும் நாட்டில் வரதட்சணை முறைமை காணப்படுகின்றது.

வரதட்சணை காரணமாக இளைஞர், யுவதிகள் பெரும் அழுத்தங்களை எதிர நோக்கி வருகின்றனர்.

எனவே வரதட்சணை முறைமையை இரத்துச் செய்யுமாறு கோருகின்றேன்.

வரதட்சணை பெற்றுக் கொள்வது வெட்கம்கெட்ட செயலாகும் என பிமல் ரட்நாயக்க மேலும் தெரிவித்தார். (இ)

## இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யத் தீர்மானம்

இலங்கையிலிருந்து அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியா, கென்யா மற்றும் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் இலங்கையின் அரிசியை கொள்வனவு செய்ய இணக்கம் தெரிவித்துள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் எம்.பீ. திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

சுமார் 30 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியினை உலக உணவுத் திட்டத்தின் ஊடாக அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு இலட்சம் மெற்றிக்தொன் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் எம்.பீ.திஸாநாயக்க சுட்டிக்காட்டினார். (இ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அந்தவகையில் 17.02.2016 புதன்கிழமை யாழ்.பிரதேசத்தில் அம்பலவாணர் வீதி, உடுவில் பிரதேச செயலக வீதி, சபாபதிப்பிள்ளை வீதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல்தோட்டம் கிராமம் ஆகிய இடத்திலும மன்னார் பிரதேசத்தில் தாராபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



பெண்களின் முன்னேற்றம் என்ற பெயரில் அவர்களை சீதை- இலட்சியத்திலிருந்து விலகச் செய்தால் அந்த முயற்சிகள் தோல்வியையே தழுவும். அதையே நாம் அனுதினமும் கண்டு வருகிறோம். சீதையின் அடியொற்றியே நம் பெண்கள் வளரவேண்டும், முன்னேற வேண்டும். அது ஒன்றே வழி.

ஏழையிடமும் பலவீனரிடமும் நோயுற்றோரிடமும் சிவபெருமானைக் காண்பவனே உண்மையில் சிவபெருமானை வழிபடுகிறான்.

என் சகோதரர்களே, நாம் எல்லோரும் கடுமையாக உழைப்போம். தூங்குவதற்கு இது நேரமில்லை. எதிர்காலம் நம்முடைய உழைப்பைப் பொறுத்தே அமையப் போகிறது.

ஆன்மாவின் இயல்பை அறியும்போது சிறிதும் வலிமையற்றவர்களுக்கும் மிகவும் இழிவானவர்களுக்கும் மிகவும் துன்பப்படும் பாவிகளுக்கும்கூட நம்பிக்கை வருகிறது.

ஓர் உயரிய இலட்சியத்தை மேற்கொள்வதும் அதற்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணிப்பதும் ஒரு மகத்தான காரியமாகும்.

நமது மதம்தான் உண்மையான மதம். ஏனெனில் கடவுள் ஒருவரே உண்மையானவர், இந்த உலகம் பொய்யானது, க்ஷணம் தோன்றி மறைவது, உங்கள் காசு பணமெல்லாம் தூசியைத் தவிர வேறல்ல, அதிகாரமெல்லாம் வரம்பிற்குட்பட்டது, வாழ்க்கை பலநேரங்களில் தீமையாகவே இருக்கிறது என்று அது கூறுகிறது. எனவே தான் நமது மதம் உண்மையானது.

### விக்ரம், ராஜன், கங்கு வெற்றிக்கிண்ணம்

# ஜொலிஸ்ரார் அணியை வீழ்த்தி யாழ். பல்கலை.2வது வெற்றி



விக்ரம்,ராஜன் கங்கு வெற்றிக் கிண்ணத்திற்காக கொக்குவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடத்தி வரும் 30பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் 3 ஆவது தகுதிகாண் போட்டி கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி,ஜொலிஸ்ரார் அணியை 2விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தனது 2 ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 21 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 113 ஓட்டங்களை பெற்றனர்.மதூஸன்-13,கல்கோவன்-13,ரஜீகன்-19, பவன்-12,பகீரதன் ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களைபெற்றனர்.

களத்தடுப்பில் யாழ்.பல்கலைக் கழக அணியை சார்ந்த தரணி தரன்-02,அனுராஜ்-02,விதூஸன்-02, டிக்ஸன்-01 குருகுலசூரிய-02 இலக்குகளை கைப்பற்றினர்.114 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய யாழ்.பல்கலைக்கழக அணி 25.3 ஓவர்களில் 8இலக்குகளை இழந்து 114 ஓட்டங்களை பெற்றனர்.தனஞ்ஜயன்-30, விதுஸ்-29,வைகுந்தன் ஆட்டமிழக்காது 12 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் ஜொலிஸ்ரார் அணியை சார்ந்த பவன்-02,குகாநந்தன்-03,மதூஸன்-02 இலக்குகளை கைப்பற்றினர்.இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம்ஆண்டில் இருந்துதொடர்ந்து 7வருடங்களாக நடத்தி வருகின்ற யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வுக்கு (தரவரிசை) யாழ். பல்கலைக்கழக அணி 5.34 புள்ளிகளையும் ஜொலிஸ்ரார் அணி 1.93 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர். (க)

# கமலாவதி ஞாபகார்த்த காற்பந்தாட்டத் தொடர்

கமலாவதி சந்திரகாந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான காற்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயமும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து வருடா வருடம் நடத்தும் உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியையும் உப அதிபருமான கமலாவதி சந்திரகாந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான வடக்கு மாகாண பாடசாலைகளின் 20 வயதுப் பிரிவினருக்கான விலகல் முறையிலான காற்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 25, 26 , 27 ஆம் திகதிகளில் கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தொடரில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் நிர்வாகத்துடனோ அல்லது கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க நிர்வாகத்துடனோ தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். தொடர்புகளுக்கு 077 926 5259, 077 393 1446. (க)

# கரப்பந்தாட்ட போட்டி; புதிய பாரதி வெற்றி






கிளிநொச்சி கரைச்சி பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட போட்டி பிரபா தலைமையில் கிளிநொச்சி ஆதவன் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மிக விறுவிறுப்பாக இடம்பெற்ற இப் போட்டியில் பாரதிபுரத்தை சேர்ந்த புதிய பாரதி அணியும் வட்டக்கச்சியை சேர்ந்த குறிஞ்சி அணியும் இறுதியாட்டத்தில் மோதினர். இரு அணிகளும் ஆக்ரோசமாக ஆடினர். இறுதியில் 25:20, 25:23 எனும் புள்ளி வித்தியாசத்தில் புதிய பாரதி அணி வெற்றி பெற்றது.

தொடர்ச்சியாக 4 வருடங்க ளாக சம்பியனாக தெரிவாகியது குறிப்பிடத்தக்கது. (க-31)





ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. தீவக கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்) ச.பாஸ்கரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நிகழ்வினை படங்களில் காணலாம்

# இன்றைய போட்டிகள்

இலங்கை காற்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கொத்மலை சொக்ஸ் கிண்ணத்துக்கான காற்பந்தாட்டத் தொடரில் அரையிறுதி ஆட்டம் இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பு குதிரைச் சவாரித் திடலில் இடம்பெறவுள்ளது.

இப் போட்டியில்இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து களுத்துறை திருச் சிலுவைக்கல்லூரி அணி மோதவுள்ளது.(க)

→ → → → → → → → → → →

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 3.30மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சிறி அம்பாள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரணவாய் மத்தி விளையாட்டுக்கழகமும்

மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 3.30மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மனோகரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)



# சித்திரை புத்தாண்டை முன்னிட்டு தாச்சி சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

வடமாகாணவிளையாட்டுத்திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் 2016 ஆம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தாச்சிச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

மேற்படி தாச்சி சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகத்திடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப் போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

போட்டியானது ஒழுங்கு அட்டவணை பிரகாரம் நடைபெறுவதோடு இறுதிப்போட்டியானது சித்திரைப்புத்தாண்டு தினத்தன்று நடைபெறும்.

தொடர்புக்கு தலைவர் செ.சண்முகலிங்கன் 077 185 3409 செயலாளர் 077 817 5763 (க)

# ஜனாதிபதி...



க்குச் சொந்தமான கியு.ஆர 655 விமானத்தில் நாட்டிலிருந்து புறப்பட்டார்.

ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மர்கல் அவர்களின் அழைப்பின்பேரில் இலங்கைக்கும் ஜேர்மனிக்குமிடையில் பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பினை மேம்படுத்தும் நோக்கில் ஜேர்மனி விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இவ்விஜயத்தின் மூலம் இலங்கைக்கு பல்வேறு பொருளாதார மற்றும் அபிவிருத்தி அனுகூலங்களை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜேர்மனிக்கு வருகை தரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வரவேற் பதற்கான ஒரு விசேட வைபவம் ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மர்கல் அவர்களின் தலைமையில் 17ஆம் திகதி முற்பகல் இடம்பெறவுள்ளதுடன், ஜனாதிபதி அவர்களுக்காக ஜேர்மன் அரசு விசேட அணிவகுப்பு மரியாதையினை செலுத்தவுள்ளது.

ஜேர்மனி பாராளுமன்றத்திற்கு செல்லவுள்ள ஜனாதிபதி, ஜேர்மனி பாராளுமன்றத்தின் முக்கிய பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளார்.

இவ்விஜயத்தின்போது ஜனாதிபதி ஜேர்மனி வெளிநாட்டமைச்சர் மற்றும் ஜேர்மனியின் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் ஆகியோரை சந்தித்து இரண்டு நாடுகளினதும் பொருளாதார ஒத்துழைப்பினை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக விரிவான கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

ஜேர்மனிக்கான தனது மூன்று நாள் விஜயத்தை பூர்த்தி செய்யும் ஜனாதிபதி 19 ஆம் திகதி ஒஸ்ரியா நோக்கி பயணமாகவுள்ளார்.

ஒஸ்ரியாவுக்கான தனது இரண்டுநாள் விஜயத்தின்போது ஒஸ்ரிய ஜனாதிபதி ஹெயின்ஸ் பிஸ்கர் உள்ளிட்ட அந்நாட்டு முக்கிய பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

அவ்வாறே ஜனாதிபதி ஒஸ்ரிய வர்த்தக சங்கத்தினரையும் சந்திக்கவுள்ளார். (செ-11)

# 49 நபர்களே...

இதில் சிலர் கட்சி மற்றும் அமைப்பு ரீதியில் குழுக்களாக வருகை தந்து தமது கருத்துக்களை பதிவு செய்துள்ளனர். எனினும் ஏனைய மாவட்டங்களை விட யாழ்.மாவட்டத்திலே அதிகளவானோர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை பதிவு செய்துள்ளதாக அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான பொதுமக்களின் யோசனைகளை அறியும் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான பொதுமக்களின் யோசனைகளை அறியும் குழுவின் முதலாம் நாள் அமர்வு நேற்று யாழ் மாவட்டச்செயலக கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணிவரை நடைபெற்றது.

லால் விஜேநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில் எஸ். தவராசா, எஸ். விஜேசந்திரன்,என். செல்வகுமாரன், குமுது குசும் குமார, ஹரினி அமரசூரிய,உபிள் அபேரத்ன,சுனில் ஜெயரட்ன உள்ளிட்ட 8 பேர் கொண்டகுழுவினர் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பில் மக்களிடமிருந்து வாய்மொழி மற்றும் எழுத்து மூலச் சமர்ப்பணங்களை பெற்றுக் கொண்டனர்.

இக் குழுவினர் மதியத்துக்கு பின்னர் 2 குழுக்களாக பிரிந்து பொதுமக்களின் கருத்துக்களை வாய்மொழி மூலமும் எழுத்து மூலமும் பதிவு செய்து கொண்டனர். அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான பொதுமக்களின் யோசனைகளை அறியும் குழுவின் 2 ஆம் நாள் அமர்வு இன்று காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (செ-9)

# நிபொன்மரு...

பல்வேறு நாடுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தி நிபொன்மரு கப்பலில் வருகை தந்திருக்கும் இளைஞர், யுவதிகளை சந்தித்து அவர்களுடன் சமுகமாகக் கலந்துரையாடி ஜனாதிபதி அவர்களது சுற்றுப்பயண அனுபவங்கள் குறித்து கேட்டறிந்தார்.

ஒரு வருட காலமாக உலகெங்கிலுமுள்ள 200க்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளுடன் இனங்களுக்கிடையே ஐக்கியம், ஒத்துழைப்பு, நட்பை எடுத்துக் கொண்டு உலக நாடுகளுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் ஜப்பான நாட்டின் நிபொன்மரு கப்பல் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

28ஆவது தடவையாக உலக சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டிருக்கும் நிபொன்மரு கப்பல் கடந்த ஜனவரி 28ஆம் திகதி ஜப்பானின் யோகோஹோமா துறைமுகத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்ததோடு, இந்த சுற்றுப் பயணத்தில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 12 இளைஞர், யுவதிகள் பங்குபற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

ஜப்பான், இலங்கை உட்பட 11 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 243 இளம் தலைவர்கள் இம்முறை சுற்றுப் பயணத்தில் இணைந்து கொண்டுள்ளதுடன், இக்கப்பல் பெப்ரவரி 17ஆம் திகதிவரை கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும்.

பல்வேறு நாடுகளின் கலாசாரங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், இனங்களுக்கிடையிலான உறவுகளை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக ஜப்பான் நாட்டின் பிரதமர் அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்படும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் இலங்கை நாட்டை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

நிபொன்மரு உலகச்சுற்றுலா இம்மாதம் 29 ஆம் திகதி ஜப்பானில் யோகோஹோமா துறைமுகத்தில் நிறைவுபெறவுள்ளது. (செ-12)

# ஒன்றிணைந்த...

அரசியல் தீர்வு திட்ட யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. தந்தை செல்வா காலம் முதற்கொண்டு தமிழ் மக்கள சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வையே வலியுறுத்தி வருகின்றனர். எனினும் தமிழ் மக்களுடைய கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு காலம் காலமாக வருகின்ற சிங்கள ஆட்சியாளர்களால் மறுக்கப்பட்டு வருகின்றது.

காணி, பொலிஸ் அதிகாரம் கொண்ட வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபை அலகு கொண்ட முறைமையே எமக்கு வேண்டும். முதலமைச்சர் நிதியமானது அதிகாரங்களுடன் ஆரம்பிக்கப்படல் வேண்டும். மத்திய அரசினால் நியமிக்கப்படுகின்ற எந்த ஆளுநரும் மாகாணங்களின் அதிகாரங்களில் தலையீடு செய்யக்கூடாது.

வடக்கு கிழக்கு இணைப்பினையே தமிழ் மக்கள் அதிகம் விரும்புகின்றனர். இதனையே கடந்த காலங்களில் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் நிரூபித்தும் வருகின்றன. வடகிழக்கு இணைப்பு தொடர்பில் மாற்றுக்கருத்துக்கள் இருக்குமாயின் தற்போது பிரிந்துள்ள இரு மாகாணங்களில் தனித்தனியாக பொது மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தல் வேண்டும்.

எமது நிலங்கள் தற்போது சிங்கள மயமாக்கப்பட்டு வருவதால் முதலில் எமது தாயகத்தின் எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யபடல் வேண்டும். சிங்கள குடியேற்றம், காணி அபகரிப்பு என்பவற்றால் எமது தாயகம் குறுக்கப்பட்டு செல்கின்றன. ஆகையால் வடகிழக்கு இணைப்புக்கு முன்னதாக எல்லை மீள் நிர்ணயம் கட்டாயம் வேண்டும்.

முதலில் நாங்கள் நோயினை அறிய வேண்டும். அதன் பின்பு நோயின் தன்மையை அறிய வேண்டும். இதன் பின்னரே மருந்திட வேண்டும். வரலாற்றில் என்ன தமிழ் தரப்பில் கோரப்பட்டது, அவர்களது கோரிக்கை கள் என்ன என்பவை தொடர்பில் ஆராயப்படல் வேண்டும். இதன் மூலமே தமிழ் மக்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வினை வழங்க முடியும்.

வடகிழக்கில் உள்ள போர் வெற்றி சின்னங்கள் அகற்றப்பட வேண்டும். பௌத்த மதத்தினை சிறுபான்மை மக்கள் மீது அடக்குமுறை மேற்கொள்வதற்கு பயன்படுத்துவதை உடன் நிறுத்த வேண்டும். மேலும் மலிவான அரசியல் தேவைகளுக்கும் பௌத்தம் பயன்படுத்தப்படுவது புதிய அரசியல் அமைப்பின் மூலம் தடைசெய்யப்படல் வேண்டும்.

நாடு மதசார்பின்மையை நோக்கி முன்னேற வேண்டும், படைகள் என்ற கட்டமைப்பை விட மக்களுக்கே முன்னுரிமை என்ற ஒழுங்கு கொண்டுவரப்படல் வேண்டும். தமிழ் பெண்கள் எமது விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்திருந்த போதிலும் தமிழ் தேசிய அரசியலில் ஆண்களே தலைமை வகிக்கின்றனர். இந்த நிலை மாற்றப்படல் வேண்டும்.

இந்த நிலைதான் நாடு முழுவதும் உள்ளது. உள்ளூராட்சி தேர்தல்களில் கட்டாயம் முப்பது வீதம் பெண்கள் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு உள்ள போதிலும், அது எந்தளவிற்கு பின் பற்றப்படுகின்றன என்பது சந்தேகமே, குறிப்பாக இவ்வாறான அதிகாரம் குறைந்த இடங்களிலேயே சமத்துவம் பற்றி காலம் காலமாக வருகின்ற அரசுகளினால் பேசப்படுகின்றன.

நாட்டின் மீ உயர் அதிகாரம் கொண்ட பாராளுமன்றத்திலும் பெண்கள் பிரதிநிதித்துவம் ஐம்பது வீதமாக அதிகரிக்கப்படல் வேண்டும். மொழியை பொறுத்தமட்டில் தமிழ் மொழி அரச கரும மொழியாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்படல் வேண்டும். இந்த சட்டம் அமுல்படுத்தப்பட்டு உள்ள போதிலும் நடைமுறையில் பின்பற்றப்படுவதில்லை . இதனை மீறுபவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேசிய கீதத்தை பொறுத்தமட்டில் தமிழ் பிரதேசங்களில் அனைத்து அரச கரும நிகழ்வுகளிலும், நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழ் தேசிய கீதமும் முடிவில் சிங்களத்திலும் தேசிய கீதம் இசைக்கப்படல் வேண்டும். இதேபோல் சிங்கள பிரதேசத்தில் நிகழ்வின் ஆரம்பத்தில் சிங்களத்திலும் முடிவில் தமிழிலும் தேசிய கீதம் கட்டாயம் இசைக்கப்படல் வேண்டும் என்ற சட்டமூலம் புதிய அரசியல் அமைப்பில் கொண்டுவரப்படல் வேண்டும்.

எமது தலைவர் செல்வநாயகம் சமஷ்டியை விரும்பி மக்கள் ஆணையை பெற்றார். இதனை முன்னாள் ஜனாதிபதி பண்டார நாயக்க ஏற்றுக்கொண்டார். இதன் பின்னர் வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன சமஷ்டியை மறுத்தார். தற்போது மீண்டும் தமிழ் மக்களினால் சமஷ்டி கோரப்படுகிறது. ஆகையால் எமக்கான தீர்வு சமஷ்டி மூலமே வழங்கப்பட முடியும் என தமது கருத்துக்களை ஆணித்தரமாக முன்வைத்தனர். (செ-4)

# மாணவர்களின் சீருடையை வெட்டிய ஆசிரியரின் செயல் கண்டனத்துக்குரியது

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தேசிய பாடசாலையான வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தில் ஒழுக்கத்துக்குப் பொறுப்பான நியமிக்கப்பட்ட உடற்கல்வி ஆசிரியர் மாகாணப் பாடசாலையைச் சார்ந்தவர்.

அவரை தேசிய பாடசாலையில் வைத்திருந்தமை மட்டுமன்றி கடந்த வருடம் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அனுப்பிய சுற்றுநிருபத்தின்படி அவருக்கு மாகாண பாடசாலைக்கு இடமாற்றம் கொடுத்த போதிலும் அதை ஏற்க அவர் மறுத்துள்ளமை கண்டனத்துக்குரியது.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறித்த ஆசிரியர் மாணவர்களின் சீருடைகளை தாறுமாறாக வெட்டியுள்ளார்.

இதுதொடர்பில் பெற்றோர்கள் வேதனையடைந்துள்ளனர்.

இந்நிலையில் இந்த ஆசிரியருக்கு வெளியிலுள்ள சிலர் ஆதரவு வழங்குவதால் மாணவர்களின் கல்வி பாதிப்படையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய செயல் கண்டனத்துக்குரியது என்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ந)

# மாவீரர்களை...

பான பொது மக்களின் யோசனைகளை அறியும் குழுவின் முதலாம் நாள் அமர்வு நேற்று யாழ் மாவட்டச் செயலககேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு தமதுகருத்துக்களை முன்வைக்கும் போதே பலர் இக் கருத்தை முன்வைத்துள்ளனர்.

எமது இனத்தின் விடிவுக்காக போராடி தமது உயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகூரும் உரிமை தமிழ் மக்களாகிய எம் ஒவ்வொருவருக்கும் உண்டு. எமக்காக மரணித்த அனைவரையும் அவர்கள் பொதுமக்களாக இருக்கலாம் போராளிகளாக இருக்கலாம் தற்போது அவர்கள் உயிருடன் இல்லை. அதற்காக அவர்களை எம்மால் மறந்து விட முடியாது. எம்மிடம் இருந்து பிரித்துவிடவும்முடியாது. அவர்களுடைய தியாகங்களை மதித்து அவர்களை நினைவு கூருகின்ற உரிமை எமக்கு சட்டத்தின் அனுமதியுடன் வழங்கப்பட வேண்டும்.

எனவே புதிய அரசியலமைப்பு சட்டத்தில் இந்த விடயம் உள்வாங்கப்படுவதோடு எமது தாயகம் தேசியம் சுயநிர்ணயம் வடக்கு கிழக்கு இணைந்த ஒரேதேசத்தில் எமது தீர்மானங்கள் அதிகாரங்கள் அனைத்தையும் நாமே தெரிவுசெய்து நெறிப்படுத்துதல் போன்ற விடயங்கள் உள்வாங்கப்பட்டு சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என தமது கருத்துக்களை பதிவு செய்துள்ளனர். (செ-9)

# 9ஆவது தேசிய...

த்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறும் தேசிய சாரண நிகழ்வானது எதிர்வரும் 22 ஆம் திகதி பிரதான சாரணரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலும் கல்வி அமைச்சர் அகில விராஜ காரியவசம், வட மாகாண ஆளுநர், வட மாகாண முதலமைச்சர் மற்றும் வட மாகாண கல்வி அமைச்சர் ஆகியோரின் பங்களிப்புடன் யாழ்.நகரில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டு நூறுவருடம் பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் 23ஆம் திகதி யாழ்.மாவட்ட நூற்றாண்டு விசேட நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஜம்போறியை பார்வையிடுவதற்காக 23, 24, 25 ஆகிய தினங்களில் காலை 10 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை பொது மக்களுக்கு திறந்து வைக்கப்படும். ஒவ்வொரு நாளும் மாலை 6 மணிக்கு விசேட கலை நிகழ்வுகளும் இடம்பெறும். சாரணர் ஆணையாளர்களின் விசேட கமிட்டியின் மூலம் இந்த ஜம்போறி நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (செ-11)

# மின்சார...

மின்சார நாற்காலிக்கு அனுப்புவதை விட மனரீதியாக கொடுக்கப்படும் அழுத்தங்கள் அதிகமானது.

மின்சார நாற்காலிக்கு கொண்டு சென்றது போல்தான் இதுவும். அது ஒரு முறை தான் இது வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும் தண்டனை. நான் யாருக்கும் துரோகி அல்ல. ஆனால் என்னுடன் முன்னர் இருந்தவர்கள் துரோகிகள் ஆகிவிட்டனர்.

இதற்காக ஒரு போதும் நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு துரோகம் செய்ய மாட்டேன்.

கட்சிக்கு வாக்களித்த 58 லட்சம் வாக்காளர்களுக்கும் நான் துரோகியாகவில்லை. அதற்கு பிறகு வாக்களித்த 48 லட்சம் வாக்காளர்களுக்கும் நான் துரோகியாகவில்லை. ஆனால் துரோகியர்னது யார் என்பதே கேள்வி? இன்று என் குடும்பத்தினரையும், கட்சி உறுப்பினர்களையும் பழிவாங்குகின்றார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்த அரசாங்கத்தில். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து கொண்டு இருக்கின்றது. அந்த கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இது எந்த அரசியல் அமைப்பு? வலுவிழந்த எதிர்க்கட்சியினர் டொஸ் பந்துகளை வீசுகின்றனர். அவர்கள் சங்கக்காரவை போல சிக்ஸர்களை அடிக்கின்றார். இதனால் மக்கள் தற்போது புதிய கட்சி ஒன்றை கோரியுள்ளதுடன் அதற்கு தலைவரை தேடிக் கொண்டிருக்கின்றனர் என மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# அடுத்த வாரம்...

நர்கொழும்பு கொச்சிக்கடை பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டலில் சந்திப்பொன்றை நடத்தியிருந்தனர்.

இச் சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பலரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் மகிந்த ஆதரவு அணியினரும் கலந்து கொண்டனர். இந்த சந்திப்பின் போது எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தாம் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பிலும் புதிய பயணத்தில் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளின் ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய மகிந்த ராஜபக்ஷ,

எனது குடும்பத்தை தண்டிக்கவும் எனது ஆதரவாளர்களை பழிவாங்கவுமே நிதிக்குற்றப் புலனாய்வு பிரிவை அலரிமாளிகையில் இருந்து இயக்கி வருகின்றனர். புலனாய்வு பிரிவிற்கான பொலிஸ் மா அதிபராக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க செயற்பட்டு வருகிறார். நிதிக்குற்றப்புலனாய்வு விசாரணைப்பட்டியலில் எனது குடும்ப உறுப்பினர்களே முன்னணியில் உள்ளனர்.

பாராளுமன்றத்தில் தெரிவித்துவிட்டு அடுத்த ஒரு கிழமையில் குறித்த நபரை கைதுசெய்யும் நிலைமை காணப்படுகிறது. அனேகமாக அடுத்த வாரமளவில் எனது புதல்வர் நாமல் ராஜபக்ஷவைக்கூட கைதுசெய்ய வாய்ப்புகள் உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய விதத்தில் உயிரிழந்த ரக்பி வீரர் தாஜீடீனின் மரணம் தொடர்பில் நாமல் ராஜபக்ஷ மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை தெரிந்ததே. (செ-12)

# சர்வதேச விசா...

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டம் ஒன்று கொச்சிக்கடையில் நடைபெற்றது. இதில் ஆயிரத்து 400 உள்ளூராட்சி சபை ஊழியர்கள் கலந்துகொண்டுள்ளதாக வெளிவந்த தகவல்கள் பொய்யானது.

551 உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும், கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்த சில உறுப்பினர்களுமே இங்கு நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

ஆனால் பெருந்திரளான உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டுள்ளதாக ஊடகங்களில் வெளிவந்த தகவல்கள் பொய்யானவை. பொலநறுவை மாவட்டத்திலிருந்து 7 உள்ளூராட்சி சபை ஊழியர்கள் தமக்கு சார்பானவர்கள் என மகிந்த கூறிவந்த தகவல்களும் பொய்யானவையே.

இதுமட்டுமின்றி இந்த அரசாங்கம் சர்வதேசத்திற்கு நாட்டை காட்டிக்கொடுப்பதற்கு தீர்மானம் எடுத்துள்ளதாகவும், இராணுவம் தவறிழைத்துள்ளதாக சர்வதேச விசாரணைகளில் உறுதிபடுத்துவதற்கும் அரசு முயற்சிப்பதாக மகிந்த ராஜபக்ஷ அங்கு நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

ஆனால் அவர் ஒன்றை மறந்து விட்டார். நாட்டிற்குள் முதன்முதலாக சர்வதேச விசாரணைகள் வந்ததும், மனித உரிமை மீறல்கள பற்றி சர்வதேசம் பேசியதும் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலேயே ஆகும்.

பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட போது, மகிந்த மற்றும் பான் கீ மூன் இருவரும் ஒன்றிணைந்து ஊடக அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தனர். இதன் பிறகே இலங்கையில் மனித உரிமை மீறப்பட்டதாக சர்வதேசத்தில் பேசப்பட்டது என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார். (செ-12)







வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532


# தமிழ் மொழி...

பட்ட அரசகரும மொழிக்கொள்கை தொடர்பான அறிவுறுத்தல் கருத்தரங்கில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அமைச்சர் மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மொழி பிரச்சினை தீர்வுக்கான கொள்கை என்பது கையில் உள்ள குருவியாகும். தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்கான கொள்கை என்பது மரத்தில் உள்ள குருவியாகும். எனது கையில் மூன்று குருவிகள் உள்ளன. ஒன்று, அரசகரும மொழி ஆணைக்குழு ஆகும். இரண்டாவது அரச கரும மொழி திணைக்களம் ஆகும். மூன்றாவது தேசிய மொழி பயிலகம் ஆகும். இந்த மூன்றும் என் கையில் உள்ள மூன்று குருவிகள் ஆகும்.

தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்கான குருவி மரத்தில் இருப்பதாக சொல்லப்படுகிறது. அதுபற்றி இன்னமும் தெளிவில்லை. ஆகவே முதலில் கையில் இருக்கும் குருவியை பயன்படுத்துவோம். அதை பயன்படுத்த முடியாவிட்டால் மரத்தில் இருப்பதாக சொல்லப்படும் குருவியை பற்றி பேசிப்பயனில்லை. அதாவது மொழியுரிமை கொள்கையை அமுல்செய்து தமிழ்மொழி பேசும் மக்களின் இதயங்களை வெல்ல வேண்டும். ஐந்து மாதங்களுக்கு முன் எனக்கு இந்த அமைச்சு கிடைத்த போது இந்த அமைச்சு ஒரு செயற்படாத அமைச்சாகத்தான் கிடைத்தது.

கடந்த ஜனவரி முதல் செப்ரெம்பர் வரை இந்த அமைச்சுக்கு ஒரு அமைச்சர் இருக்கவில்லை. நான் இங்கே வந்து இப்போது மெதுவாக இந்த அமைச்சை உருமாற்றிக் கொண்டு இருக்கின்றேன். இதன் பலாபலன்கள் விரைவில் தெரிய வரும். கடந்த காலங்களில் தமிழ் பிரதேச மேடைகளில் ஏறி சில வசனாங்களை தமிழ் மொழியில் பேசியவர்கள் இன்று தமிழ் மொழியில் பாடப்பட்ட தேசிய கீதத்தை எதிர்க்கிறார்கள். அதாவது தமிழ் மொழி பாவனையை எதிர்க்கிறார்கள்.

ஆனால், தமிழ் இந்து கடவுள்களான விஷ்ணுவையும், காளியம்மனையும் தேடிச சென்று தேங்காய் அடிக்கிறார்கள். அதுவும் திருட்டு தேங்காய் உடைக்கிறார்கள். அதாவது தமிழ் மொழி வேண்டாம், தமிழ் கடவுள்கள் வேண்டும் என்பது இவர்களது கொள்கை. என்ன, கோமாளி கொள்கையோ, அந்த விஷ்ணுவுக்கும், காளியம்மனுக்கும்தான் வெளிச்சம். இந்த நாட்டில் இப்போது, இந்த கொழும்பு பிரதேச செயலக பிரிவு உட்பட 41 உதவி பிரதேச செயலக பிரிவுகள், இருமொழி பிரதேச செயலக பிரிவுகளாக சட்டப்படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

இந்த எண்ணிக்கையை விரைவில் 72 ஆக உயர்த்த உள்ளேன். இந்த பிரிவுகளில் பணி புரிய எதிர்காலத்தில் நியமனம் பெறும் அனைத்து அரச பணியாளர்களும் இரு மொழி தகைமை இருந்தால் மட்டுமே வேலைக்கு அமர்தப்பட வேண்டும் என்ற ஒரு அமைச்சரவை பத்திரத்தை விரைவில் சமர்ப்பிக்க உள்ளேன். அதன்பிறகு ஒரு மொழி அறிவு கொண்டவர்களை விட, இருமொழி கற்றவர்களுக்கு இந்த பிரதேச செயலக பிரிவுகளில் அரசு பணி நியமனம் கிடைக்க வாய்ப்பு அதிகரிக்கும்.

எனது அமைச்சின் கீழ் வரும் தேசிய மொழி பயிலகத்தை சிங்களம், தமிழ், ஆங்கிலம் பயிற்றுவிக்கும் ஒரு தேசிய மொழி கல்லூரியாக தரமுயர்த்த முடிவு செய்துள்ளேன். இந்த பிரதேச செயலக பிரிவுகளில் நியமனம் பெறும் சிங்களம் பேசுவோர் தமிழையும், தமிழ் பேசுவோர் சிங்களத்தையும் கற்று இருக்க வேண்டும். இப்போது இருப்பது போல் அரச பணிக்கு வந்த பிறகு இரண்டாம் மொழி கற்கும் விளையாட்டு வேண்டாம்.

மேலும் அரச பணி நியமனம் கிடைத்து விட்டால் அப்புறம் மொழியை படிப்பதில் இந்த அரச பணியாளர்கள் பெரும் அக்கறை காட்டுவதில்லை என்றார் மனோ கணேசன். (செ-11)

# பிக்கப் - மோ...

விசுவமடுவிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் பரந்தனிலிருந்து விசுவமடு நோக்கி பயணித்த மகேந்திரா பிக்கப் வாகனமும் பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சிவில் பாதுகாப்பு திணைக் களத்தைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் அவருடன் பின்னால் அமர்ந்திருந்து பயணித்த மற்றுமொரு முன்பள்ளி ஆசிரியர் ஒருவரும் காயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.10 மணியளவில் பரந்தன்-முல்லை வீதியில் 18ஆவது -19ஆவது மைல் கல்லுகளுக்கு இடைப்பட்ட 123ஆம் கட்டை விசுவமடு பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

இதில் கிளிநொச்சி ஆனந்தபுரத்தைச் சேர்ந்தவரும் அம்பாள்குளம் கலைமகள் முன்பள்ளி ஆசிரியையுமான சிவபாலன் கஸ்தூரி (வயது-25) என்ற யுவதியே உயிரிழந்தவராவார்.

இவருடன் பயணித்த இல.20 புதுமுறிப்பு இயக்கச்சியைச் சேர்ந்த இராபேல் உசாநந்தினி (வயது-37) என்ற மற்றைய முன்பள்ளி ஆசிரியை காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் தெரியவருவதாவது,

விசுவமடுவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பங்கேற்றுவிட்டு கிளிநொச்சி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் பரந்தனிலிருந்து விசுவமடு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மகேந்திரா பிக்கப் வாகனமும் நேருக்குநேர் மோதியதில் இவ் விபத்துச் சம்பவித்துள்ளது. இதன்போது பிக்கப் வாகன சாரதி வாகனத்துடன் தப்பிச் சென்றுள்ளார்.

வீதியில் படுகாயங்களுக்கு இலக்காகி குற்றுயிராய் இருந்த ஆசிரியையையும் காயங்களுக்குள்ளான மற்றைய ஆசிரியையையும் வீதியால் பயணித்தவர்கள் மீட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்த போதும் பிரஸ்தாப ஆசிரியை வழியில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் அறிந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் அவ்விடத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில் விசுவமடு பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள் விரைந்து செயற்பட்டதில் கல்லூறு பிரதேசத்தில் வைத்து பிக்கப் வாக்னத்துடன் சாரதி மடக்கிப் பிடிக்கப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (செ-2-277-281-295-307)


BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months

(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

(அ-3754)

Batch 1 : 17.02.2016
Batch 2 : 19.02.2016
Batch 3 : 20.02.2016
Batch 4 : 22.02.2016

No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550

Hotlines
0770365728, 0777585913,
0777222422, 071429935

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.